# அறிமுகம்

வினா விடைப் போதனை தமிழ் கிறிஸ்தவ உலகிற்கு பெரும்பாலும் புதியது. ஆரம்ப கால மிஷனரிகளான வில்லியம் கேரி, சீகன்பால்கு போன்றோர் கீழைத்தேய நாடுகளில் அதை அறிமுகப்படுத்தியிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. இருந்தபோதும் திருச்சபைகளில் அவை நிலைகொள்ளவில்லை. இன்றைக்கு வாக்குத்தத்த வசனங்களும், தியானச் செய்திகளும் மட்டுமே திருச்சபைகளை அலங்கரித்து சத்தான போதனைகள் ஆத்துமாக்களை அடைய முடியாதபடி மறைக்கப்பட்டு வருகின்றன. இது திருச்சபையின் ஆத்தும வளர்ச்சிக்கு அறிகுறியாகாது. பல வருடங்களுக்கு முன்பாக சிறுவர்களுக்கான சிறிய வினா விடைப் போதனையை வெளியிட்டிருந்தோம். அதற்கு நல்ல வரவேற்பிருந்தது. பல சபைகள் அதை ஞாயிறு பாடசாலைகளிலும், கிறிஸ்தவர்கள் குடும்ப ஆராதனையிலும் பயன்படுத்திப் பலனடைந்தார்கள். அது தொடர்ந்தும் அச்சில் இருந்து வருகின்றது.

வினா விடைப் போதனை முறையை கர்த்தரின் திருச்சபை வரலாற்றில் அதிகம் பயன்படுத்தி வந்துள்ளது. சீர்திருத்தவாதியான மார்டின் லூதர் தன்னுடைய படைப்புக்கள் அனைத்திலும் தான் சிறுவர்களுக்காக எழுதிய வினா விடைப் போதனையையே மிகவும் முக்கியமானதாகக் கருதியுள்ளார். தான் எழுதிய அனைத்து நூல்களும் அழிந்துபோனாலும் வினா விடைப் போதனை பாதுகாக்கப்பட வேண்டுமென்று அவர் கருதினார். வினா விடைப் போதனை என்றவுடனேயே அது சிறுவர்களுக்கானது என்று எண்ணிவிடக்கூடாது. அந்த எண்ணமே நம்மில் பெரும்பாலானோருக்கு இருக்கிறது.

சிறுவர்களுக்கு மட்டுமல்லாமல் பெரியவர்களுக்காகவும் வினா விடைப் போதனைகள் இருக்கின்றன. பெரியவர்களுக்கான அருமையான வினா விடைப் போதனை நூல்களை வரலாறு நமக்குத் தந்திருக்கிறது.

பதினேழாம் நூற்றாண்டில் வெஸ்ட்மின்ஸ்டர் அசெம்பிளி கூடி திருச்சபையின் பாதுகாப்பிற்காக விசுவாச அறிக்கையைப் படைத்தனர். இதேபோன்று பாப்திஸ்துகளும் 1689 விசுவாச அறிக்கையை வெளியிட்டனர். வெஸ்ட்மின்ஸ்டர் குறுகிய வினா விடைப் போதனை, விரிவான வினா விடைப் போதனை ஆகியவற்றை வெஸ்ட்மின்ஸ்டர் அசெம்பிளி படைத்தது. விசுவாச அறிக்கை வேத சத்தியங்களை பல்வேறு தலைப்புகளில் தொகுத்து விளக்கமாக அளிக்க, அதே வேத சத்தியங்களை வினா விடை முறையில் தொகுத்து சுருக்கமாக அளித்தது வினா விடைப் போதனை. இந்த வெஸ்ட்மின்ஸ்டர் வினா விடைப் போதனையைப் பின்பற்றி ஒரு சில அவசியமான மாற்றங்களுடன் பாப்திஸ்துகள் சில வினா விடைப் போதனைகளை வெளியிட்டிருந்தனர். அவற்றில் முக்கியமானது பென்ஜமின் கீச் வெளியிட்ட (1693) வினா விடைப் போதனை. விசுவாச அறிக்கை மற்றும் வினா விடைப் போதனைகளின் அவசியத்தை வரலாற்றில் சீர்திருத்தவாத காலமும், பியூரிட்டன் காலப்பகுதியும் அதிகம் உணர்ந்திருந்தது. அதற்குப் பின்னைய காலப்பகுதியில் ஜொனத்தன் எட்வர்ட்ஸ், ஸ்பர்ஜன் போன்றோரும் அவற்றைத் திருச்சபைகளில் பயன்படுத்தியுள்ளனர். ரிச்சட் பெக்ஸ்டர் என்ற போதகர் தான் பணிபுரிந்த ஊரான கிடர்மின்ஸ்டரின் மக்கள் அனைவருக்கும் வினா விடைப் போதனையளித்து கர்த்தரை அறிந்துகொள்ளும்படிச் செய்துள்ளார். இது வரலாறு கூறும் உண்மை.

வெஸ்ட்மின்ஸ்டர் வினா விடைப் போதனையைப் பின்பற்றி காலத்துக்கு அவசியமான ஒரு சில மேலதிக வினா விடைகளுடனும், பாப்திஸ்து இறையியலைப் பிரதிபலிக்கும் முறையிலும் இந்த வினா விடைப் போதனையை திருச்சபைகளுக்கு உதவுமுகமாக சிம்ப்சன் வெளியீட்டாளர்கள் வெளியிட்டனர். வெஸ்ட்மின்ஸ்டர் சுருக்க வினா விடைப் போதனையை மட்டுமல்லாது விரிவான வினா விடைப்

*போதனையையும் பின்பற்றி மிகக் கவனத்துடன் இது தயாரித்து வெளியிடப்பட்டுள்ளது. தற்கால இறையியல் குழப்பங்களுக்கு தகுந்த பதிலளிக்கு முகமாக மேலதிகமாக சேர்க்கப்பட்டுள்ள வினா விடைகள் அமைகின்றன.*

*இறையியல் அறிஞர்களான தற்கால சீர்திருத்த பாப்திஸ்து போதகர்களான கிரெக் நிக்கல்ஸ், சாமுவேல் வோல்டிரன் போன்றோர் இதைத் தயாரிப்பதற்கு நல்லாலோசனைகளைத் தந்துள்ளனர். இதன் அட்டவணையை போதகர் கிரெக் நிக்கல்ஸ் தயாரித்துள்ளார். வினா விடைகளுக்கான வேத வசனங்கள் அனைத்தும் பெரும்பாலும் வெஸ்ட்மின்ஸ்டர் வினா விடைப் போதனைகளைப் பின்பற்றியே இதிலும் காணப்படுகின்றன. காலத்தின் அவசியம் கருதி ஒருசில புதிய வசனங்களும் இணைக்கப்பட்டுள்ளன. சிம்ப்சன் வெளியீட்டின் வினா விடைப் போதனையில் எந்தவித மாற்றமும் செய்யாமல் அவர்களுடைய அனுமதியுடன் அப்படியே இதை நாம் தமிழில் வெளியிட்டிருக்கிறோம். இதை வெளியிட அனுமதி தந்த அவர்களுக்கு எங்களுடைய நன்றிகள் உரித்தானவை.*

*திருச்சபை சத்தியத்துக்கு தூணாகவும், ஆதாரமாகவும் இருக்க வேண்டும் என்று பவுல் அப்போஸ்தலன் தீமோத்தேயுவுக்கு எழுதி நினைவுறுத்தினார். கிறிஸ்தவம் சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டது. சத்தியத்தின் அடிப்படையிலேயே நம்முடைய கிறிஸ்தவ அனுபவங்களும் அமைய வேண்டும். அதுவே கிறிஸ்துவை மகிமைப்படுத்தும் கிறிஸ்தவமாக இருக்க முடியும். அந்த அடிப்படையில் கிறிஸ்தவ சபைகளும், கிறிஸ்தவர்களும் சத்தியத்தில் மேலான அறிவைப் பெற்று தங்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் கிறிஸ்துவின் சந்தோஷத்தை சகலத்திலும் அனுபவிக்க வேண்டும். அதற்கு விசுவாச அறிக்கையைப் போல வினா விடைப் போதனையும் நிச்சயம் உதவும். இந்த வினா விடைப் போதனையை சபைகள் வேதப் பிரசங்கங்களிலும், வேத பாட வகுப்புகளிலும், ஞாயிறு பாடசாலைகளிலும் பயன்படுத்திக் கொள்ளலாம். போதகர்களுக்கும், வேத பாட, ஞாயிறு பாடசாலை ஆசிரியர்களுக்கும் வேத சத்தியங்களில் நல்லறிவு பெற்றுக்கொள்ள இது அவசியம் துணைபோகும்.*

*சபைகளில் சிறுவர்களுக்கும், வாலிபர்களுக்கும் வினா விடைப் போதனைகளைக் கற்றுக்கொடுப்பதைப் போல மேலானது ஒன்றுமில்லை. அவர்களை சத்தியத்தில் வளர்க்க அதைவிட மேலான வழி எனக்குத் தெரியவில்லை. அதனால்தான் வரலாற்றில் திருச்சபை வினா விடைப் போதனைகளுக்கு அத்தனை முக்கியத்துவம் அளித்திருக்கிறது. இளம் வயதில் சத்தியத்தை வினா விடைப் போதனை மூலம் கற்று வளர்கிறவர்கள் திருச்சபைகளை அலங்கரிக்கும்போது அச்சபைகள் உயர்வதற்கே வாய்ப்பிருக்கின்றது. வினா விடைப் போதனை வேத சத்தியங்களை அள்ளி அள்ளி வழங்கி நம்மை வேதத்தால் நிரப்புவதையே நோக்கமாகக் கொண்டிருப்பதை இதை வாசிக்கும்போதே உணர்வீர்கள்.*

*இந்த வினா விடைக்கான அட்டவணையைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல வேண்டியது அவசியம். இதிலுள்ள 115 வினா விடைகளையும் இந்த அட்டவணை வரையறுக்கப்பட்ட இறையியல் போதனைகளின் அடிப்படையில் மூன்று அலகுகளாகப் பிரித்து எந்தெந்த சத்தியங்களின் கீழ் படிமுறையாக அவை வருகின்றன என்பதை முறையாகத் தொகுத்து வழங்குகிறது. முதலாவது வினா விடை மனிதனின் தோற்றத்திற்கும், வாழ்க்கைக்குமான குறிக்கோளை விளக்குகிறது. இந்த வினா விடை, கர்த்தரின் மகிமைக்காகவே மனிதன் உருவாக்கப்பட்டிருப்பதை விளக்கி கர்த்தரின் இறையாண்மையின் அடிப்படையில் முழு வேதபோதனைகளையும் ஏனைய வினா விடைகளின் மூலம் அணுகுவதைக் கவனிக்கிறோம். இதுவே சீர்திருத்த கிறிஸ்தவத்தின் விசேஷ தன்மை.*

*ஏனைய 114 வினா விடைகளும் மூன்று அலகுகளுக்குள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. முதலாவது அலகு கர்த்தருடைய வார்த்தையின் தன்மையைப் பற்றியது. ஆவியினால் அருளப்பட்டிருக்கும் வேதாகமமே கிறிஸ்தவ விசுவாசத்திற்கும் நடைமுறைக்கும் அத்திவாரமாக இருக்கின்றது. அது பற்றிய மூன்று முக்கிய அம்சங்களை – அதன் போதுமான தன்மை, நம்பகத் தன்மை, உள்ளடக்கம் ஆகியவற்றை 2ல் இருந்து 4வரையிலான வினா விடைகள் இந்த முதலாம் அலகில் விளக்குகின்றன. இரண்டாம் அலகு, கடவுளைப்*

*பற்றியது. அவருடைய நித்திய மகிமையையும் அற்புத செயல்களையும் அது விளக்குகிறது. 5ல் இருந்து 41வரையுள்ள வினா விடைகள் கடவுளைப் பற்றிய இந்த அரும்பெரும் உண்மைகளை விளக்குகின்றன. இந்த அலகில் மூன்று பிரிவுகள் இருக்கின்றன – கடவுளைப் பற்றிய போதனை, கடவுளின் படைப்பைப் பற்றிய போதனை, பாவத்தில் இருந்து மீட்பு ஆகிய போதனையே அவை. இந்த அலகில் காணப்படும் இரண்டாம், மூன்றாம் பிரிவுகளில் ஒவ்வொன்றிற்கும் கீழ் மேலும் மூன்று பிரிவுகள் உள்ளன. அந்தளவுக்கு கடவுளின் செயல்கள் பற்றிய தெளிவான விளக்கங்கள் இப்பகுதியில் வினா விடைகள் மூலம் தரப்பட்டுள்ளன.*

*இந்த அட்டவணையில் இதுவரை நாம் கவனித்துள்ள இரண்டு அலகுகளிலும் முக்கியமான உண்மையொன்றை நாம் சந்திக்கிறோம். விசுவாச அறிக்கையைப் போலவே இந்த வினா விடையும் முதலில் கடவுளின் வேதத்தோடு ஆரம்பிக்கிறது. ஏனெனில், வேதமே (அது மட்டுமே) நமக்கு கடவுளைப் பற்றிப் போதிக்கும் ஒரே வெளிப்பாடாக இருக்கின்றது. அதை விளக்கிய பிறகு கடவுளைப் பற்றி வேதம் தருகின்ற உண்மைகளை வினா விடை விளக்குகிறது.*

*வினா விடையின் மூன்றாம் அலகு மனிதன் அறிந்து, பின்பற்றும்படியாக கடவுள் வெளிப்படுத்தியுள்ள அவருடைய சித்தத்தை விளக்குகிறது. அவருடைய சித்தத்தின் சுருக்கமான மொத்த வடிவமாக பத்துக்கட்டளைகள் அமைந்திருக்கின்றன. அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதே கிறிஸ்தவனுடைய தலையாய கடமையாக இருக்கின்றது. இந்த அலகு 42ல் இருந்து 115 வரையுள்ள வினா விடைகளை உள்ளடக்கி அவற்றை விளக்குகின்றன. இந்த அலகில் இரண்டு பெரும் பிரிவுகள் உள்ளன. முதலாவது, கடவுளின் ஒழுக்க நியதிச் சட்டங்களான பத்துக்கட்டளைகள்; இரண்டாவது, கடவுளின் சுவிசேஷம். இவற்றின் மூலம் கிறிஸ்தவனின் கடமைகள் அனைத்தும் வலியுறுத்தி விளக்கப்படுகின்றன. வினா விடைக்கான இந்த அட்டவணை மிகவும் அவசியமானதாக, வினா விடைக்கான தெளிவான வழிகாட்டியாக இருந்து உதவுகின்றது.*

*இந்த வினா விடைப் போதனை நூலின் சிறப்பம்சங்களை விளக்காமலிருக்க முடியாது.*

1. *இது வரையறுக்கப்பட்ட இறையியல் போதனையளிக்கும் ஒரு சுருக்கக் கையேடாக இருக்கிறது. வேதத்தின் அத்தனை முக்கிய சத்தியங்களையும் வினா விடை முறையில் இது தொகுத்துத் தருகிறது. வேதம் போதிக்கும் எந்த சத்தியத்தைப் பற்றியும் உடனடியாக அறிந்துகொள்ள வேண்டுமானால் இதைப் புரட்டி அது சம்பந்தமான வினா விடை மூலம் தெளிவான, சுருக்க விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளலாம். அந்த முறையில் அநாதி காலத்தில் கர்த்தர் ஏற்படுத்திய உடன்படிக்கையில் இருந்து இறுதிக் காலத்தில் கிறிஸ்துவினதும் சபையினதும் மகிமைத்துவம் வரையிலும் உள்ள அத்தனைப் போதனைகளையும் இது சுருக்கமாக அளிக்கின்றது. ஒரு போதகனோ, வேத பாடமெடுக்கும் அல்லது ஞாயிறு பாடசாலை ஆசிரியரொருவரோ தான் போதிக்கும் விஷயங்கள் வேதத்தின்படி அமையுமாறு பார்த்துக் கொள்ள இந்த வினா விடை நிச்சயம் உதவும். இதிலுள்ள விஷயங்கள் பற்றி மேலும் அறிந்து கொள்ள 1689 விசுவாச அறிக்கை இருக்கவே இருக்கிறது.*

2. *இன்னொரு முக்கிய அம்சமாக இந்த வினா விடைப் போதனை முழுவதும் அந்தப் போதனைகளுக்கான வேத ஆதாரங்கள் பெருமளவில் தரப்பட்டிருக்கின்றன. வேத வசனங்கள் நிரம்பி வழியும் வினா விடை நூலாக இது இருக்கிறது.*

3. *இது வெஸ்ட்மின்ஸ்டர் சுருக்க வினா விடை மட்டுமல்லாது விரிவான வினா விடையையும் பின்பற்றி வரையப்பட்டிருப்பதால் இந்த ஒரே வினா விடை நூலின் மூலம் அதிக பயன்களை நாம் பெற்றுக்கொள்ள முடிகின்றது.*

*இந்த வினா விடைப் போதனையைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நலன்கள்:*

1. *சிறுவர்கள், வாலிபர்கள் மற்றும் பெரியவர்கள் வரை கர்த்தரில் இருந்து ஆரம்பித்து இறுதிக்கால நிகழ்ச்சிவரையுள்ள அத்தனை அதிமுக்கியமான வேத சத்தியங்களையும் இதன் மூலம் சுருக்கமாக, படிமுறையாக, தெளிவாகக் கற்றுக்கொள்ள முடியும். குழப்பமான சூழ்நிலையில் இருக்கும் நம்மினத்துக் கிறிஸ்தவத்தின் குருட்டுக் கண்களை இது நிச்சயம் திறந்து வைக்கும்.*

2. *இவற்றைக் கற்று வளரும் சிறுவர்களும், வாலிபர் களும், பெரியவர்களும் திருச்சபையில் சத்தியமறிந்த ஆத்மீக வளர்ச்சியை நிச்சயம் அடையும் வாய்ப்பு அதிகரிக்கிறது.*

3. *திருச்சபையின் வளர்ச்சிக்கும், சத்திய விரோதப் போக்கை எதிர்த்து நிற்கப் பாதுகாப்புக் கேடயமாகவும் இந்த வினா விடை போதனை உதவும். அந்த வகையில் இது விசுவாச அறிக்கையைப் போன்றது.*

*இந்தளவுக்கு வினா விடைப் போதனையின் அவசியத்தை நான் விளக்கியிருந்தபோதும் அது இல்லாமல் கிறிஸ்தவம் இருக்க முடியாது என்ற ஆணவப் போக்கோடு அதைச் செய்யவில்லை. வினா விடைப் போதனைகள் இருப்பதையே அறியாமல் திருச்சபைகள் நம்மினத்தில் இருந்து வந்திருக்கின்றன. கர்த்தரின் கிருபையால் வேதத்தைப் பயன்படுத்தி தங்களைத் தவறான வழிகளில் இருந்து சில சபைகள் எப்படியோ பாதுகாத்துக்கொள்ளவும் செய்திருக்கின்றன. இருந்தபோதும் தந்திரமாக பிசாசு திருச்சபையை அழிப்பதற்கு நவீன முயற்சிகளையெல்லாம் செய்து வரும் இக்காலத்தில் எந்தத் திருச்சபையும், கிறிஸ்தவனும் அசட்டையாக இருந்து கர்த்தரை மகிமைப்படுத்த வழியில்லை. சபைகளும், கிறிஸ்தவர்களும் சத்தியத்தில் நல்லறிவு பெறவும், தங்களைத் தொடர்ந்து பாதுகாத்துக்கொண்டு நல்வளர்ச்சி அடையவும் இந்த*

*வினா விடை போதனை நிச்சயம் தமிழ் திருச்சபைகளுக்கு பெருந்துணை போகும் என்பதில் எனக்கு சந்தேகமேயில்லை.*

*வரலாற்றில் பதினாறாம், பதினேழாம் நூற்றாண்டுகளில் பெருங்காரியங்களைத் திருச்சபையில் செய்த நம் தேவன் நமக்கு வழங்கியிருக்கும் அருஞ்சாதனம் இந்த வினா விடை நூல். தமிழில் இது வெளிவருகின்ற பெருவாய்ப்பு நமக்குக் கிடைக்கும்படி கர்த்தர் கிருபை பாராட்டியிருக்கிறார். இனி திருச்சபைகளையும், கிறிஸ்தவர்களின் வாழ்க்கையையும் இது அலங்கரித்து கிறிஸ்துவுக்கு மகிமை சேர்க்குமானால் அதுவே எங்கள் பணிக்குக் கிடைத்த ஆசீர்வாதமாக இருக்க முடியும்.*

***போதகர் ஆர். பாலா***<br>
*சவரின் கிரேஸ் வெளியீடுகள்*<br>
*ஆக்லாந்து, நியூசிலாந்து*

# வினா விடைகள்

## 1. மனித வாழ்வின் முக்கிய குறிக்கோளென்ன?

*கடவுளை என்றென்றும் மகிமைப்படுத்துவதும், அனுபவிப்பதுமே மனித வாழ்வின் முக்கிய குறிக்கோளாகும்.*

***1 கொரிந்தியர் 10:31*** *ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்.*

***ரோமர் 11:36*** *சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்.*

***சங்கீதம் 73:25-28*** *[25]பரலோகத்தில் உம்மையல்லாமல்*
*எனக்கு யார் உண்டு? பூலோகத்தில் உம்மைத் தவிர எனக்கு*
*வேறே விருப்பமில்லை. [26]என் மாம்சமும் என் இருதயமும்*
*மாண்டுபோகிறது; தேவன் என்றென்றைக்கும் என் இருதயத்தின்*
*கன்மலையும் என் பங்குமாயிருக்கிறார். [27]இதோ, உம்மைவிட்டுத்*
*தூரமாய்ப்போகிறவர்கள் நாசமடைவார்கள்; உம்மைவிட்டுச்*
*சோரம்போகிற அனைவரையும் சங்கரிப்பீர். [28]எனக்கோ, தேவனை*
*அண்டிக்கொண்டிருப்பதே நலம்; நான் உமது கிரியைகளையெல்லாம்*
*சொல்லிவரும்படி கர்த்தராகிய ஆண்டவர்மேல் என் நம்பிக்கையை*
*வைத்திருக்கிறேன்.*

## 2. கடவுளை நாம் மகிமைப்படுத்தவும், அனுபவிக்கவும் எத்தகைய விதியை அவர் நமக்கு வழிகாட்டியாகத் தந்துள்ளார்?

*பழைய, புதிய ஏற்பாடுகளைக் கொண்ட வேதாகமமே, நாம் அவரை மகிமைப்படுத்தவும், அனுபவிக்கவும் வழிகாட்டக்கூடிய ஒரே விதியாக இருக்கின்றது.*

***2 தீமோத்தேயு 3:15-17*** *[15]கிறிஸ்து இயேசுவைப் பற்றும்*
*விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவ*

*னாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும். [16]வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, [17]அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.*

***எபேசியர் 2:20*** *அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்;*

***1 யோவான் 1:3-4*** *[3]நீங்கள் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது. [4]உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி இவைகளை உங்களுக்கு எழுதுகிறோம்.*

***லூக்கா 16:29, 31*** *[29]ஆபிரகாம் அவனை நோக்கி: அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு, அவர்களுக்கு அவர்கள் செவி கொடுக்கட்டும் என்றான்.*

*[31]அதற்கு அவன்: அவர்கள் மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவி கொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும், நம்பமாட்டார்கள் என்று சொன்னான் என்றார்.*

***கலாத்தியர் 1:8-9*** *[8]நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன். [9]முன் சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்.*

## 3. வேதாகமத்தின் முக்கியமான போதனையென்ன?

*கடவுளைக்குறித்து மனிதன் எதை விசுவாசிக்க வேண்டும் என்றும், மனிதனிடம் இருந்து கடவுள் எத்தகைய கடமைகளை எதிர்பார்க்கின்றார் என்றும் வேதாகமம் முக்கியமாகப் போதிக்கின்றது.*

*__2 தீமோத்தேயு 3:16__ வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும் படியாக,*

*__1 தெசலோனிக்கேயர் 2:13__ ஆகையால், நீங்கள் தேவவசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டபோது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக்கொள்ளாமல், தேவவசனமாகவே ஏற்றுக் கொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம்; அது மெய்யாகவே தேவவசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது.*

*__யோவான் 10:35__ தேவவசனத்தைப் பெற்றுக்கொண்டவர்களைத் தேவர்கள் என்று அவர் சொல்லியிருக்க, வேதவாக்கியமும் தவறாததாயிருக்க,*

## 4. வேதாகமம் உறுதிப்படுத்தும் அனைத்துப் போதனைகளும் நம்பிக்கைக்குரியவையா?

*தேவ ஆவியினால் ஊதி அருளப்பட்ட பழைய, புதிய ஏற்பாடுகளைக் கொண்ட வேதாகமத்தின் எல்லாப்பகுதிகளும் தவறிழைக்கவியலாதவையாகவும் (Infallible), வழுவற்றதாகவும் (Inerrant) அமைந்திருப்பதால், அவை வரலாறு, அறிவியல், கோட்பாடுகள், ஒழுக்கவியல், சமயக்கட்டுப்பாடுகள் மற்றும் வேறு எந்தத் தலைப்பிலும், உறுதிப்படுத்தும் அனைத்துப் போதனைகளும் நம்பிக்கைக்குரியவையே.*

*__2 தீமோத்தேயு 1:13__ நீ கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தோடும் அன்போடும் என்னிடத்தில் கேட்டிருக்கிற ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக்கொண்டிரு.*

*__2 தீமோத்தேயு 3:16-17__ [16] வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும் படியாக, [17]அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜன முள்ளவைகளாயிருக்கிறது.*

*__மீகா 6:8__ மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன்*

*தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்.*

## 5. கடவுள் யார்?

*கடவுள் உருவமற்றவரும், எல்லையற்றவரும், நித்தியமானவரும், மாறாத்தன்மையுடையவருமாவார், தன்னியல்புடைய அவர், ஞானம், வல்லமை, பரிசுத்தம், நீதி, நன்மை, உண்மை ஆகிய அனைத்தையும் தன்னில் கொண்டவர்.*

***யோவான் 4:24*** *தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார்.*

***யோபு 11:7-9*** *[7]தேவனுடைய அந்தரங்க ஞானத்தை நீர் ஆராய்ந்து, சர்வவல்லவருடைய சம்பூரணத்தை நீர் அறியக் கூடுமோ? [8]அது வானபரியந்தம் உயர்ந்தது; உம்மால் என்ன ஆகும்? அது பாதாளத்திலும் ஆழமானது, நீர் அறியக் கூடியது என்ன? [9]அதின் அளவு பூமியைப்பார்க்கிலும் நீளமும், சமுத்திரத்தைப்பார்க்கிலும் அகலமுமாயிருக்கிறது.*

***சங்கீதம் 90:2*** *பர்வதங்கள் தோன்றுமுன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்குமுன்னும், நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர்.*

***யாக்கோபு 1:17*** *நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை.*

***யாத்திராகமம் 3:14*** *அதற்குத் தேவன்: இருக்கிறவராக இருக்கிறேன் என்று மோசேயுடனே சொல்லி, இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக என்றார்.*

***சங்கீதம் 147:5*** *நம்முடைய ஆண்டவர் பெரியவரும் மகா பெலமுள்ளவருமாயிருக்கிறார்; அவருடைய அறிவு அளவில்லாதது.*

***யோபு 42:2*** *தேவரீர் சகலத்தையும் செய்யவல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்.*

***வெளிப்படுத்தின விசேஷம் 4:8*** *அந்த நான்கு ஜீவன்களிலும் ஒவ்வொன்று அவ்வாறு சிறகுகளுள்ளவைகளும், சுற்றிலும் உள்ளேயும் கண்களால் நிறைந்தவைகளுமாயிருந்தன. அவைகள்: இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று இரவும் பகலும் ஓய்வில்லாமல் சொல்லிக்கொண்டிருந்தன.*

***வெளிப்படுத்தின விசேஷம் 15:4*** *கர்த்தாவே, யார் உமக்குப் பயப்படாமலும், உமது நாமத்தை மகிமைப்படுத்தாமலும் இருக்கலாம்? தேவரீர் ஒருவரே பரிசுத்தர், எல்லா ஜாதிகளும் வந்து உமக்கு முன்பாகத் தொழுதுகொள்வார்கள்; உம்முடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாயின என்றார்கள்.*

***யாத்திராகமம் 34:6-7*** *[6]கர்த்தர் அவனுக்கு முன்பாகக் கடந்து போகிறபோது, அவர்: கர்த்தர், கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன். [7]ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர்; அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்; குற்றவாளியைக் குற்றமற்றவனாக விடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும், பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவர் என்று கூறினார்.*

## 6. கடவுள் ஒருவரைத்தவிர, வேறு கடவுள்கள் உளரா?

*கடவுள், ஒருவரே. அவர் ஜீவனுள்ள, மெய்யான தேவன்.*

***உபாகமம் 6:4*** *இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்.*

***எரேமியா 10:10*** *கர்த்தரோ மெய்யான தெய்வம்; அவர் ஜீவனுள்ள தேவன், நித்திய ராஜா அவருடைய கோபத்தினால் பூமி அதிரும்; அவருடைய உக்கிரத்தை ஜாதிகள் சகிக்கமாட்டார்கள்.*

## 7. கடவுளில் எத்தனை நபர்கள் உள்ளனர்?

*கடவுளில் மூன்று நபர்கள் உள்ளனர்: பிதா, குமாரன், பரிசுத்த ஆவி இவர்கள் மூவரும் ஒரே கடவுளாய், ஒரே சாரத்தையும் (உள்ளியல்பு), சம வல்லமையையும், மகிமையையும் கொண்டுள்ளார்கள்.*

***மத்தேயு 28:19*** *ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,*

***2 கொரிந்தியர் 13:14*** *கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.*

***யோவான் 10:30*** *நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்றார்.*

***அப்போஸ்தலர் 5:3-4*** *[3]பேதுரு அவனை நோக்கி: அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? [4]அதை விற்குமுன்னே அது உன்னுடையதாயிருக்கவில்லையோ? அதை விற்றபின்பும் அதின் கிரயம் உன் வசத்திலிருக்கவில்லையோ? நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணங்கொண்டதென்ன? நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய்சொன்னாய் என்றான்.*

## 8. கடவுளின் ஆணைகள் (Decree) யாவை?

*கடவுளுடைய ஆணைகளாவன, அவர் தனது சுய மகிமையின் பொருட்டு, தனது சித்தத்தின் ஆலோசனையின்படி, நடைபெறக்கூடிய அனைத்தையும் ஏற்கனவே முன்குறித்துள்ளவையாகும்.*

***தானியேல் 4:35*** *பூமியின் குடிகள் எல்லாம் ஒன்றுமில்லையென்று எண்ணப்படுகிறார்கள்; அவர் தமது சித்தத்தின்படியே வானத்தின் சேனையையும் பூமியின் குடிகளையும் நடத்துகிறார்; அவருடைய கையைத் தடுத்து, அவரை நோக்கி: என்ன செய்கிறீரென்று சொல்லத்தக்கவன் ஒருவனும் இல்லை என்றேன்.*

***ரோமர் 11:36*** *சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்.*

***எபேசியர் 1:4, 11-12*** *[4]தமக்குமுன்பாக நாம் அன்பில் பரிசுத்த முள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்குமுன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே,*

*[11] மேலும் கிறிஸ்துவின்மேல் முன்னே நம்பிக்கையாயிருந்த நாங்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கும்படிக்கு, [12]தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே, நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்துகொள்ளப் பட்டோம்.*

## 9. கடவுள் எவ்வாறு தனது ஆணைகளை நிறைவேற்றுகிறார்?

*கடவுள் தனது ஆணைகளை படைப்பு, பராமரிப்பு ஆகிய செயல்களின் மூலம் நிறைவேற்றுகிறார்.*

***வெளிப்படுத்தின விசேஷம் 4:11*** *கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திர ராயிருக்கிறீர்; நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப் பட்டவைகளுமாயிருக்கிறது என்றார்கள்.*

***எபேசியர் 1:11-12*** *[11]மேலும் கிறிஸ்துவின்மேல் முன்னே நம்பிக்கையா யிருந்த நாங்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கும் படிக்கு, [12]தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக எல்லா வற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே, நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்துகொள்ளப்பட்டோம்.*

## 10. படைப்புச் செயல் என்பது யாது?

*படைப்புச் செயலாவது, கடவுள், தனது வார்த்தையின் வல்லமையால், ஆறே நாட்களில், வெறுமையிலிருந்து, அனைத்தையும் மிகவும் நல்லவையாக உருவாக்கியதாகும்.*

***ஆதியாகமம் 1:1-31*** *[1]ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். . . .*

***கொலோசெயர் 1:16*** *ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்தி லுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாத வைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது.*

***எபிரெயர் 11:3*** *விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினாலே உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாக வில்லையென்றும் அறிந்திருக்கிறோம்.*

***யாத்திராகமம் 20:11*** *கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்.*

***ஆதியாகமம் 1:31*** *அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லா வற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது; சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஆறாம் நாள் ஆயிற்று.*

## 11. கடவுள் மனிதனை எவ்வாறு படைத்தார்?

*கடவுள் மனிதனை தனது சாயலில், ஆணாகவும், பெண்ணாகவும் அறிவு, நீதி, பரிசுத்தம் ஆகியவற்றுடன் சகல, படைப்புயிர்களையும் ஆளுந் தன்மையுடன் படைத்தார்.*

***ஆதியாகமம் 1:27*** *தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்.*

***கொலோசெயர் 3:10*** *தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக் கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே.*

***பிரசங்கி 7:29*** *இதோ, தேவன் மனுஷனைச் செம்மையானவனாக உண்டாக்கினார்; அவர்களோ அநேக உபாயதந்திரங்களைத் தேடிக்கொண்டார்கள்; இதைமாத்திரம் கண்டேன்.*

***எபேசியர் 4:24*** *மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்.*

***ஆதியாகமம் 1:26, 28*** *26 பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார்.*

*[28]பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்.*

## 12. கடவுளின் பராமரிப்பின் செயல்கள் யாவை?

*மகா பரிசுத்தத்துடனும், ஞானத்துடனும்,
வல்லமையுடனும் தனது படைப்புயிர்களையும்,
அவர்களது செயல்களையும் பாதுகாத்து ஆளுவதே
கடவுளின் பராமரிப்பின் செயல்களாகும்.*

***சங்கீதம் 145:17*** *கர்த்தர் தமது வழிகளிலெல்லாம் நீதியுள்ளவரும், தமது கிரியைகளிலெல்லாம் கிருபையுள்ளவருமாயிருக்கிறார்.*

***சங்கீதம் 104:24*** *கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு திரளாயிருக்கிறது! அவைகளையெல்லாம் ஞானமாய்ப் படைத்தீர்; பூமி உம்முடைய பொருள்களினால் நிறைந்திருக்கிறது.*

***ஏசாயா 28:29*** *இதுவும் சேனைகளின் கர்த்தராலே உண்டாகிறது; அவர் ஆலோசனையில் ஆச்சரியமானவர், செயலில் மகத்துவ மானவர்.*

***எபிரெயர் 1:3*** *இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்தார்.*

**கொலோசெயர் 1:17** *அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது.*

***சங்கீதம் 103:19*** *கர்த்தர் வானங்களில் தமது சிங்காசனத்தை ஸ்தாபித்திருக்கிறார்; அவருடைய ராஜரீகம் சர்வத்தையும் ஆளுகிறது.*

***மத்தேயு 10:29-31*** *[29]ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா? ஆயினும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல், அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது. [30]உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது.*

*[31]ஆதலால், பயப்படாதிருங்கள்; அநேகம் அடைக்கலான் குருவிகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்.*

## 13. மனிதன் எந்நிலையில் கடவுளால் படைக்கப்பட்டான்?

*பரிசுத்தமும், பாவமுமற்ற நிலையில் மனிதனைக் கடவுள் படைத்து ஏதேன் தோட்டத்தில் இருத்தி அதைப் பண்படுத்திப் பராமரிக்கச் செய்ததோடு மரணத்தை உண்டாக்கும் நன்மை, தீமை அறியத்தக்க மரத்தின் கனியைப் புசிக்கக்கூடாது என்றும் தடை செய்தார்.*

***ஆதியாகமம் 2:7-8*** *[7]தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான். [8]தேவனாகிய கர்த்தர் கிழக்கே ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டாக்கி, தாம் உருவாக்கின மனுஷனை அதிலே வைத்தார்.*

***ஆதியாகமம் 1:31*** *அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லா வற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது; சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஆறாம் நாள் ஆயிற்று.*

***ஆதியாகமம் 2:9, 15-17, 25*** *[9]தேவனாகிய கர்த்தர், பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும், தோட்டத்தின் நடுவிலே ஜீவவிருட்சத்தையும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கப்பண்ணினார்.*

*[15]தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொண்டுவந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார். [16]தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். [17]ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்.*

*[25]ஆதாமும் அவன் மனைவியுமாகிய இருவரும் நிர்வாணி களாயிருந்தும், வெட்கப்படாதிருந்தார்கள்.*

***பிரசங்கி 7:29*** *இதோ, தேவன் மனுஷனைச் செம்மையானவனாக உண்டாக்கினார்; அவர்களோ அநேக உபாயதந்திரங்களைத் தேடிக்கொண்டார்கள்; இதைமாத்திரம் கண்டேன்.*

## 14. எமது முதல் பெற்றோர் கடவுளால் படைக்கப்பட்ட நிலையில் தொடர்ந்து இருந்தனரா?

*எமது முதல் பெற்றோர் சுயசித்தத்தின்படி செயல்படும் சுதந்திரத்தைப் பெற்றிருந்த நிலையில், கடவுளுக்கு எதிராகப் பாவம் செய்து தாங்கள் படைக்கப்பட்ட நிலையில் இருந்து வீழ்ந்தனர்.*

***ஆதியாகமம் 3:6-8, 13, 17*** *[6]அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான். [7]அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது; அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தியிலைகளைத் தைத்து, தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டுபண்ணினார்கள். [8]பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக்கொண்டார்கள்.*

*[13]அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி: நீ இப்படிச் செய்தது என்ன என்றார். ஸ்திரீயானவள்: சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள்.*

*[17]பின்பு அவர் ஆதாமை நோக்கி: நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவிகொடுத்து, புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய்.*

***பிரசங்கி 7:29*** *இதோ, தேவன் மனுஷனைச் செம்மையானவனாக உண்டாக்கினார்; அவர்களோ அநேக உபாயதந்திரங்களைத் தேடிக்கொண்டார்கள்; இதைமாத்திரம் கண்டேன்.*

## 15. பாவம் என்றால் என்ன?

*கடவுளுடைய நியாயப்பிரமாணத்தின்படி நடவாமல் இருப்பதும், அதை மீறுவதுமே பாவமாகும்.*

*1 **யோவான் 3:4** பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான்; நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்.*

### 16. எமது முதல் பெற்றோர் தாம் படைக்கப்பட்ட நிலையில் இருந்து வீழ்வதற்குக் காரணமாக இருந்த பாவம் எது?

*கடவுளால் தடைசெய்யப்பட்ட கனியைப் புசித்ததே எமது முதல் பெற்றோர் தாம் படைக்கப்பட்ட நிலையில் இருந்து வீழ்வதற்குக் காரணமாயிருந்த பாவமாகும்.*

***ஆதியாகமம் 3:6, 9-13*** *[6]அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்.*

*[9]அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு: நீ எங்கே இருக்கிறாய் என்றார். [10]அதற்கு அவன்: நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து, ஒளித்துக்கொண்டேன் என்றான். [11]அப்பொழுது அவர்: நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்? புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ என்றார். [12]அதற்கு ஆதாம்: என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன் என்றான். [13]அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி: நீ இப்படிச் செய்தது என்ன என்றார். ஸ்திரீயானவள்; சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள்.*

### 17. ஆதாமின் முதல் பாவத்தினால் மனித இனம் அனைத்துமே பாவத்தில் வீழ்ந்ததா?

*தடைசெய்யப்பட்ட கனியைப் புசிக்கக்கூடாதென்ற கட்டளையைப் பெற்றிருந்த மனித குலத்தின் பிரதிநிதியான ஆதாம், தனக்காக மட்டுமல்லாமல் தன் சந்ததிக்காகவும் கீழ்ப்படியாமல் போனபடியால் அவனிலிருந்து தொடருகின்ற சந்ததியினரான மனிதகுலமனைத்துமே ஆதாமோடிருந்து அவன் செய்த முதல் பாவத்தைச் செய்து அவனோடு வீழ்ந்தது.*

***ஆதியாகமம் 2:16-17*** *[16]தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். [17]ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்.*

***ரோமர் 5:12, 18-19*** *[12]இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று.*

*[18]ஆகையால் ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று. [19]அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப் படுவார்கள்.*

***1 கொரிந்தியர் 15:21-22*** *[21]மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. [22]ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.*

## 18. பாவத்தினால் ஏற்பட்ட வீழ்ச்சி மனித இனத்தை எந்நிலைக்குக் கொண்டு வந்தது?

*பாவத்தினால் ஏற்பட்ட வீழ்ச்சி மனித இனத்தை பாவத்தன்மைக்கும், அவலநிலைக்கும் உட்படுத்தியது.*

***ரோமர் 5:12*** *இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று.*

***ஆதியாகமம் 3:16-19*** *[16]அவர் ஸ்திரீயை நோக்கி: நீ கர்ப்பவதியா யிருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன்; வேதனையோடே பிள்ளை பெறுவாய்; உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும், அவன் உன்னை ஆண்டுகொள்ளுவான் என்றார். [17]பின்பு அவர் ஆதாமை நோக்கி: நீ உன் மனைவியின் வார்த்தைக்குச்*

*செவிகொடுத்து, புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய். [18]அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்; வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய். [19]நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்றார்.*

## 19. மனிதன் வீழ்ந்த நிலையின் பாவத்தன்மை யாது?

*ஜென்ம பாவம் என்று அழைக்கப்படுகின்ற, ஆதாமின் முதல் பாவத்தினால் ஏற்பட்ட குற்ற உணர்வு, நீதியற்ற தன்மை, தன்னில் முழுமையாகக் கறைபட்ட தன்மை அத்தோடு, அதன் மூலமாகத் தொடர்ந்து வரும் அனைத்துப் பாவங்களையும் உள்ளடக்கியதே மனிதன் வீழ்ந்த நிலையின் பாவத்தன்மை.*

***ரோமர் 5:12, 19*** *[12]இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று.*

*[19]அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்.*

***பிரசங்கி 7:29*** *இதோ, தேவன் மனுஷனைச் செம்மையானவனாக உண்டாக்கினார்; அவர்களோ அநேக உபாயதந்திரங்களைத் தேடிக்கொண்டார்கள்; இதைமாத்திரம் கண்டேன்.*

***ரோமர் 3:10*** *அந்தப்படியே: நீதிமான் ஒருவனாகிலும் இல்லை;*

***எபேசியர் 2:1-3*** *[1]அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார். [2]அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள். [3]அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும்*

*விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்.*

***சங்கீதம் 51:5*** *இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்.*

***யாக்கோபு 1:14-15*** *[14]அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். [15]பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்.*

***மத்தேயு 15:19-20*** *[19]எப்படியெனில், இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபச்சாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டுவரும். [20]இவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்; கைகழுவாமல் சாப்பிடுகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது என்றார்.*

## 20. மனிதன் வீழ்ச்சியுற்ற நிலையின் அவலம் யாது?

*முழு மனித இனமும் வீழ்ச்சியினால் கடவுளோடிருந்த ஐக்கியத்தை இழந்து, அவரது கோபத்தையும், சாபத்தையும் சுமந்து, இவ்வுலக வாழ்க்கையின் சகல அவலங்களையும், இறப்பையும், நித்தியமாக நரகத்தின் துன்பங்களையும் அனுபவிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.*

***ஆதியாகமம் 3:8, 10, 24*** *[8]பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக்கொண்டார்கள்.*

*[10]அதற்கு அவன்: நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து, ஒளித்துக்கொண்டேன் என்றான்.*

*[24]அவர் மனுஷனைத் துரத்திவிட்டு, ஜீவவிருட்சத்துக்குப் போம் வழியைக் காவல்செய்ய ஏதேன் தோட்டத்துக்குக் கிழக்கே கேருபீன்களையும், வீசிக்கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்தையும் வைத்தார்.*

***எபேசியர் 2:2-3*** *[2]அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்து கொண்டீர்கள். [3]அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்.*

***புலம்பல் 3:39*** *உயிருள்ள மனுஷன் முறையிடுவானேன்? அவன் தன் பாவத்துக்கு வரும் தண்டனையைக்குறித்து முறையிடுகிற தென்ன?*

***ரோமர் 6:23*** *பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்.*

***மத்தேயு 25:41, 46*** *அப்பொழுது, இடதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்.*

*[46]அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்.*

## 21. கடவுள் முழு மனித இனத்தையும் பாவத்தாலும், அவலத்தாலும் அழிந்து போகும் நிலையில் விட்டாரா?

*கடவுள் அநாதிகாலமுதல் தனது நன்நோக்கத்தின்படி சிலரை நித்திய ஜீவனுக்காகத் தெரிந்துகொண்டதோடு, அவர்களுடைய பாவம், அதனால் ஏற்படும் அவலம் ஆகியவற்றிலிருந்து விடுபட்டு, இரட்சிப்பை அடைவதற்கான வழிமுறையை ஏற்படுத்தி மீட்பரொருவரின் மூலமாக அவர்கள் அதை அடையும்படிச் செய்கிறார்.*

***எபேசியர் 1:4*** *தமக்குமுன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே,*

***ரோமர் 3:20-22*** *[20]இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு*

*நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை. [21]இப்படியிருக்க, நியாயப்பிரமாணமில்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது; அதைக்குறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் சாட்சி யிடுகிறது. [22]அது இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே; விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள்மேலும் அது பலிக்கும், வித்தியாசமே இல்லை.*

***கலாத்தியர் 3:21-22*** *[21]அப்படியானால், நியாயப்பிரமாணம் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு விரோதமா? அல்லவே; உயிரைக் கொடுக்கத்தக்க நியாயப்பிரமாணம் அருளப்பட்டிருந்த தானால், நீதியானது நியாயப்பிரமாணத்தினால் உண்டா யிருக்குமே. [22]அப்படியிராதபடியால், இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கிற வாக்குத்தத்தம் விசுவாச முள்ளவர்களுக்கு அளிக்கப்படும்படி வேதம் எல்லாரையும் ஏகமாய்ப் பாவத்தின்கீழ் அடைத்துப்போட்டது.*

## 22. கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் மீட்பர் யார்?

*மனித உருவெடுத்து, ஒரே ஆளில் கடவுள்,*
*மனிதன் ஆகிய இருவேறு தனித் தன்மைகளைக்*
*கொண்டு அன்றும் இன்றும் என்றும் தொடர்ந்து*
*நித்திய தேவகுமாரனாக இருக்கும் ஆண்டவராகிய*
*இயேசு கிறிஸ்து ஒருவரே கடவுளால்*
*தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் மீட்பர்.*

***1 தீமோத்தேயு 2:5-6*** *[5]தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. [6]எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது.*

***யோவான் 1:14*** *அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.*

***கலாத்தியர் 4:5*** *காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்.*

***ரோமர் 9:5*** *பிதாக்கள் அவர்களுடையவர்களே; மாம்சத்தின்படி கிறிஸ்துவும் அவர்களில் பிறந்தாரே, இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான தேவன். ஆமென்.*

***லூக்கா 1:35*** *தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்.*

***கொலோசெயர் 2:9*** *ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரண மெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது.*

***எபிரெயர் 7:24-25*** *[24]இவரோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கிற படியினாலே, மாறிப்போகாத ஆசாரியத்துவமுள்ளவராயிருக்கிறார்.*
*[25]மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக் கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயு மிருக்கிறார்.*

## 23. தேவகுமாரனாகிய கிறிஸ்து எவ்வாறு மனித உருவெடுத்தார்?

*தேவகுமாரனாகிய கிறிஸ்து மெய்யான சரீரத்துடனும், மானுட ஆவியுடனும் (reasonable soul), பாவமற்று, பரிசுத்த ஆவியின் வல்லமையால், கன்னித் தன்மையுடனிருந்த மரியாளின் உதரத்தில் மனிதனாகப் பிறந்தார்.*

***எபிரெயர் 2:14*** *ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும்,*

***மத்தேயு 26:38*** *அப்பொழுது, அவர்: என் ஆத்துமா மரணத்துக் கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது; நீங்கள் இங்கே தங்கி, என்னோடேகூட விழித்திருங்கள் என்று சொல்லி,*

***லூக்கா 1:27, 31, 35, 42*** *[27]தாவீதின் வம்சத்தானாகிய யோசேப்பு என்கிற நாமமுள்ள புருஷனுக்கு நியமிக்கப்பட்டிருந்த ஒரு கன்னிகையினிடத்திற்கு தேவனாலே அனுப்பப்பட்டான்; அந்தக் கன்னிகையின் பேர் மரியாள்.*

*[31]இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக.*

*[35]தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்.*

*[42]உரத்த சத்தமாய்: ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள், உன் கர்ப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது.*

***கலாத்தியர் 4:5*** *காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்.*

***எபிரெயர் 4:15*** *நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்.*

***எபிரெயர் 7:26*** *பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார்.*

## 24. கிறிஸ்து எமது மீட்பராக எத்தகைய பணிகளைச் செய்கிறார்?

*கிறிஸ்து எமது மீட்பராக தீர்க்கதரிசி, ஆசாரியர், அரசன் ஆகிய பணிகளைத் தனது தாழ்த்தப்பட்ட நிலையிலும், உயர்த்தப்பட்ட நிலையிலும் நிறைவேற்றுகிறார்.*

***அப்போஸ்தலர் 3:21-22*** *[21]உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும். [22]மோசே பிதாக்களை நோக்கி: உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்; அவர் உங்களுக்குச் சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்குச் செவிகொடுப்பீர்களாக.*

***எபிரெயர் 5:5-7*** *[5]அந்தப்படியே கிறிஸ்துவும் பிரதான ஆசாரியராயிருக்கிறதற்குத் தம்மைத்தாமே உயர்த்தவில்லை; நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன்*

*என்று அவரோடே சொன்னவரே அவரை உயர்த்தினார். [6]அப்படியே வேறொரு இடத்திலும்: நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று சொல்லியிருக்கிறார். [7]அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு,*

***எபிரெயர் 7:25*** *மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்.*

***சங்கீதம் 2:6*** *நான் என்னுடைய பரிசுத்த பர்வதமாகிய சீயோன்மீதில் என்னுடைய ராஜாவை அபிஷேகம்பண்ணி வைத்தேன் என்றார்.*

***ஏசாயா 9:6-7*** *[6]நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும். [7]தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை; சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்.*

***மத்தேயு 21:4*** *இதோ, உன் ராஜா சாந்தகுணமுள்ளவராய், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறிக்கொண்டு, உன்னிடத்தில் வருகிறார் என்று சீயோன் குமாரத்திக்குச் சொல்லுங்கள் என்று,*

## 25. கிறிஸ்து எவ்வாறு தீர்க்கதரிசியாகிய பணியைச் செய்கிறார்?

*கிறிஸ்து எமது இரட்சிப்பிற்கான தேவசித்தத்தைத் தனது வார்த்தையாலும், ஆவியாலும் வெளிப்படுத்துவதன் மூலம் தீர்க்கதரிசியாகிய பணியைச் செய்கிறார்.*

***யோவான் 1:18*** *தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்.*

***1 பேதுரு 1:10-12*** *[10]உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிசனஞ்சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனைபண்ணினார்கள்; [11]தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள். [12]தங்கள் நிமித்தமல்ல, நமதுநிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது; பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக்கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது; இவைகளை உற்றுப்பார்க்கத் தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்.*

***யோவான் 20:31*** *இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது.*

***யோவான் 14:26*** *என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்.*

## 26. கிறிஸ்து எவ்வாறு ஆசாரியராகிய பணியினைச் செய்கிறார்?

*கிறிஸ்து கடவுளுடைய மக்களின் பாவங்களைப் போக்கி தேவநீதியை சமாதானப்படுத்தும் பலியாகத் தன்னை ஒரே தடவை ஒப்புக் கொடுத்ததன் மூலமும், கடவுளோடு நம்மை ஒப்புரவாக்குதலின் மூலமும், நமக்காகத் தொடர்ந்து மன்றாடுதலின் மூலமும் ஆசாரியராகிய பணியினைச் செய்கிறார்.*

***எபிரெயர் 9:14, 28*** *[14]நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள்*

*மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!*

*[28]கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும் படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக் கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்.*

***எபிரெயர் 2:17*** *அன்றியும், அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக, தேவகாரியங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதா யிருந்தது.*

***ரோமர் 5:10*** *நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப் பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே.*

***எபிரெயர் 7:24-25*** *[24]இவரோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கிற படியினாலே, மாறிப்போகாத ஆசாரியத்துவமுள்ளவராயிருக்கிறார். [25]மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக் கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயு மிருக்கிறார்.*

## 27. கிறிஸ்து அரசராக எவ்வாறு பணி புரிகிறார்?

*தம்முடைய சபையை இந்த உலகத்தில் இருந்து அழைத்து தம்முடைய மக்களாக்கிக் கொள்வதுடன், அதனை ஆண்டு, பாதுகாத்துக் கொள்வதன் மூலமும்; தன்னால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களைத் தன் கீழ் கொண்டு வந்தும், இரட்சித்தும், பாதுகாத்தும், ஆசீர்வதிப்பதன் மூலமும்; தன்னுடையதும், தன்னுடைய மக்களுடையதும் எதிரிகள் அனைவரையும் கட்டுப்படுத்தியும், வெற்றிகொண்டும், பழிவாங்குவதன் மூலமும் கிறிஸ்து அரசராகத் தன் பணியைச் செய்கிறார்.*

***அப்போஸ்தலர் 15:14-17*** *[14]தேவன் புறஜாதிகளினின்று தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தைத் தெரிந்துகொள்ளும்படி முதல்முதல்*

*அவர்களுக்குக் கடாட்சித்தருளின விதத்தைச் சிமியோன் விவரித்துச் சொன்னாரே. [15]அதற்குத் தீர்க்கதரிசிகளுடைய வாக்கியங்களும் ஒத்திருக்கிறது. [16]எப்படியெனில், மற்ற மனுஷரும், என்னுடைய நாமந்தரிக்கப்படும் சகல ஜாதிகளும், கர்த்தரைத் தேடும்படிக்கு, [17]நான் இதற்குப்பின்பு திரும்பிவந்து, விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்து, அதிலே பழுதாய்ப்போனவைகளை மறுபடியும் சீர்ப்படுத்தி, அதைச் செவ்வையாக நிறுத்துவேன் என்று இவைகளையெல்லாஞ்செய்கிற கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது.*

***1 பேதுரு 2:9-10*** *[9]நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். [10]முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை. இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள்; முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள், இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்.*

***எபேசியர் 1:22-23*** *[22]எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, [23]எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்.*

***எபேசியர் 4:11-13*** *[11]மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத் தக்க பூரணபுருஷராகும்வரைக்கும், [12]பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், [13]அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்.*

***ஏசாயா 33:22*** *கர்த்தர் நம்முடைய நியாயாதிபதி, கர்த்தர் நம்முடைய நியாயப்பிரமாணிகர், கர்த்தர் நம்முடைய ராஜா, அவர் நம்மை இரட்சிப்பார்.*

***மத்தேயு 16:18*** *மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ*

*பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை.*

***ஏசாயா 32:1-2*** *[1]இதோ, ஒரு ராஜா நீதியாக அரசாளுவார்; பிரபுக்களும் நியாயமாகத் துரைத்தனம்பண்ணுவார்கள். [2]அவர் காற்றுக்கு ஒதுக்காகவும், பெருவெள்ளத்துக்குப் புகலிடமாகவும், வறண்ட நிலத்துக்கு நீர்க்கால்களாகவும், விடாய்த்த பூமிக்குப் பெருங்கன்மலையின் நிழலாகவும் இருப்பார்.*

***சங்கீதம் 110:2-3*** *[2]கர்த்தர் சீயோனிலிருந்து உமது வல்லமையின் செங்கோலை அனுப்புவார்; நீர் உம்முடைய சத்துருக்களின் நடுவே ஆளுகைசெய்யும். [3]உமது பராக்கிரமத்தின் நாளிலே உம்முடைய ஜனங்கள் மனப்பூர்வமும் பரிசுத்த அலங்காரமுமுள்ளவர்களாயிருப்பார்கள்; விடியற்காலத்துக் கர்ப்பத்தில் பிறக்கும் பனிக்குச் சமானமாய் உம்முடைய யௌவன ஜனம் உமக்குப் பிறக்கும்.*

***அப்போஸ்தலர் 5:31*** *இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக, அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலதுகரத்தினாலே உயர்த்தினார்.*

***ஏசாயா 63:9*** *அவர்களுடைய எல்லா நெருக்கத்திலும் அவர் நெருக்கப்பட்டார்; அவருடைய சமுகத்தின் தூதனானவர் அவர்களை இரட்சித்தார்; அவர் தமது அன்பினிமித்தமும், தமது பரிதாபத்தினிமித்தமும் அவர்களை மீட்டு, பூர்வநாட்களிலெல்லாம் அவர்களைத் தூக்கிச்சுமந்துவந்தார்.*

***வெளிப்படுத்தின விசேஷம் 2:10*** *நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்.*

***வெளிப்படுத்தின விசேஷம் 22:12*** *இதோ, சீக்கிரமாய் வருகிறேன், அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது.*

***1 கொரிந்தியர் 15:25*** *எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப் போடும்வரைக்கும், அவர் ஆளுகைசெய்ய வேண்டியது.*

***2 தெசலோனிக்கேயர் 1:8-9*** *[8]கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும். [9]அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும், அவர் வரும்போது,*

## 28. கிறிஸ்துவின் தாழ்மை எதில் அடங்கியுள்ளது?

*கிறிஸ்துவின் தாழ்மை அவரது பிறப்பிலும், தாழ்நிலையில் பிறந்ததிலும், நியாயப்பிரமாணத்தின் கீழ் வந்ததிலும், இவ்வுலக வாழ்வில் எல்லாத் துன்பங்களையும் அனுபவித்ததிலும், தேவ கோபம், சபிக்கப்பட்ட சிலுவை மரணம், ஆகியவற்றை அனுபவித்து, புதைக்கப்பட்டு, மரணத்தின் வல்லமையின் கீழ் சிறிது காலம் தொடர்ந்திருந்ததிலும் தங்கியுள்ளது.*

***லூக்கா 2:7*** *அவள் தன் முதற்பேறான குமாரனைப்பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாதிருந்தபடியினால், பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தினாள்.*

***கலாத்தியர் 4:5*** *காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்.*

***எபிரெயர் 12:2-3*** *[2]அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். [3]ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்.*

***ஏசாயா 53:2-3*** *[2]இளங்கிளையைப்போலவும், வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப்போலவும் அவனுக்கு முன்பாக எழும்புகிறார்; அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை; அவரைப் பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது. [3]அவர் அசட்டைபண்ணப்பட்டவரும்,*

*மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்; அவரைவிட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம்; அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற்போனோம்.*

***லூக்கா 22:44*** *அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார் அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது.*

***மத்தேயு 27:46*** *ஒன்பதாம்மணி நேரத்தில் இயேசு: ஏலி! ஏலி! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்.*

***பிலிப்பியர் 2:8*** *அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.*

***1 கொரிந்தியர் 15:3-4*** *[3]நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து,*
*[4]அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்து,*

***அப்போஸ்தலர் 2:24-27, 31*** *[24]தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார். அவர்*
*மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக்கூடாதிருந்தது. [25]அவரைக்*
*குறித்துத் தாவீது: கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக நிறுத்தி நோக்கிக்கொண்டிருக்கிறேன்; நான் அசைக்கப்படாதபடி அவர்*
*என் வலதுபாரிசத்திலே இருக்கிறார்; [26]அதினாலே என் இருதயம்*
*மகிழ்ந்தது, என் நாவு களிகூர்ந்தது, என் மாம்சமும் நம்பிக்கையோடே*
*தங்கியிருக்கும்; [27]என் ஆத்துமாவைப் பாதாளத்தில்விடீர்,*
*உம்முடைய பரிசுத்தர் அழிவைக் காணவொட்டீர்;*

*[31]அவன் கிறிஸ்துவினுடைய ஆத்துமா பாதாளத்திலே விடப்படுவதில்லையென்றும், அவருடைய மாம்சம் அழிவைக் காண்பதில்லையென்றும் முன்னறிந்து, அவர் உயிர்த்தெழுதலைக் குறித்து இப்படிச் சொன்னான்.*

## 29. கிறிஸ்துவின் மகிமைத்துவம் எதில் அடங்கியுள்ளது?

*கிறிஸ்துவின் மகிமைத்துவம் மூன்றாம் நாளில் அவர் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்ததிலும், பரலோகத்திற்கு உயரெடுக்கப்பட்டதிலும், பிதாவின் வலது பக்கத்தில் அமர்ந்திருப்பதிலும், கடைசி நாளில் உலகை நியாயந்தீர்க்க வருவதிலும் அடங்கியுள்ளது.*

***1 கொரிந்தியர் 15:4*** *அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்து,*

***மாற்கு 16:19*** *இவ்விதமாய்க் கர்த்தர் அவர்களுடனே பேசினபின்பு, பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார்.*

***அப்போஸ்தலர் 1:9-11*** *[9]இவைகளை அவர் சொன்னபின்பு, அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில், உயர எடுத்துக்கொள்ளப்பட்டார்; அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது. [10]அவர் போகிறபோது அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டுபேர் அவர்களருகே நின்று: [11]கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்.*

***எபேசியர் 1:20-23*** *[20]எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக, [21]அவரை உன்னதங்களில் தம்முடைய வலதுபாரிசத்தில் உட்காரும்படி செய்து, [22]எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, [23]எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்.*

***அப்போஸ்தலர் 17:31*** *மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து*

*எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப் பண்ணினார் என்றான்.*

## 30. கிறிஸ்துவால் விலை கொடுத்துப் பெறப்பட்ட மீட்பில் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் எவ்வாறு பங்குகொள்ளும்படி செய்யப்படுகிறார்கள்?

*கிறிஸ்துவால் விலை கொடுத்துப் பெறப்பட்ட மீட்பினை பரிசுத்த ஆவி நம்மில் திட்ப உறுதியாக செயல்படுத்துவதன் மூலம் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அதில் பங்கு கொள்ளும்படிச் செய்யப்படுகிறார்கள்.*

***ரோமர் 8:29*** *தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்;*

***யோவான் 1:11-12*** *[11]அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. [12]அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்.*

***தீத்து 3:5-7*** *[5]நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்கு தலினாலும் நம்மை இரட்சித்தார். [6]தமது கிருபையினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு, நித்திய ஜீவனுண்டாகும் என்கிற நம்பிக்கையின்படி சுதந்தரராகத்தக்கதாக, [7]அவர் தமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மூலமாய், அந்தப் பரிசுத்த ஆவியை நம்மேல் சம்பூரணமாய்ப் பொழிந்தருளினார்.*

## 31. கிறிஸ்துவால் விலைகொடுத்துப் பெறப்பட்ட மீட்பை பிதா, ஆவியானவர் மூலம் தெரிந்துகொள்ளப்பட்டவர்களில் எவ்வாறு செயல்படுத்துகிறார்?

*கிறிஸ்துவால் விலை கொடுத்துப் பெறப்பட்ட மீட்பை பிதா, ஆவியானவர் மூலம்*

*தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு விசுவாசத்தை அளிப்பதன் மூலமும், திட்ப உறுதியான அழைப்பின் மூலம் அவர்களைக் கிறிஸ்துவோடு இணைப்பதன் மூலமும் செயல்படுத்துகிறார்.*

***யோவான் 6:37, 39*** *[37]பிதாவானவர் எனக்குக் கொடுக்கிறயாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை.*

*[39]அவர் எனக்குத் தந்தவைகளில் ஒன்றையும் நான் இழந்துபோகாமல், கடைசி நாளில் அவைகளை எழுப்புவதே என்னை அனுப்பின பிதாவின் சித்தமாயிருக்கிறது.*

***எபேசியர் 2:8*** *கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு;*

***பிலிப்பியர் 1:29*** *ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது.*

***யோவான் 1:12-13*** *[12]அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். [13]அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள். (**யோவான் 3:5** இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.)*

***1 கொரிந்தியர் 1:9*** *தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்.*

***யோவான் 6:44*** *என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசிநாளில் நான் அவனை எழுப்புவேன்.*

## 32. திட்ப உறுதியான அழைப்பு (Effectual Calling) என்றால் என்ன?

*திட்ப உறுதியான அழைப்பு என்பது பிதாவாகிய கடவுளின் வல்லமையாலும், கிருபையாலும் நிகழும் ஆவியின் செயலாகும்; இதன் மூலம் அவர் தனது வார்த்தையாலும் ஆவியினாலும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை இயேசு கிறிஸ்துவிடம் அழைக்கவும், வரவும் செய்கிறார். அத்தோடு அவர்களுடைய பாவத்தையும், துன்பங்களையும் உணர்த்தி, கிறிஸ்துவைக் குறித்த அறிவின் மூலம் அவர்களுடைய அகக் கண்களைத் திறந்து, சித்தத்தைப் புதுப்பித்து, நற்செய்தியின் மூலம் இலவசமாக வழங்கப்படும் கிறிஸ்துவை அவர்கள் நாடித் தழுவிக்கொள்ளும்படியாக அறிவுறுத்தி இணங்க வைக்கிறார்.*

***2 தீமோத்தேயு 1:8-9*** *[8]ஆகையால் நம்முடைய கர்த்தரைப் பற்றிய சாட்சியைக் குறித்தாவது, அவர் நிமித்தம் கட்டப்பட்டிருக்கிற என்னைக் குறித்தாவது, நீ வெட்கப்படாமல், தேவ வல்லமைக் கேற்றபடி சுவிசேஷத்திற்காக என்னோடேகூடத் தீங்கநுபவி. [9]அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சியாமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிகாலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும், நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்.*

***1 கொரிந்தியர் 1:9*** *தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்.*

***ரோமர் 8:29-30*** *[29]தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்; [30]எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்.*

***2 தெசலோனிக்கேயர் 2:13-14*** *[13]கர்த்தருக்குப் பிரியமான சகோதரரே, நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும், சத்தியத்தை*

*விசுவாசிக்கிறதினாலும் இரட்சிப்படையும்படிக்கு, ஆதிமுதல் தேவன் உங்களைத் தெரிந்துகொண்டபடியினாலே, நாங்கள் உங்களைக்குறித்து எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். [14]நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையை அடையும்பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்.*

***யாக்கோபு 1:18*** *அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜநிப்பித்தார்.*

***1 பேதுரு 1:23, 25*** *[23]அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே.*

*[25]கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்; உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டுவருகிற வசனம் இதுவே.*

***யோவான் 6:63*** *ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது.*

***யோவான் 1:12-13*** *[12]அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். [13]அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்.*

***1 கொரிந்தியர் 1:9*** *தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்.*

***யோவான் 6:44*** *என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசிநாளில் நான் அவனை எழுப்புவேன்.*

***யோவான் 16:8-11*** *[8]அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். [9]அவர்கள் என்னை விசுவாசியாதபடியினாலே*

*பாவத்தைக்குறித்தும், [10]நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே நீதியைக்குறித்தும், [11]இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்பட்டதினாலே நியாயத்தீர்ப்பைக்குறித்தும், கண்டித்து உணர்த்துவார்.*

***மத்தேயு 16:16-17*** *[16]சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். [17]இயேசு அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்த வில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்.*

***அப்போஸ்தலர் 26:18*** *அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக, அவர்கள் இருளை விட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டுத் தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும்பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார்.*

***எசேக்கியேல் 36:26-27*** *[26]உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன். [27]உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும்பண்ணுவேன்.*

***சங்கீதம் 110:3*** *உமது பராக்கிரமத்தின் நாளிலே உம்முடைய ஜனங்கள் மனப்பூர்வமும் பரிசுத்த அலங்காரமுமுள்ளவர்களாயிருப்பார்கள்; விடியற்காலத்துக் கர்ப்பத்தில் பிறக்கும் பனிக்குச் சமானமாய் உம்முடைய யௌவன ஜனம் உமக்குப் பிறக்கும்.*

***யோவான் 6:44-45*** *[44]என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசிநாளில் நான் அவனை எழுப்புவேன். [45]எல்லாரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள் என்று தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதியிருக்கிறதே; ஆகையால் பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக்கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான்.*

***பிலிப்பியர் 2:13*** *ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள*

*சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்.*

***உபாகமம் 30:6*** *உன் தேவனாகிய கர்த்தரில் நீ உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் அன்புகூர்ந்து பிழைக்கும்படி, உன் தேவனாகிய கர்த்தர் உன் இருதயத்தையும் உன் சந்ததியாரின் இருதயத்தையும் விருத்தசேதனம்பண்ணி,*

***மத்தேயு 11:25-28*** *[25]அந்தச் சமயத்திலே இயேசு சொன்னது: பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். [26]ஆம், பிதாவே! இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது. [27]சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது; பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான்; குமாரனும், குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர, வேறொருவனும் பிதாவை அறியான். [28]வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.*

## 33. திட்ப உறுதியாக அழைக்கப்பட்டவர்கள் இவ்வுலகில் எத்தகைய பயன்களை அனுபவிக்கின்றனர்?

*திட்ப உறுதியாக அழைக்கப்பட்டவர்கள் இவ்வுலகில் நீதிமானாக்குதல், மகவேட்பு, பரிசுத்தமாக்குதல் ஆகியவற்றையும் அவற்றிலிருந்து பெறப்படுகின்றவையும், அவற்றோடிணைந்து வருகின்றவையுமாகிய பல்வேறு பயன்களையும் அனுபவிக்கின்றனர்.*

***ரோமர் 8:30*** *எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்.*

***எபேசியர் 1:5-6*** *[5]பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக, [6]தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார்.*

***1 கொரிந்தியர் 6:11*** *உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்;*

*ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப் பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்.*

***1 கொரிந்தியர் 1:26, 30-31*** *[26]எப்படியெனில், சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை.*

*[30]அந்தப்படி, நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட் பட்டிருக்கிறீர்கள். எழுதியிருக்கிறபடி மேன்மை பாராட்டு கிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மைபாராட்டத்தக்கதாக,*
*[31]அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்.*

## 34. நீதிமானாக்குதல் (Justification) என்றால் என்ன?

*நீதிமானாக்குதல் என்பது திட்ப உறுதியாக இயேசு கிறிஸ்துவிடம் அழைக்கப்படும் பாவிகளுக்கான கடவுளின் இலவசமான கிருபையின் செயலாகும்; இதன் மூலம் கடவுள் அவர்களுடைய பாவங்களனைத்தையும் மன்னித்து, விசுவாசத்தின் மூலம் மட்டுமே அடையக்கூடிய கிறிஸ்துவின் நீதி அவர்களுடைய கணக்கில் வைக்கப்பட்ட ஒரே காரணத்திற்காக தன் சமூகத்தில் அவர்களை நீதிமான்களாக ஏற்றுக்கொள்ளுகிறார்.*

***ரோமர் 3:24-26*** *[24]இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படு கிறார்கள்; [25]தேவன் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களைத் தாம் பொறுத்துக்கொண்டதைக்குறித்துத் தம்முடைய நீதியைக் காண்பிக்கும்பொருட்டாகவும், தாம் நீதியுள்ளவரும், இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய் விளங்கும்படி, இக்காலத்திலே தமது நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும், [26]கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார்.*

***ரோமர் 8:30*** *எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை*

*நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்.*

***ரோமர் 4:6-8*** [6]*அந்தப்படி, கிரியைகளில்லாமல் தேவனாலே நீதிமான் என்று எண்ணப்படுகிற மனுஷனுடைய பாக்கியத்தைக் காண்பிக்கும் பொருட்டு:* [7]*எவர்களுடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டதோ, எவர்களுடைய பாவங்கள் மூடப்பட்டதோ, அவர்கள் பாக்கியவான்கள்.* [8]*எவனுடைய பாவத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, அவன் பாக்கியவான் என்று தாவீது சொல்லியிருக்கிறான்.*

***2 கொரிந்தியர் 5:19, 21*** [19]*அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்.*

[21]*நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.*

***ரோமர் 5:17-19*** [17]*அல்லாமலும், ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன்மூலமாய், மரணம் ஆண்டுகொண்டிருக்க, கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசு கிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிகநிச்சயமாமே.* [18]*ஆகையால் ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரேநீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று.* [19]*அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்.*

***கலாத்தியர் 2:16-17*** [16]*நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே.* [17]*கிறிஸ்துவுக்குள் நீதிமான்களாக்கப்படும்படி நாடுகிற நாமும் பாவிகளாகக் காணப்படுவோமானால், கிறிஸ்து பாவத்திற்குக் காரணரோ? அல்லவே.*

***பிலிப்பியர் 3:9*** *நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான*

*நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும்,*

## 35. மகவேட்பு (Adoption) என்றால் என்ன?

*மகவேட்பு கர்த்தருடைய இலவசமான கிருபையின் செயலாகும்; அதன் மூலம், நீதிமான்களாக்கப்பட்ட அனைவரும் அவரது மக்களின் எண்ணிக்கையில் சேர்க்கப்பட்டு கடவுளின் பிள்ளைகளுக்கு சொந்தமான அனைத்துப் பயன்களுக்கும் உரிமையுடையவர்களாகிறார்கள்.*

*1 **யோவான்** 3:1 நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை.*

***யோவான்** 1:12 அவருடைய நாமத்தின்மேல் விசுவாச முள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்.*

***ரோமர்** 8:17 நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்.*

## 36. பரிசுத்தமாக்குதல் (Sanctification) என்றால் என்ன?

*பரிசுத்தமாக்குதல் கடவுளின் இலவசமான கிருபையின் செயலாகும்; அதன் மூலம் அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் தம்மில் முழுமையாக கடவுளின் செயலின்படி புதுப்பிக்கப்பட்டு, மேலும் மேலும் பாவத்திற்கு மரிக்கும்படியும், நீதிமான்களாக வாழும்படியும் செய்யப்படுகிறார்கள்.*

*2 **தெசலோனிக்கேயர்** 2:13 கர்த்தருக்குப் பிரியமான சகோதரரே, நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும், சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும் இரட்சிப்படையும்படிக்கு, ஆதிமுதல் தேவன் உங்களைத் தெரிந்துகொண்டபடியினாலே, நாங்கள்*

*உங்களைக்குறித்து எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்.*

***எபேசியர் 4:23-24*** *[23]உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, [24]மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்.*

***ரோமர் 6:4-6*** *[4]மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம். [5]ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். [6]நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்.*

***கலாத்தியர் 5:24*** *கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்.*

***1 யோவான் 5:4*** *தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.*

***ரோமர் 8:1*** *ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை.*

***பிலிப்பியர் 1:5-6*** *[5]உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி, [6]நான் உங்களை நினைக்கிறபொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்.*

***பிலிப்பியர் 2:12-13*** *[12]ஆதலால், எனக்குப் பிரியமானவர்களே, நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே, நான் உங்களுக்குச் சமீபமாயிருக்கும்பொழுது மாத்திரமல்ல, நான் தூரமாயிருக்கிற இப்பொழுதும், அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள். [13]ஏனெனில்*

*தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்.*

## 37. நீதிமானாக்குதல், மகவேட்பு, பரிசுத்தமாக்குதல் ஆகியவற்றோடு இணைந்துவரும் அல்லது அவை இவ்வுலக வாழ்வில் அளிக்கும் பயன்கள் யாவை?

*தேவ அன்பின் நிச்சயத்துவம், மனச்சாட்சியின் சமாதானம், பரிசுத்த ஆவியின் ஆனந்தம், கிருபையின் வளர்ச்சி, கிறிஸ்தவ வாழ்க்கையில் இறுதிவரை நிலைத்திருக்கக்கூடிய விடாமுயற்சி ஆகியவை நீதிமானாக்குதல், மகவேட்பு, பரிசுத்தமாக்குதல் ஆகியவற்றோடிணைந்து வருகின்ற அல்லது அவற்றின் மூலம் இவ்வுலகில் அனுபவிக்கக்கூடிய பயன்களாக இருக்கின்றன.*

***ரோமர் 5:1-2, 5*** *[1]இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். [2]அவர்மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலைகொண்டிருந்து, தேவமகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மைபாராட்டுகிறோம்.*

*[5]மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவஅன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது.*

***ரோமர் 14:17*** *தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது.*

***நீதிமொழிகள் 4:18*** *நீதிமான்களுடைய பாதை நடுப்பகல்வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம்போலிருக்கும்.*

***1 பேதுரு 1:5*** *கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக்கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.*

### 38. மரிக்கும்போது, கிறிஸ்துவிடம் இருந்து விசுவாசிகள் அடையும் பயன்கள் யாவை?

*மரிக்கும்போது விசுவாசிகளின் ஆவிகள் பூரணமான பரிசுத்தத்தை அடைவதோடு உடனடியாக மகிமையை அடைகின்றன; தொடர்ந்தும் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டுள்ள அவர்களுடைய சரீரங்கள் உயிர்த்தெழுதல் வரையும் கல்லறையில் அயர்ந்திருக்கின்றன.*

***எபிரெயர் 12:23-24*** *[23]பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், [24]புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப்பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்.*

***2 கொரிந்தியர் 5:1, 6, 8*** *[1]பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்.*

*[6]நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்.*

*[8]நாம் தைரியமாகவேயிருந்து, இந்தத் தேகத்தை விட்டுக் குடி போகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்.*

***பிலிப்பியர் 1:23*** *ஏனெனில் இவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன்; தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும்;*

***லூக்கா 23:43*** *இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.*

***1 தெசலோனிக்கேயர் 4:14*** *இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார்.*

***ஏசாயா 57:2*** *நேர்மையாய் நடந்தவர்கள் சமாதானத்துக்குள் பிரவேசித்து, தங்கள் படுக்கைகளில் இளைப்பாறுகிறார்கள்.*

***யோபு 19:26-27*** *[26]இந்த என் தோல்முதலானவை அழுகிப் போனபின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன். [27]அவரை நானே பார்ப்பேன்; அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும்; இந்த வாஞ்சையால் என் உள்ளிந்திரியங்கள் எனக்குள் சோர்ந்துபோகிறது.*

***1 தெசலோனிக்கேயர் 4:16*** *ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும்,தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.*

## 39. மரிக்கும்போது துன்மார்க்கர்களுக்கு நேர்வதென்ன?

*மரிக்கும்போது துன்மார்க்கர்களின் ஆவிகள் பாதாளத்தின் வேதனையை அனுபவிக்கும்படியாக தள்ளப்படுவதோடு, உயிர்த்தெழுதலும் நியாயத்தீர்ப்பும் நிகழும் பெருநாள்வரையிலும் அவர்களுடைய சரீரங்கள் கல்லறைகளில் தங்கியிருக்கின்றன.*

***லூக்கா 16:23-24*** *[23]பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான். [24]அப்பொழுது அவன்: தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும்; இந்த அக்கினிஜுவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான்.*

***அப்போஸ்தலர் 24:15*** *நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது உண்டென்று இவர்கள் தேவனிடத்தில் நம்பிக்கைகொண்டிருக்கிறதுபோல, நானும் நம்பிக்கை கொண்டிருக்கிறேன்.*

***யோவான் 5:28-29*** *[28]இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; [29]அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்.*

***2 பேதுரு 2:9*** *கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று*

*இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்.*

## 40. உயிர்த்தெழுதலின்போது கிறிஸ்துவிடம் இருந்து எத்தகைய பயன்களை விசுவாசிகள் அடைகிறார்கள்?

*உயிர்த்தெழுதலின்போது, விசுவாசிகள் மகிமையில் எழுப்பப்பட்டு, நியாயத்தீர்ப்பின் நாளில் வெளிப்படையாக வரவேற்கப்பட்டு, குற்றவாளிகளல்லவென்று தீர்ப்பளிக்கப்பட்டு விடுவிக்கப்படுவார்கள். அத்தோடு, நித்தியத்திற்கும் கர்த்தரை முழுமையாக அனுபவிக்கும்படியாக பூரணமான ஆசீர்வாதத்தையும் அடைவார்கள்.*

***பிலிப்பியர் 3:21*** *அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்.*

***1 கொரிந்தியர் 15:42-43*** *[42]மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும்; [43]கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும்.*

***மத்தேயு 25:23*** *அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்.*

***மத்தேயு 10:32*** *மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கைபண்ணுவேன்.*

***1 யோவான் 3:2*** *பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்.*

***1 கொரிந்தியர் 13:12*** *இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம். இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்ளுவேன்.*

***1 தெசலோனிக்கேயர் 4:17-18*** *[17]பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர் களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம். [18]ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்.*

## 41. நியாயத்தீர்ப்பு நாளில் துன்மார்க்கர்களுக்கு என்ன நடக்கப்போகின்றது?

*நியாயத்தீர்ப்பு நாளில் துன்மார்க்கர்கள் அவமதிப்புக்குள்ளாகும்படியாக எழுப்பப்பட்டு, பிசாசுடனும் அவனது தூதர்களுடனும் சேர்ந்து வார்த்தையால் விவரிக்க முடியாத கொடூரத்தை நரகத்தில் தங்களுடைய சரீரத்திலும், ஆவியிலும் நித்தியத்துக்கும் அனுபவிக்கும்படியாகத் தண்டிக்கப்படுவார்கள்.*

***யோவான் 5:28-29*** *[28]இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; [29]அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்.*

***தானியேல் 12:2*** *பூமியின் தூளிலே நித்திரைபண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்தியஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்.*

***2 தெசலோனிக்கேயர் 1:8-9*** *[8]கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும். [9]அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும், அவர் வரும்போது,*

***மத்தேயு 13:49-50*** *[49]இப்படியே உலகத்தின் முடிவிலே நடக்கும். தேவதூதர்கள் புறப்பட்டு, நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைப் பிரித்து, [50]அவர்களை அக்கினிச்சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றார்.*

***வெளிப்படுத்தின விசேஷம் 14:10-11*** *[10]அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப் பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து, பரிசுத்த தூதர்களுக்குமுன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்குமுன்பாகவும் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான். [11]அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும்: மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்குகிறவர்களுக்கும், அதினுடைய நாமத்தின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிற எவனுக்கும் இரவும் பகலும் இளைப்பாறுதலிராது.*

***மத்தேயு 25:41, 46*** *[41]அப்பொழுது, இடதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்.*

*[46]அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்.*

## 42. கடவுள், மனிதனிடமிருந்து எத்தகைய கடமையை எதிர்பார்க்கிறார்?

*கடவுள் தான் வெளிப்படுத்தியுள்ள சித்தத்தை மனிதன் நிறைவேற்ற வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்.*

***பிரசங்கி 12:13-14*** *[13]காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே. [14]ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்.*

***மீகா 6:8*** *மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்.*

## 43. மனிதன் கீழ்ப்படிவதற்காக படைப்பில் கடவுள் வெளிப்படுத்திய விதி என்ன?

*மனிதன் கீழ்ப்படிவதற்காக கடவுள் படைப்பில் ஒழுக்க நியதிகளை வெளிப்படுத்தினார்.*

***ரோமர் 2:14-15*** *[14]அன்றியும் நியாயப்பிரமாணமில்லாத புறஜாதிகள் சுபாவமாய் நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறபோது, நியாயப் பிரமாணமில்லாத அவர்கள் தங்களுக்குத் தாங்களே நியாயப் பிரமாணமாயிருக்கிறார்கள். [15]அவர்களுடைய மனச்சாட்சியும்கூடச் சாட்சியிடுகிறதினாலும், குற்றமுண்டு குற்றமில்லையென்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிறதினாலும், நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியை தங்கள் இருதயங்களில் எழுதியிருக்கிறதென்று காண்பிக்கிறார்கள்.*

## 44. ஒழுக்க நியதிகள் (Moral Law) எங்கே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன?

*ஒழுக்க நியதிகள் பத்துக்கட்டளைகளில் சுருக்கமாக அடங்கியுள்ளன.*

***உபாகமம் 10:4*** *முன்னே சபைகூடிவந்த நாளில் கர்த்தர் மலையில் அக்கினி நடுவிலிருந்து உங்களுக்கு விளம்பின பத்துக்கற்பனைகளையும் அவர் முன் எழுதியிருந்தபிரகாரம் அந்தப் பலகைகளில் எழுதி, அவைகளை என்னிடத்தில் தந்தார்.*

***மத்தேயு 19:17*** *அதற்கு அவர்: நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே; நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள் என்றார்.*

## 45. பத்துக்கட்டளைகள் எதைப் போதிக்கின்றன?

*பத்துக்கட்டளைகள், நாம் நமது தேவனாகிய கர்த்தரை முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும், முழு மனத்தோடும் அன்பு கூருவதோடு நம்மில் நாம் அன்புகூருகிறது போல் பிறரிடத்திலும் அன்புகூர வேண்டும் என்று போதிக்கின்றன.*

***மத்தேயு 22:37-40*** *[37]இயேசு அவனை நோக்கி: உன் தேவனாகிய*

*கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; [38]இது முதலாம் பிரதான கற்பனை. [39]இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே. [40]இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்றார்.*

## 46. பத்துக்கட்டளைகள் எவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன?

*உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே என்ற வார்த்தைகளுடன் பத்துக்கட்டளைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.*

***யாத்திராகமம் 20:2*** *உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே.*

## 47. பத்துக்கட்டளைகளின் அறிமுக வார்த்தைகள் எதை நமக்குப் போதிக்கின்றன?

*கர்த்தர் நம் ஆண்டவராகவும், தேவனாகவும், மீட்பராகவும் இருப்பதால் அவருடைய அனைத்துக் கட்டளைகளையும் நாம் கடைப்பிடிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்று பத்துக்கட்டளைகளின் அறிமுக வார்த்தைகள் நமக்குப் போதிக்கின்றன.*

***சங்கீதம் 100:2-3*** *[2]மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனைசெய்து, ஆனந்தசத்தத்தோடே அவர் சந்நிதிமுன் வாருங்கள். [3]கர்த்தரே தேவனென்று அறியுங்கள்; நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார்; நாம் அவர் ஜனங்களும், அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம்.*

***எரேமியா 10:7*** *ஜாதிகளின் ராஜாவே, உமக்குப் பயப்படாதிருப்பவன் யார்? தேவரீருக்கே பயப்படவேண்டியது; ஜாதிகளுடைய எல்லா ஞானிகளிலும், அவர்களுடைய எல்லா ராஜ்யத்திலும் உமக்கு ஒப்பானவன் இல்லை.*

***உபாகமம் 11:1*** *நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து, அவருடைய பிரமாணங்களையும், அவருடைய கட்டளைகளையும், அவருடைய நியாயங்களையும், அவருடைய கற்பனைகளையும் எப்பொழுதும் கைக்கொள்வாயாக.*

***லூக்கா 1:74-75*** *[74]தமது ஜனத்தைச் சந்தித்து மீட்டுக்கொண்டு, நம்முடைய சத்துருக்களினின்றும், நம்மைப் பகைக்கிற யாவருடைய கைகளினின்றும், நம்மை இரட்சிக்கும்படிக்கு, [75]தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு இரட்சணியக்கொம்பை ஏற்படுத்தினார்.*

## 48. முதலாவது கட்டளை என்ன?

*என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் இருக்க வேண்டாம் என்பது முதலாவது கட்டளை.*

***யாத்திராகமம் 20:3*** *என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.*

## 49. முதலாவது கட்டளை எதைக் கோருகிறது?

*முதலாவது கட்டளை, கர்த்தர் ஒருவரே மெய்யான தேவனென்றும், அவர் மட்டுமே நமது தேவன் என்றும் நாம் அவரை அறிந்து, ஏற்று, ஆராதித்து, மகிமைப்படுத்த வேண்டும் என்றும் கோருகிறது.*

***1 நாளாகமம் 28:9*** *என் குமாரனாகிய சாலொமோனே, நீ உன் பிதாவின் தேவனை அறிந்து, அவரை உத்தம இருதயத்தோடும் உற்சாக மனதோடும் சேவி; கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார்; நீ அவரைத் தேடினால் உனக்குத் தென்படுவார்; நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார்.*

***உபாகமம் 26:17*** *கர்த்தர் எனக்கு தேவனாயிருப்பார் என்றும், நான் அவர் வழிகளில் நடந்து, அவர் கட்டளைகளையும் அவர் கற்பனைகளையும் அவர் நியாயங்களையும் கைக்கொண்டு, அவர் சத்தத்திற்குக் கீழ்ப்படிவேன் என்றும் நீ இன்று அவருக்கு வாக்குக்கொடுத்தாய்.*

***மத்தேயு 4:10*** *அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே;*

*உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்.*

***சங்கீதம் 29:2*** *கர்த்தருடைய நாமத்திற்குரிய மகிமையை அவருக்குச் செலுத்துங்கள்; பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்.*

## 50. முதலாவது கட்டளை எதைத் தடை செய்கிறது?

*முதலாவது கட்டளை மெய்யான தேவனை, நிராகரிப்பதையும், அவரை நமது தேவனாக ஏற்று ஆராதிக்காமலும், மகிமைப்படுத்தாமலும் இருப்பதையும், அவருக்கு மட்டுமே உரிய அத்தகைய ஆராதனையையும், மகிமையையும் வேறு எவருக்குமோ அல்லது எதற்குமோ அளிப்பதையும் தடை செய்கிறது.*

***சங்கீதம் 14:1*** *தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான். அவர்கள் தங்களைக் கெடுத்து, அருவருப்பான கிரியைகளைச் செய்துவருகிறார்கள்; நன்மைசெய்கிறவன் ஒருவனும் இல்லை.*

***ரோமர் 1:20-21*** *[20]எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை. [21]அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது.*

***சங்கீதம் 81:10-11*** *[10]உன்னை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப் பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே; உன் வாயை விரிவாய்த்திற, நான் அதை நிரப்புவேன். [11]என் ஜனமோ என் சத்தத்துக்குச் செவிகொடுக்கவில்லை; இஸ்ரவேல் என்னை விரும்பவில்லை.*

***ரோமர் 1:25-26*** *[25]தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள், அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். ஆமென். [26]இதினிமித்தம் தேவன்*

*அவர்களை இழிவான இச்சைரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்; அந்தப்படியே அவர்களுடைய பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள்.*

### 51. 'என்னையன்றி' என்ற பதத்தின் மூலம் முதலாவது கட்டளை எதை சிறப்பாகப் போதிக்கின்றது?

*அனைத்தையும் பார்த்துக் கொண்டும், அவற்றைக் கவனிக்கவும் செய்கின்ற கடவுள், எவரும் வேறு தேவர்களை வைத்து வணங்கும் பாவத்தை வெறுப்பவராய் இருக்கிறார் என்பதை 'என்னையன்றி' என்ற பதத்தின் மூலம் முதலாவது கட்டளை சிறப்பாகப் போதிக்கின்றது.*

***சங்கீதம் 44:20-21*** *[20]நாங்கள் எங்கள் தேவனுடைய நாமத்தை மறந்து, அந்நியதேவனை நோக்கிக் கையெடுத்திருந்தோமானால், [21]தேவன் அதை ஆராய்ந்து, விசாரியாதிருப்பாரோ? இருதயத்தின் அந்தரங்கங்களை அவர் அறிந்திருக்கிறாரே.*

### 52. இரண்டாவது கட்டளை என்ன?

*இரண்டாம் கட்டளையாவது, மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக்குறித்துப் பிள்ளைகளுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறேன். என்னிடத்தில் அன்புகூர்ந்து என் கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறை மட்டும் இரக்கம் காட்டுகிறவராய் இருக்கிறேன் என்பதாகும்.*

***யாத்திராகமம் 20:4-6*** *[4]மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும்*

*நீ உனக்கு உண்டாக்கவேண்டாம்; [5]நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன். [6]என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ்செய்கிறவராயிருக்கிறேன்.*

## 53. இரண்டாம் கட்டளை எதைக் கோருகிறது?

*கர்த்தர் தன் வார்த்தையில் நியமித்திருக்கும் ஆராதனை முறைகளையும், திருநியமங்களையும் நாம் ஏற்று முழுமையாகவும் பரிசுத்தமாகவும் பின்பற்ற வேண்டுமென்று இரண்டாம் கட்டளை கோருகிறது.*

***யோவான் 4:24*** *தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார்.*

***உபாகமம் 32:46*** *அவர்களை நோக்கி: இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளின்படியெல்லாம் உங்கள் பிள்ளைகள் செய்யும்படி கவனமாயிருக்க, நீங்கள் அவர்களுக்குக் கற்பிக்கும்படி, நான் இன்று உங்களுக்குச் சாட்சியாய் ஒப்புவிக்கிற வார்த்தைகளையெல்லாம் உங்கள் மனதிலே வையுங்கள்.*

***மத்தேயு 28:20*** *நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.*

***அப்போஸ்தலர் 2:42*** *அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.*

***உபாகமம் 12:13-14, 32*** *[13]கண்ட இடமெல்லாம் நீ உன் சர்வாங்க தகன பலிகளை இடாதபடிக்கு எச்சரிக்கையாயிரு. [14]உன் கோத்திரங்கள் ஒன்றில் கர்த்தர் தெரிந்துகொள்ளும் இடத்தில்மாத்திரம் நீ உன் சர்வாங்க தகனபலிகளையிட்டு, நான் உனக்குக் கற்பிக்கிற யாவையும் அங்கே செய்வாயாக.*

*[32]நான் உனக்கு விதிக்கிற யாவையும் செய்யும்படி கவனமாயிரு; நீ அதனோடே ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்.*

***மாற்கு 7:6-8*** *[6]அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: இந்த ஜனங்கள் தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது என்றும்,*
*[7]மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்றும், எழுதியிருக்கிற பிரகாரம், மாயக்காரராகிய உங்களைக் குறித்து, ஏசாயா நன்றாய்த் தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறான்.*
*[8]நீங்கள் தேவனுடைய கட்டளையைத் தள்ளிவிட்டு, மனுஷருடைய பாரம்பரியத்தைக் கைக்கொண்டுவருகிறவர்களாய், கிண்ணங்களையும் செம்புகளையும் கழுவுகிறீர்கள்; மற்றும் இப்படிப்பட்ட அநேக சடங்குகளையும் அனுசரித்துவருகிறீர்கள் என்றார்.*

## 54. இரண்டாவது கட்டளை எதைத் தடை செய்கிறது?

*உருவங்களைப் பயன்படுத்தியும், வேதத்தில் நியமிக்கப்படாத வேறு எந்த முறையிலும் கடவுளை ஆராதிப்பதை இரண்டாம் கட்டளை தடை செய்கிறது.*

***உபாகமம் 4:15-19*** *[15]கர்த்தர் ஓரேபிலே அக்கினியின் நடுவிலிருந்து உங்களோடே பேசின நாளில், நீங்கள் ஒரு ரூபத்தையும் காணவில்லை.*
*[16]ஆகையால் நீங்கள் உங்களைக் கெடுத்துக்கொண்டு, ஆண் உருவும், பெண் உருவும்,*
*[17]பூமியிலிருக்கிற யாதொரு மிருகத்தின் உருவும், ஆகாயத்தில் பறக்கிற செட்டையுள்ள யாதொரு பட்சியின் உருவும்,*
*[18]பூமியிலுள்ள யாதொரு ஊரும் பிராணியின் உருவும், பூமியின்கீழ்த் தண்ணீரிலுள்ள யாதொரு மச்சத்தின் உருவுமாயிருக்கிற இவைகளில் யாதொரு உருவுக்கு ஒப்பான விக்கிரகத்தை உங்களுக்கு உண்டாக்காதபடிக்கும்,*
*[19]உங்கள் கண்களை வானத்திற்கு ஏறெடுத்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் வானத்தின் கீழெங்கும் இருக்கிற எல்லா ஜனங்களுக்கும் ஏற்படுத்தின வானத்தின் சர்வ சேனைகளாகிய சந்திர சூரிய நட்சத்திரங்களை நோக்கி, அவைகளைத் தொழுது சேவிக்க இணங்காதபடிக்கும், உங்கள் ஆத்துமாக்களைக்குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருங்கள்.*

**லேவியராகமம் 10:1-2** *[1]பின்பு ஆரோனின் குமாரராகிய நாதாபும்*

*அபியூவும் தன்தன் தூபகலசத்தை எடுத்து, அவைகளில் அக்கினியையும் அதின்மேல் தூபவர்க்கத்தையும் போட்டு, கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாத அந்நிய அக்கினியை அவருடைய சந்நிதியில் கொண்டுவந்தார்கள். [2]அப்பொழுது அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, அவர்களைப் பட்சித்தது; அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் செத்தார்கள்.*

***உபாகமம் 12:30-32*** *[30]அவர்கள் உனக்கு முன்பாக அழிக்கப்பட்டபின்பு, நீ அவர்களைப் பின்பற்றிச் சிக்கிக்கொள்ளாதபடிக்கும், இந்த ஜாதிகள் தங்கள் தேவர்களைச் சேவித்தபடி நானும் சேவிப்பேன் என்று சொல்லி அவர்களுடைய தேவர்களைக்குறித்துக் கேட்டு விசாரியாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு. [31]உன் தேவனாகிய கர்த்தருக்கு அப்படிச் செய்யாயாக; கர்த்தர் வெறுக்கிற அருவருப்பான யாவையும் அவர்கள் தங்கள் தேவர்களுக்குச் செய்து, தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் தங்கள் தேவர்களுக்கு அக்கினியிலே சுட்டெரித்தார்களே. [32]நான் உனக்கு விதிக்கிற யாவையும் செய்யும்படி கவனமாயிரு; நீ அதனோடே ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்.*

## 55. இரண்டாம் கட்டளை வலியுறுத்தும் காரணிகள் யாவை?

*கடவுள் நம்மீது சகல அதிகாரத்தையும் செலுத்துகிறார் என்பதும், நாம் அவருடைய சொத்தாக இருக்கிறோம் என்பதும், தனது ஆராதனையின் மீது அவர் தீவிரப் பற்றுடையவராக இருக்கிறார் என்பதுமே இரண்டாம் கட்டளை வலியுறுத்தும் காரணிகளாக இருக்கின்றன.*

***சங்கீதம் 95:2-3, 6*** *[2]துதித்தலுடனே அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து, சங்கீதங்களால் அவரை ஆர்ப்பரித்துப் பாடக்கடவோம். [3]கர்த்தரே மகா தேவனும், எல்லா தேவர்களுக்கும் மகாராஜனுமாயிருக்கிறார்.*

*[6]நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக்கடவோம் வாருங்கள்.*

***சங்கீதம் 100:2-3*** *[2]மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனைசெய்து, ஆனந்தசத்தத்தோடே அவர் சந்நிதிமுன் வாருங்கள். [3]கர்த்தரே தேவனென்று அறியுங்கள்; நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார்; நாம் அவர் ஜனங்களும், அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம்.*

***யாத்திராகமம் 34:13-14*** *[13]அவர்களுடைய பலிபீடங்களை இடித்து, அவர்கள் சிலைகளைத் தகர்த்து, அவர்கள் தோப்புகளை வெட்டிப்போடுங்கள். [14]கர்த்தருடைய நாமம் எரிச்சலுள்ளவர் என்பது, அவர் எரிச்சலுள்ள தேவனே; ஆகையால், அந்நிய தேவனை நீ பணிந்துகொள்ளவேண்டாம்.*

***சங்கீதம் 106:19, 21-23*** *[19]அவர்கள் ஓரேபிலே ஒரு கன்றுக்குட்டியை யுண்டாக்கி, வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகத்தை நமஸ்கரித்தார்கள்.*

*[21]எகிப்திலே பெரிய கிரியைகளையும், காமின் தேசத்திலே அதிசயங்களையும், சிவந்த சமுத்திரத்தண்டையிலே பயங்கர மானவைகளையும் செய்தவராகிய, [22]தங்கள் இரட்சகரான தேவனை மறந்தார்கள். [23]ஆகையால், அவர்களை நாசம்பண்ணுவேன் என்றார்; அப்பொழுது அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட மோசே, அவர்களை அவர் அழிக்காதபடிக்கு, அவருடைய உக்கிரத்தை ஆற்றும்பொருட்டு, அவருக்கு முன்பாகத் திறப்பின் வாயிலே நின்றான்.*

## 56. மூன்றாவது கட்டளை என்ன?

*உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவர்களைத் தண்டியாமல் விடார் என்பதே மூன்றாம் கட்டளையாகும்.*

***யாத்திராகமம் 20:7*** *உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்.*

## 57. மூன்றாவது கட்டளை எதைக் கோருகிறது?

*கர்த்தருடைய நாமங்களையும், பெயர்ப் பட்டியல்களையும், குணாதிசயங்களையும், திருநியமங்களையும், செயல்களையும் பரிசுத்தமாகவும், மரியாதைக்குரியவகையிலும் பயன்படுத்த வேண்டும் என்று மூன்றாம் கட்டளை கோருகிறது.*

***மத்தேயு 6:9*** *நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.*

***சங்கீதம் 29:2*** *கர்த்தருடைய நாமத்திற்குரிய மகிமையை*

*அவருக்குச் செலுத்துங்கள்; பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்.*

***வெளிப்படுத்தின விசேஷம் 15:3, 4*** *[3]அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியானவருடைய பாட்டையும் பாடி: சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள். [4]கர்த்தாவே, யார் உமக்குப் பயப்படாமலும், உமது நாமத்தை மகிமைப்படுத்தாமலும் இருக்கலாம்? தேவரீர் ஒருவரே பரிசுத்தர், எல்லா ஜாதிகளும் வந்து உமக்கு முன்பாகத் தொழுதுகொள்வார்கள்; உம்முடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாயின என்றார்கள்.*

***மல்கியா 1:11, 14*** *[11]சூரியன் உதிக்கிற திசை தொடங்கி, அது அஸ்தமிக்கிற திசை வரைக்கும், என் நாமம் ஜாதிகளுக்குள்ளே மகத்துவமாயிருக்கும்; எல்லா இடங்களிலும் என் நாமத்துக்குத் தூபமும் சுத்தமான காணிக்கையும் செலுத்தப்படும்; என் நாமம் ஜாதிகளுக்குள்ளே மகத்துவமாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.*

*[14]தன் மந்தையில் கடா இருக்கையில் கெட்டுப்போனதை ஆண்டவருக்கு நேர்ந்துகொண்டு பலியிடுகிற கபடஸ்தன் சபிக்கப்பட்டவன்; என் நாமம் ஜாதிகளுக்குள்ளே பயங்கரமாயிருக்கும்; நான் மகத்துவமான ராஜா என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.*

***பிரசங்கி 5:1*** *நீ தேவாலயத்துக்குப் போகும்போது உன் நடையைக் காத்துக்கொள்; மூடர் பலியிடுவதுபோலப் பலியிடுவதைப்பார்க்கிலும் செவிகொடுக்கச் சேர்வதே நலம். தாங்கள் செய்கிறது தீமையென்று அறியாதிருக்கிறார்கள்.*

***சங்கீதம் 138:1-2*** *[1]உம்மை என் முழு இருதயத்தோடும் துதிப்பேன்; தேவர்களுக்கு முன்பாக உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன். [2]உமது பரிசுத்த ஆலயத்திற்கு நேராக நான் பணிந்து, உமது கிருபையினிமித்தமும் உமது உண்மையினிமித்தமும் உமது நாமத்தைத் துதிப்பேன்; உமது சகல பிரஸ்தாபத்தைப்பார்க்கிலும் உமது வார்த்தையை நீர் மகிமைப்படுத்தியிருக்கிறீர்.*

***சங்கீதம் 105:1-5*** *[1]கர்த்தரைத் துதித்து, அவருடைய நாமத்தைப் பிரஸ்தாபமாக்குங்கள், அவருடைய செய்கைகளை ஜனங்களுக்*

*குள்ளே பிரசித்தப்படுத்துங்கள். [2]அவரைப் பாடி, அவரைக் கீர்த்தனம்பண்ணுங்கள்; அவருடைய அதிசயங்களையெல்லாம் தியானித்துப் பேசுங்கள். [3]அவருடைய பரிசுத்த நாமத்தைக் குறித்து மேன்மைபாராட்டுங்கள்; கர்த்தரைத் தேடுகிறவர்களின் இருதயம் மகிழ்வதாக. [4]கர்த்தரையும் அவர் வல்லமையையும் நாடுங்கள்; அவர் சமுகத்தை நித்தமும் தேடுங்கள். [5]அவருடைய தாசனாகிய ஆபிரகாமின் சந்ததியே! அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாகிய யாக்கோபின் புத்திரரே!*

## 58. மூன்றாவது கட்டளை எதைத் தடை செய்கிறது?

*கடவுள் தன்னை வெளிப்படுத்தப் பயன்படுத்துகிற எதையும் அசுத்தப்படுத்துவதையும், அவமரியாதை செய்வதையும் மூன்றாம் கட்டளை தடை செய்கிறது.*

***மல்கியா 1:6-7, 12*** *[6]குமாரன் தன் பிதாவையும், ஊழியக்காரன் தன் எஜமானையும் கனம் பண்ணுகிறார்களே; நான் பிதாவானால் என் கனம் எங்கே? நான் எஜமானானால் எனக்குப் பயப்படும் பயம் எங்கே? என்று சேனைகளின் கர்த்தர் தமது நாமத்தை அசட்டைபண்ணுகிற ஆசாரியர்களாகிய உங்களைக் கேட்கிறார்; அதற்கு நீங்கள்: உமது நாமத்தை எதினாலே அசட்டை பண்ணினோம் என்கிறீர்கள். [7]என் பீடத்தின்மேல் அசுத்தமான அப்பத்தைப் படைக்கிறதினாலேயே; ஆனாலும் உம்மை எதினாலே அசுத்தப்படுத்தினோம் என்கிறீர்கள்; கர்த்தருடைய பந்தி எண்ணமற்றுப் போயிற்றென்று நீங்கள் சொல்லுகிறதினாலேயே.*

*[12]நீங்களோ கர்த்தருடைய பந்தி அசுத்தமானது என்றும், அதின் ஆகாரமாகிய அதின் பலன் அற்பமானது என்றும் சொல்லுகிறதினாலே, என் நாமத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்குகிறீர்கள்.*

***மல்கியா 2:2*** *நீங்கள் கேளாமலும் என் நாமத்துக்கு மகிமையைச் செலுத்தும்படி இதைச் சிந்தியாமலுமிருந்தால், நான் உங்களுக்குள்ளே சாபத்தை அனுப்பி, உங்கள் ஆசீர்வாதங்களையும் சாபமாக்குவேன்; ஆம், நீங்கள் அதைச் சிந்தியாமற்போனதினால் அவைகளைச் சபித்தேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.*

***மல்கியா 3:14*** *தேவனைச் சேவிப்பது விருதா, அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறதினாலும், சேனைகளின் கர்த்தருக்கு முன்பாகத் துக்கித்து நடக்கிறதினாலும் என்ன பிரயோஜனம்?*

## 59. மூன்றாம் கட்டளையை வலியுறுத்தும் காரணிகள் யாவை?

*இம்மூன்றாம் கட்டளையை மீறுகிறவர்கள் மனிதர்கள் கொடுக்கும் தண்டனைகளில் இருந்து எப்படியாவது தப்பினாலும், ஆண்டவராகிய நமது கடவுள் தமது நீதியான நியாயத்தீர்ப்பிலிருந்து அவர்களைத் தப்பவிடமாட்டார் என்ற காரணத்தை வலியுறுத்துகிறது.*

***1 சாமுவேல் 2:12, 17, 22, 29*** *[12]ஏலியின் குமாரர் பேலியாளின் மக்களாயிருந்தார்கள்; அவர்கள் கர்த்தரை அறியவில்லை.*

*[17]ஆதலால் அந்த வாலிபரின் பாவம் கர்த்தருடைய சந்நிதியில் மிகவும் பெரிதாயிருந்தது; மனுஷர் கர்த்தரின் காணிக்கையை வெறுப்பாய் எண்ணினார்கள்.*

*[22]ஏலி மிகுந்த கிழவனாயிருந்தான்; அவன் தன் குமாரர் இஸ்ரவேலுக்கெல்லாம் செய்கிற எல்லாவற்றையும், அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலில் கூட்டங்கூடுகிற ஸ்திரீகளோடே சயனிக்கிறதையும் கேள்விப்பட்டு,*

*[29]என் வாசஸ்தலத்திலே செலுத்தும்படி நான் கட்டளையிட்ட என் பலியையும், என் காணிக்கையையும், நீங்கள் உதைப்பானேன்? என் ஜனமாகிய இஸ்ரவேலின் காணிக்கைகளிலெல்லாம் பிரதானமானவைகளைக் கொண்டு உங்களைக் கொழுக்கப் பண்ணும்படிக்கு, நீ என்னைப்பார்க்கிலும் உன் குமாரரை மதிப்பானேன் என்கிறார்.*

***1 சாமுவேல் 3:13*** *அவன் குமாரர் தங்கள்மேல் சாபத்தை வரப்பண்ணுகிறதை அவன் அறிந்திருந்தும், அவர்களை அடக்காமற்போன பாவத்தினிமித்தம், நான் அவன் குடும்பத்துக்கு என்றும் நீங்காத நியாயத்தீர்ப்புச் செய்வேன் என்று அவனுக்கு அறிவித்தேன்.*

***உபாகமம் 28:58-60*** *[58]உன் தேவனாகிய கர்த்தர் என்னும் மகிமையும் பயங்கரமுமான நாமத்திற்குப் பயப்படும்படிக்கு, நீ இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளின்படியெல்லாம் நடக்கக் கவனமாயிராவிட்டால், [59]கர்த்தர் நீங்காத பெரிய வாதைகளாலும் நீங்காத கொடிய ரோகங்களாலும் உன்னையும் உன் சந்ததியையும் அதிசயமாய் வாதித்து, [60]நீ கண்டு பயந்த எகிப்து வியாதிகளெல்லாம் உன்மேல் வருவிப்பார்; அவைகள் உன்னைப் பற்றிக்கொள்ளும்.*

***மல்கியா 2:2*** *நீங்கள் கேளாமலும் என் நாமத்துக்கு மகிமையைச் செலுத்தும்படி இதைச் சிந்தியாமலுமிருந்தால், நான் உங்களுக்குள்ளே சாபத்தை அனுப்பி, உங்கள் ஆசீர்வாதங்களையும் சாபமாக்குவேன்; ஆம், நீங்கள் அதைச் சிந்தியாமற்போனதினால் அவைகளைச் சபித்தேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.*

## 60. நான்காவது கட்டளை என்ன?

*ஓய்வு நாளைப் பரிசுத்தமாக ஆசரிக்க நினைப்பாயாக ஆறு நாளும் நீ வேலை செய்து உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வு நாள் அதிலே நீயாகிலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்ய வேண்டாம். கர்த்தர் ஆறு நாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். ஆதலால் கர்த்தர் ஓய்வு நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார் என்பதே நான்காவது கட்டளையாகும்.*

***யாத்திராகமம் 20:8-11*** *[8]ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; [9]ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளை யெல்லாம் நடப்பிப்பாயாக; [10]ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருகஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்யவேண்டாம். [11]கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்.*

## 61. நான்காவது கட்டளை எதைக் கோருகிறது?

*தேவன் தன்னுடைய வார்த்தையில் நியமித்திருக்கும் காலங்களை அவருக்காக நாம் பரிசுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்று நான்காம் கட்டளை போதிக்கிறது. அதாவது, ஏழு நாட்களில் ஒரு நாளை அவருக்காக பரிசுத்த ஓய்வுநாளாக வைத்திருக்க வேண்டுமென்று அது கோருகிறது.*

***லேவியராகமம் 19:30*** *என் ஓய்வுநாட்களை ஆசரித்து, என் பரிசுத்த ஸ்தலத்தைக்குறித்துப் பயபக்தியாயிருப்பீர்களாக; நான் கர்த்தர்.*

***உபாகமம் 5:12-14*** *[12]உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளை யிட்டபடியே, ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிப்பாயாக. [13]ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக. [14]ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் எருதானாலும், உன் கழுதையானாலும், உனக்கு இருக்கிற மற்றெந்த மிருகஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும் யாதொரு வேலையும் செய்யவேண்டாம்; நீ இளைப்பாறுவதுபோல உன் வேலைக்காரனும் உன் வேலைக்காரியும் இளைப்பாற வேண்டும்;*

## 62. ஏழு நாட்களில் எந்த நாளை வாராந்தர ஓய்வு நாளாகக் கடவுள் நியமித்திருக்கிறார்?

*உலகம் தோன்றிய நாளிலிருந்து கிறிஸ்து உயிர்த்தெழுந்ததுவரை வாரத்தின் ஏழாவது நாளை வாராந்தர ஓய்வு நாளாகக் கடவுள் நியமித்திருந்தார்; கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாளிலிருந்து வாரத்தின் முதல் நாளை உலகம் முடியும்வரையும் ஓய்வு நாளாக இருக்கும்படி கடவுள் நியமித்துள்ளார். இதுவே கிறிஸ்தவ ஓய்வு நாளாக* (Christian Sabbath) *இருக்கின்றது.*

***ஆதியாகமம் 2:2-3*** *[2]தேவன் தாம் செய்த தம்முடைய கிரியையை ஏழாம் நாளிலே நிறைவேற்றி, தாம் உண்டாக்கின தம்முடைய கிரியைகளை யெல்லாம் முடித்தபின்பு, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். [3]தேவன் தாம் சிருஷ்டித்து உண்டுபண்ணின தம்முடைய*

*கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு அதிலே ஓய்ந்திருந்தபடியால், தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்.*

***1 கொரிந்தியர் 16:1-2*** *[1]பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மப்பணத்தைக்குறித்து நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். [2]நான் வந்திருக்கும்போது பணஞ் சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்.*

***அப்போஸ்தலர் 20:7*** *வாரத்தின் முதல்நாளிலே, அப்பம்பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான்.*

***வெளிப்படுத்தின விசேஷம் 1:10*** *கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது எனக்குப் பின்னாலே எக்காள சத்தம்போன்ற பெரிதான ஒரு சத்தத்தைக் கேட்டேன்.*

## 63. ஓய்வு நாளை எவ்வாறு பரிசுத்தமாக வைத்திருக்க வேண்டும்?

*வாரத்தின் ஏனைய நாட்களில் நியாயமாக செய்யவேண்டிய சகல உலக வேலைகளையும், ஓய்வுநேர இன்பப்பொழுது போக்குகளையும் அந்நாளில் தவிர்த்து, தேவைக்குரியதும், கருணைக்குரியதுமான செயல்களுக்கு தேவையான நேரத்தைத்தவிர ஏனைய நேரமனைத்தையும் பொதுவானதும், தனிப்பட்டதுமான கர்த்தருடைய ஆராதனையில் செலவிட்டு அந்நாள் முழுதும் பரிசுத்தமாக ஓய்வெடுத்து ஓய்வுநாளைப் பரிசுத்தமாக வைத்திருக்க வேண்டும்.*

***லேவியராகமம் 23:3*** *ஆறுநாளும் வேலை செய்யவேண்டும்; ஏழாம்நாள் பரிசுத்த சபைகூடுதலான ஓய்வுநாள், அதில் ஒரு வேலையும் செய்யவேண்டாம்; அது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் நாளாயிருப்பதாக.*

***யாத்திராகமம் 20:8, 10*** *[8]ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக;*

*[10]ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும்,*

*உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருகஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்யவேண்டாம்.*

***யாத்திராகமம் 16:25-28*** *25 அப்பொழுது மோசே: அதை இன்றைக்குப் புசியுங்கள்; இன்று கர்த்தருக்குரிய ஓய்வுநாள்; இன்று நீங்கள் அதை வெளியிலே காணமாட்டீர்கள். 26 ஆறுநாளும் அதைச் சேர்ப்பீர்களாக; ஏழாம்நாள் ஓய்வுநாளாயிருக்கிறது; அதிலே அது உண்டாயிராது என்றான். 27 ஏழாம்நாளில் ஜனங்களில் சிலர் அதைச் சேர்க்கப் புறப்பட்டார்கள்; அவர்கள் அதைக் காணவில்லை. 28 அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: என் கட்டளைகளையும் என் பிரமாணங்களையும் கைக்கொள்ள எந்தமட்டும் மனதில்லாதிருப்பீர்கள்?*

**நெகேமியா 13:15-22** *15 அந்த நாட்களில் நான் யூதாவிலே ஓய்வுநாளில் சிலர் ஆலைகளை மிதிக்கிறதையும், சிலர் தானியப் பொதிகளைக் கழுதைகள்மேல் ஏற்றிக்கொண்டு வருகிறதையும், திராட்சரசம், திராட்சப்பழம், அத்திப்பழம் முதலானவைகளின் பற்பல சுமைகளை ஓய்வுநாளிலே எருசலேமுக்குக் கொண்டுவருகிறதையும் கண்டு, அவர்கள் தின்பண்டம் விற்கிற நாளைப்பற்றி அவர்களைத் திடசாட்சியாய்க் கடிந்துகொண்டேன். 16 மீனையும் சகலவித சரக்குகளையும் கொண்டுவந்து, ஓய்வுநாளிலே யூதா புத்திரருக்கும் எருசலேமில் இருக்கிறவர்களுக்கும் விற்கிற சில தீரியரும் உள்ளே குடியிருந்தார்கள். 17 ஆகையால் நான் யூதாவின் பெரியவர்களைக் கடிந்துகொண்டு: நீங்கள் ஓய்வுநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிற இந்தப் பொல்லாத செய்கையென்ன? 18 உங்கள் பிதாக்கள் இப்படிச் செய்ததினாலல்லவா, நமது தேவன் நம்மேலும் இந்த நகரத்தின்மேலும் இந்தத் தீங்கையெல்லாம் வரப்பண்ணினார்; நீங்களோவென்றால் ஓய்வுநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிறதினால், இஸ்ரவேலின்மேலிருக்கிற உக்கிரத்தை அதிகரிக்கப்பண்ணுகிறீர்கள் என்று அவர்களுக்குச் சொன்னேன். 19 ஆகையால் ஓய்வுநாளுக்கு முன்னே எருசலேமின் பட்டணவாசலில், மாலைமயங்கும்போது, கதவுகளைப் பூட்டவும், ஓய்வுநாள் முடியுமட்டும் அவைகளைத் திறவாதிருக்கவும் வேண்டுமென்று கட்டளையிட்டு, ஓய்வுநாளிலே ஒரு சுமையும் உள்ளே வராதபடிக்கு வாசலண்டையிலே என் வேலைக்காரரில் சிலரை நிறுத்தினேன். 20 அதினால் வர்த்தகரும், சகலவித சரக்குகளை விற்கிறவர்களும், இரண்டொருதரம் எருசலேமுக்குப் புறம்பே இராத்தங்கினார்கள்.*

*[21]அப்பொழுது நான் அவர்களைத் திடசாட்சியாய்க் கடிந்துகொண்டு, நீங்கள் அலங்கத்தண்டையிலே இராத்தங்குகிறது என்ன? நீங்கள் மறுபடியும் இப்படிச் செய்தால், உங்கள்மேல் கைபோடுவேன் என்று அவர்களோடே சொன்னேன்; அதுமுதல் அவர்கள் ஓய்வுநாளிலே வராதிருந்தார்கள். [22]ஓய்வுநாளைப் பரிசுத்தமாக்கும்படிக்கு, உங்களைச் சுத்தம்பண்ணிக்கொண்டு வாசல்களைக் காக்கவாருங்கள் என்று லேவியருக்கும் சொன்னேன். என் தேவனே, இதைக்குறித்து நீர் என்னை நினைத்தருளி, உம்முடைய மிகுந்த கிருபையின்படி எனக்கு இரங்குவீராக.*

***லூக்கா 4:16*** *தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு அவர் வந்து, தம்முடைய வழக்கத்தின்படியே ஓய்வுநாளில் ஜெபஆலயத்திலே பிரவேசித்து, வாசிக்க எழுந்து நின்றார்.*

***அப்போஸ்தலர் 20:7*** *வாரத்தின் முதல்நாளிலே, அப்பம்பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான்.*

***சங்கீதம் 91:1-2*** *[1]உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான். [2]நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன்.*

***ஏசாயா 66:23*** *அப்பொழுது: மாதந்தோறும், ஓய்வுநாள் தோறும், மாம்சமான யாவரும் எனக்கு முன்பாகத் தொழுது கொள்வார்களென்று கர்த்தர் சொல்லுகிறார்.*

***மத்தேயு 12:11-12*** *[11]அதற்கு அவர்: உங்களில் எந்த மனுஷனுக்காகிலும் ஒரு ஆடு இருந்து, அது ஓய்வுநாளில் குழியிலே விழுந்தால், அதைப் பிடித்துத் தூக்கிவிடமாட்டானோ? [12]ஆட்டைப்பார்க்கிலும் மனுஷனானவன் எவ்வளவோ விசேஷித்திருக்கிறான்! ஆதலால், ஓய்வுநாளிலே நன்மைசெய்வது நியாயந்தான் என்று சொன்னார்.*

## 64. நான்காவது கட்டளை எதைத் தடை செய்கிறது?

*கர்த்தர் கட்டளையிட்டுள்ள கடமைகளை ஓய்வுநாளில் செய்யாமலிருப்பதையும், அவற்றைக் கவனக்குறைவாக செய்வதையும், சோம்பேரித்தனமாக நடந்துகொள்வதையும் அல்லது பாவகரமான செயல்களை அந்நாளில் செய்வதையும்*

*அல்லது நமது உலக வேலைகள், ஓய்வு நேர இன்பப்பொழுதுபோக்குகள் சம்பந்தமான அவசியமற்ற எண்ணங்களாலும், வார்த்தைகளாலும், செயல்களாலும் அந்நாளை அவமதிப்பதையும் நான்காவது கட்டளை தடைசெய்கிறது.*

***எசேக்கியேல் 22:26*** *அதின் ஆசாரியர்கள் என் வேதத்துக்கு அநியாயஞ் செய்து, என் பரிசுத்த வஸ்துக்களைப் பரிசுத்தக் குலைச்சலாக்கு கிறார்கள்; பரிசுத்தமுள்ளதற்கும் பரிசுத்தமில்லாததற்கும் வித்தியாசம் பண்ணாமலும், அசுத்தமுள்ளதற்கும் அசுத்தமில்லாததற்கும் உண்டான வேற்றுமையைக் காண்பியாமலும் இருந்து, என் ஓய்வு நாட்களுக்குத் தங்கள் கண்களை மூடிக்கொள்ளுகிறார்கள்; அவர்கள் நடுவிலே நான் கனஈனம்பண்ணப்படுகிறேன்.*

***ஆமோஸ் 8:5-6*** *[5]நாங்கள் மரக்காலைக் குறைத்து, சேக்கல் நிறையை அதிகமாக்கி, கள்ளத்தராசினால் வஞ்சித்து, தரித்திரரைப் பணத்துக்கும், எளியவர்களை ஒரு ஜோடு பாதரட்சைக்கும் கொள்ளும்படிக்கும், தானியத்தின் பதரை விற்கும்படிக்கும், [6]நாங்கள் தவசம் விற்கத்தக்கதாக மாதப்பிறப்பும், நாங்கள் தானியத்தின் பண்டசாலைகளைத் திறக்கத்தக்கதாக ஓய்வுநாளும் எப்போது முடியும் என்று சொல்லுகிறவர்களே, இதைக் கேளுங்கள்*

***மல்கியா 1:13*** *இதோ, இது எவ்வளவு வருத்தமென்று சொல்லி, அதை ஒரு திரணமாய்ப் பேசி, பீறுண்டதையும் கால் ஊனமானதையும் நசல்கொண்டதையும் கொண்டுவந்து காணிக்கையாகச் செலுத்துகிறீர்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; அதை உங்கள் கைகளில் அங்கீகரித்துக்கொள்வேனோ என்று கர்த்தர் கேட்கிறார்.*

***எசேக்கியேல் 23:38*** *அன்றியும் அவர்கள் என் பரிசுத்த ஸ்தலத்தை அந்நாளிலேதானே தீட்டுப்படுத்தி, என் ஓய்வுநாட்களைப் பரிசுத்தக்குலைச்சலாக்கினார்கள்.*

***எரேமியா 17:24-26*** *[24]நீங்களோவெனில், ஓய்வுநாளில் இந்த நகரத்தின் வாசல்களுக்குள்ளே சுமையைக் கொண்டுவராதபடிக்கும், ஓய்வுநாளில் ஒரு வேலையையும் செய்யாமல் அதைப் பரிசுத்தமாக்கும்படிக்கும் என் சொல்லைக் கேட்பீர்களானால், [25]அப்பொழுது தாவீதின் சிங்காசனத்தில் உட்கார்ந்திருக்கிறவர்களும், இரதங்களின்மேலும் குதிரைகளின்மேலும் ஏறுகிறவர்களுமாகிய ராஜாக்களும் ராஜகுமாரர்களும், அவர்கள் பிரபுக்களும், யூதாவின்*

*மனுஷரும், எருசலேமின் குடிகளும் இந்த நகரத்தின் வாசல்களுக்குள் பிரவேசிப்பார்கள்; இந்த நகரமும் என்றைக்கும் குடியுள்ளதாயிருக்கும். [26]யூதாவின் பட்டணங்களிலும், எருசலேமின் சுற்றுப்புறமான ஊர்களிலும், பென்யமீன் தேசத்திலும், பள்ளத்தாக்கான சீமையிலும், மலைநாட்டிலும், தெற்கிலுமிருந்து ஜனங்கள் சர்வாங்கதகனங்களையும், பலிகளையும், போஜனபலிகளையும், தூபவர்க்கங்களையும், ஸ்தோத்திரபலிகளையும் கர்த்தருடைய ஆலயத்துக்குக் கொண்டுவருவார்கள்.*

***ஏசாயா 58:13*** *என் பரிசுத்தநாளாகிய ஓய்வுநாளிலே உனக்கு இஷ்டமானதைச் செய்யாதபடி, உன் காலை விலக்கி, உன் வழிகளின் படி நடவாமலும், உனக்கு இஷ்டமானதைச் செய்யாமலும், உன் சொந்தப்பேச்சைப் பேசாமலிருந்து, ஓய்வுநாளை மனமகிழ்ச்சியின் நாளென்றும், கர்த்தருடைய பரிசுத்த நாளை மகிமையுள்ள நாளென்றும் சொல்லி, அதை மகிமையாக எண்ணுவாயானால்,*

## 65. நான்காவது கட்டளை வலியுறுத்தும் காரணிகள் யாவை?

*நம்முடைய சொந்த வேலைகளைக் கவனிப்பதற்காக வாரத்தின் ஆறு நாட்களைக் கர்த்தர் தந்திருக்கிறார் என்பதும், ஏழாவது நாளில் தனக்குத் தனியுரிமை இருக்கிறதென்று அவர் தெரிவித்திருப்பதும், ஓய்வு நாளில் அவரே நமக்கு உதாரணமாக இருந்து காட்டியிருப்பதும், அதை அவர் ஆசீர்வதித்திருப்பதும் நான்காவது கட்டளை வலியுறுத்தும் காரணிகளாக இருக்கின்றன.*

***யாத்திராகமம் 20:9-11*** *[9]ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; [10]ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருக ஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்யவேண்டாம். [11]கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்.*

***யாத்திராகமம் 31:15-16*** *[15]ஆறுநாளும் வேலைசெய்யலாம்; ஏழாம் நாளோ வேலை ஒழிந்திருக்கும் ஓய்வுநாள்; அது கர்த்தருக்குப் பரிசுத்தமானது; ஓய்வுநாளில் வேலைசெய்கிறவன் எவனும் கொலைசெய்யப்படவேண்டும். [16]ஆகையால், இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தலைமுறைதோறும் ஓய்வுநாளை நித்திய உடன்படிக்கையாக ஆசரிக்கும்படி, அதைக் கைக்கொள்ளக்கடவர்கள்.*

***லேவியாராகமம் 23:3*** *ஆறுநாளும் வேலை செய்யவேண்டும்; ஏழாம் நாள் பரிசுத்த சபைகூடுதலான ஓய்வுநாள், அதில் ஒரு வேலையும் செய்யவேண்டாம்; அது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் நாளாயிருப்பதாக.*

***யாத்திராகமம் 31:17*** *அது என்றைக்கும் எனக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் அடையாளமாயிருக்கும்; ஆறுநாளைக்குள்ளே கர்த்தர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்து பூரித்தார் என்றார்.*

***ஆதியாகமம் 2:3*** *தேவன் தாம் சிருஷ்டித்து உண்டுபண்ணின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு அதிலே ஓய்ந்திருந்தபடியால், தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்.*

## 66. ஐந்தாவது கட்டளை என்ன?

*உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பது ஐந்தாவது கட்டளையாகும்.*

***யாத்திராகமம் 20:12*** *உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக.*

## 67. ஐந்தாம் கட்டளை எதைக் கோருகிறது?

*ஒவ்வொருவருக்கும் மேலதிகாரிகளாகவும், அவர்களுக்குக் கீழும், சமமாகவும் எல்லா இடங்களிலும் நம்மோடு வெவ்வேறுவிதமான உறவுகளைக் கொண்டிருக்கும் அனைவரையும் மதித்து, அவர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகள் அனைத்தையும் நிறைவேற்ற வேண்டும் என்று கோருகிறது ஐந்தாம் கட்டளை.*

***ரோமர் 12:10*** *சகோதரசிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்.*

***ரோமர் 13:1*** *எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது.*

***எபேசியர் 5:21-23*** *[21]தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள். [22]மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறது போல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள். [23]கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகரா யிருக்கிறார்.*

***எபேசியர் 6:1-2, 5, 9*** *[1]பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம். [2]உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும்*

*[5]வேலைக்காரரே, நீங்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல, சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கும் பயத்தோடும் நடுக்கத்தோடும் கபடற்ற மனதோடும் கீழ்ப்படிந்து;*

*[9]எஜமான்களே, அப்படியே நீங்களும், வேலைக்காரருக்குச் செய்யவேண்டியவைகளைச் செய்து, அவர்களுக்கும் உங்களுக்கும் எஜமானானவர் பரலோகத்தில் இருக்கிறாரென்றும், அவரிடத்தில் பட்சபாதம் இல்லையென்றும் அறிந்து, கடுஞ்சொல்லை விட்டுவிடுங்கள்.*

***1 பேதுரு 2:13-14, 17*** *[13]நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர்நிமித்தம் கீழ்ப்படியுங்கள். [14]மேலான அதிகாரமுள்ள ராஜாவுக்கானாலுஞ்சரி, தீமைசெய்கிறவர்களுக்கு ஆக்கினையும் நன்மைசெய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படி அவனால் அனுப்பப்பட்ட அதிகாரிகளுக்கானாலுஞ் சரி, கீழ்ப்படியுங்கள்.*

*[17]எல்லாரையும் கனம்பண்ணுங்கள்; சகோதரரிடத்தில் அன்புகூருங்கள்; தேவனுக்குப் பயந்திருங்கள்; ராஜாவைக் கனம்பண்ணுங்கள்.*

## 68. ஐந்தாம் கட்டளை எதைத் தடை செய்கிறது?

*எல்லா இடங்களிலும், நம்மோடு வெவ்வேறுவிதமான உறவுகளைக் கொண்டிருப்பவர்களுக்கு நாம் கொடுக்க வேண்டிய மரியாதையையும், செய்ய வேண்டிய கடமைகளையும் நாம் புறக்கணிப்பதையும், அவர்களுக்கு எதிராக செயல்படுவதையும் ஐந்தாம் கட்டளை தடை செய்கிறது.*

***ரோமர் 13:7-8*** *[7]ஆகையால் யாவருக்கும் செலுத்தவேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள்; எவனுக்கு வரியைச் செலுத்த வேண்டியதோ அவனுக்கு வரியையும், எவனுக்குத் தீர்வையைச் செலுத்தவேண்டியதோ அவனுக்குத் தீர்வையையும் செலுத்துங்கள்; எவனுக்குப் பயப்படவேண்டியதோ அவனுக்குப் பயப்படுங்கள்; எவனைக் கனம்பண்ணவேண்டியதோ அவனைக் கனம்பண்ணுங்கள். [8]ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்; பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்.*

***மத்தேயு 15:4-6*** *[4]உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்றும்; தகப்பனையாவது தாயையாவது நிந்திக்கிறவன் கொல்லப்படவேண்டும் என்றும், தேவன் கற்பித்திருக்கிறாரே. [5]நீங்களோ, எவனாகிலும் தகப்பனையாவது தாயையாவது நோக்கி: உனக்கு நான் செய்யத்தக்க உதவி எது உண்டோ, அதைக் காணிக்கையாகக் கொடுக்கிறேன் என்று சொல்லி, தன் தகப்பனையாவது தன் தாயையாவது கனம்பண்ணாமற்போனாலும், அவனுடைய கடமை தீர்ந்ததென்று போதித்து, [6]உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கிவருகிறீர்கள்.*

***எசேக்கியேல் 34:2*** *மனுபுத்திரனே, இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரை; நீ தீர்க்கதரிசனம் உரைத்து, அவர்களோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: கர்த்தராகிய ஆண்டவர் மேய்ப்பருக்குச் சொல்லுகிறார்; தங்களையே மேய்க்கிற இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு ஐயோ! மேய்ப்பர் அல்லவா மந்தையை மேய்க்கவேண்டும்.*

## 69. ஐந்தாம் கட்டளை வலியுறுத்தும் காரணிகள் யாவை?

*இக்கட்டளையைப் பின்பற்றுபவர்கள் (கடவுளுடைய மகிமைக்காகவும் அவர்களுடைய நன்மைக்காகவும் இருக்கும் பட்சத்தில்) இவ்வுலகில் நீண்ட நாட்களுக்கு நல்வாழ்க்கை வாழ்வார்கள் என்பது ஐந்தாம் கட்டளை வலியுறுத்தும் காரணியாக இருக்கின்றது.*

***உபாகமம் 5:16*** *உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கும், நீ நன்றாயிருப்பதற்கும், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டபடியே, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக.*

***எபேசியர் 6:2-3*** *[2]உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும் [3]உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது.*

## 70. ஆறாவது கட்டளை என்ன?

*கொலை செய்யாதிருப்பாயாக என்பது ஆறாவது கட்டளையாகும்.*

***யாத்திராகமம் 20:13*** *கொலை செய்யாதிருப்பாயாக.*

## 71. ஆறாவது கட்டளை எதைக் கோருகிறது?

*நமது சொந்த வாழ்க்கையையும், மற்றவர்களுடைய வாழ்க்கையையும் பாதுகாக்க நியாயமான அனைத்து முயற்சிகளிலும் நாம் ஈடுபடவேண்டுமென்று ஆறாவது கட்டளை கோருகிறது.*

***எபேசியர் 5:28-29*** *[28]அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூர வேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான். [29]தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறதுபோல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான்.*

***சங்கீதம் 82:3-4*** *[3]ஏழைக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் நியாயஞ்செய்து,*

*சிறுமைப்பட்டவனுக்கும் திக்கற்றவனுக்கும் நீதி செய்யுங்கள். [4]பலவீனனையும் எளியவனையும் விடுவித்து, துன்மார்க்கரின் கைக்கு அவர்களைத் தப்புவியுங்கள்.*

***யோபு 29:13*** *கெட்டுப்போக இருந்தவனுடைய ஆசீர்வாதம் என்மேல் வந்தது; விதவையின் இருதயத்தைக் கெம்பீரிக்கப் பண்ணினேன்.*

***1 இராஜாக்கள் 18:4*** *யேசபேல் கர்த்தரின் தீர்க்கதரிசிகளைச் சங்கரிக்கிறபோது, ஒபதியா நூறு தீர்க்கதரிசிகளைச் சேர்த்து, அவர்களைக் கெபிக்கு ஐம்பது ஐம்பது பேராக ஒளித்துவைத்து, அவர்களுக்கு அப்பமும் தண்ணீரும் கொடுத்து, அவர்களைப் பராமரித்துவந்தான்.*

## 72. ஆறாவது கட்டளை எதைத் தடை செய்கிறது?

*நாம் நமது உயிரை மாய்த்துக் கொள்வதையும், மற்றவர்களின் உயிரை அநியாயமாக அழிப்பதையும் அல்லது அப்படி செய்வதற்கேதுவான எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதையும் ஆறாவது கட்டளை தடை செய்கிறது.*

***அப்போஸ்தலர் 16:28*** *பவுல் மிகுந்த சத்தமிட்டு: நீ உனக்குக் கெடுதி ஒன்றுஞ் செய்துகொள்ளாதே; நாங்கள் எல்லாரும் இங்கேதான் இருக்கின்றோம் என்றான்.*

***ஆதியாகமம் 9:6*** *மனுஷன் தேவசாயலில் உண்டாக்கப்பட்டபடியால், மனுஷனுடைய இரத்தத்தை எவன் சிந்துகிறானோ, அவனுடைய இரத்தம் மனுஷனாலே சிந்தப்படக்கடவது.*

***லேவியராகமம் 19:17*** *உன் சகோதரனை உன் உள்ளத்தில் பகையாயாக; பிறன்மேல் பாவம் சுமராதபடிக்கு அவனை எப்படியும் கடிந்துகொள்ளவேண்டும்.*

***நீதிமொழிகள் 24:11-12*** *[11]மரணத்துக்கு ஒப்பிக்கப்பட்டவர்களையும், கொலையுண்ணப்போகிறவர்களையும் விடுவிக்கக்கூடுமானால் விடுவி. [12]அதை அறியோம் என்பாயாகில்; இருதயங்களைச் சோதிக்கிறவர் அறியாரோ? உன் ஆத்துமாவைக் காக்கிறவர் கவனியாரோ? அவர் மனுஷருக்கு அவனவன் கிரியைக்குத்தக்கதாகப் பலனளியாரோ?*

## 73. ஏழாவது கட்டளை என்ன?

*“விபச்சாரம் செய்யாதிருப்பாயாக” என்பது ஏழாவது கட்டளையாகும்.*

***யாத்திராகமம் 20:14*** *விபச்சாரம் செய்யாதிருப்பாயாக.*

## 74. ஏழாவது கட்டளை எதைக் கோருகிறது?

*நமது வாழ்க்கையிலும், மற்றவர்களுடைய வாழ்க்கையிலும், இருதயத்திலும், பேச்சிலும், நடத்தையிலும் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்துப் பாதுகாக்க வேண்டுமென்று ஏழாம் கட்டளை கோருகிறது.*

***1 தெசலோனிக்கேயர் 4:3-5*** *[3]நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி, நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்து, [4]தேவனை அறியாத அஞ்ஞானிகளைப்போல மோக இச்சைக்குட்படாமல், [5]உங்களில் அவனவன் தன்தன் சரீர பாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து:*

***1 கொரிந்தியர் 7:2-5*** *[2]ஆகிலும் வேசித்தனம் இராதபடிக்கு அவனவன் தன் சொந்த மனைவியையும், அவளவள் தன் சொந்தப் புருஷனையும் உடையவர்களாயிருக்கவேண்டும். [3]புருஷன் தன் மனைவிக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்யக்கடவன்; அப்படியே மனைவியும் தன் புருஷனுக்குச் செய்யக்கடவள். [4]மனைவியானவள் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, புருஷனே அதற்கு அதிகாரி; அப்படியே புருஷனும் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, மனைவியே அதற்கு அதிகாரி. [5]உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் தடையிராதபடிக்கு இருவரும் சிலகாலம் பிடிபந்திருக்கவேண்டுமென்று சம்மதித்தாலன்றி, ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதிருங்கள்; உங்களுக்கு விரதத்துவம் இல்லாமையால் சாத்தான் உங்களைத் தூண்டிவிடாதபடிக்கு, மறுபடியும் கூடிவாழுங்கள்.*

***எபேசியர் 5:11-12*** *[11]கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள். [12]அவர்களால் ஒளிப்பிடத்தில் செய்யப்படும் கிரியைகளைச் சொல்லுகிறதும் அவலட்சணமாயிருக்கிறதே.*

***2 தீமோத்தேயு 2:22*** *அன்றியும், பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறவர்களுடனே, நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு.*

***எபேசியர் 5:3-4*** *[3]மேலும், பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர்முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங் கூடாது. [4]அப்படியே வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள்; ஸ்தோத்திரஞ்செய்தலே தகும்.*

***1 பேதுரு 3:1-2*** *[1]அந்தப்படி மனைவிகளே உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, [2]போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக்கொள்ளப்படுவார்கள்.*

## 75. ஏழாம் கட்டளை எதைத் தடை செய்கிறது?

*ஒழுக்கமற்ற எல்லாச் சிந்தனைகளையும், வார்த்தைகளையும், நடத்தையையும் ஏழாம் கட்டளை தடை செய்கிறது.*

**மத்தேயு** ***5:28*** *நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபச்சாரஞ்செய்தாயிற்று.*

**மத்தேயு** ***15:19*** *எப்படியெனில், இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபச்சாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டுவரும்.*

***எபேசியர் 5:3-4*** *[3]மேலும், பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர்முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங் கூடாது. [4]அப்படியே வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள்; ஸ்தோத்திரஞ்செய்தலே தகும்.*

## 76. எட்டாவது கட்டளை என்ன?

*"களவு செய்யாதிருப்பாயாக" என்பது எட்டாவது கட்டளையாகும்.*

***யாத்திராகமம் 20:15*** *களவு செய்யாதிருப்பாயாக.*

## 77. எட்டாவது கட்டளை எதைக் கோருகிறது?

*நாம் நியாயமான முறையில் செல்வத்தையும், சொத்துக்களையும் சேர்ப்பதோடு மற்றவர்களும் அதேபோல் முன்னேறவும் உதவ வேண்டுமென்று எட்டாம் கட்டளை கோருகிறது.*

***1 தீமோத்தேயு 5:8*** *ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்.*

***நீதிமொழிகள் 27:23*** *உன் ஆடுகளின் நிலைமையை நன்றாய் அறிந்துகொள்; உன் மந்தைகளின்மேல் கவனமாயிரு.*

***அப்போஸ்தலர் 20:33-35*** *[33]ஒருவனுடைய வெள்ளியையாகிலும் பொன்னையாகிலும் வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை. [34]நீங்கள் அறிந்திருக்கிறபடி, எனக்கும் என்னுடனேகூட இருந்தவர்களுக்கும் வேண்டியவைகளுக்காக இந்தக் கைகளே வேலை செய்தது. [35]இப்படிப் பிரயாசப்பட்டு, பலவீனரைத் தாங்கவும், வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எல்லா விதத்திலேயும் உங்களுக்குக் காண்பித்தேன் என்றான்.*

***பிலிப்பியர் 2:4*** *அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக.*

***லேவியராகமம் 25:35*** *உன் சகோதரன் தரித்திரப்பட்டு, கையிளைத்துப் போனவனானால், அவனை ஆதரிக்கவேண்டும்; பரதேசியைப் போலும் தங்கவந்தவனைப்போலும் அவன் உன்னோடே பிழைப்பானாக.*

***உபாகமம் 22:1-4*** *[1]உன் சகோதரனுடைய மாடாவது ஆடாவது வழிதப்பிப்போகிறதைக் கண்டாயானால், அதைக் காணாதவன்போல் இராமல், அதை உன் சகோதரனிடத்துக்குத்*

*திருப்பிக்கொண்டு போகக்கடவாய். [2]உன் சகோதரன் உனக்குச் சமீபமாயிராமலும் உனக்கு அறிமுகமாயிராமலும் இருந்தால், நீ அதை உன் வீட்டிற்குக் கொண்டுபோய், அதை உன் சகோதரன் தேடிவருமட்டும் உன்னிடத்திலே வைத்து, அவனுக்குத் திரும்பக் கொடுக்கக்கடவாய். [3]அப்படியே அவன் கழுதையைக் குறித்தும் செய்யக்கடவாய்; அவன் வஸ்திரத்தைக்குறித்தும் அப்படியே செய்யக்கடவாய்; உன் சகோதரனிடத்திலிருந்து காணாமற்போனவைகளில் எதையாகிலும் கண்டுபிடித்தாயானால் அப்படியே செய்யக்கடவாய்; அவைகளை நீ காணாதவன்போல் விட்டுப்போகலாகாது. [4]உன் சகோதரனுடைய கழுதையாவது அவனுடைய மாடாவது வழியிலே விழுந்துகிடக்கிறதைக் கண்டாயானால், அதைக் காணாதவன்போல விட்டுப்போகாமல், அவனோடேகூட அதைத் தூக்கியெடுத்துவிடுவாயாக.*

***யாத்திராகமம் 23:4-5*** *[4]உன் சத்துருவின் மாடாவது அவனுடைய கழுதையாவது தப்பிப்போகக்கண்டால், அதைத் திரும்ப அவனிடத்தில் கொண்டுபோய் விடுவாயாக. [5]உன்னைப் பகைக்கிறவனுடைய கழுதை சுமையோடே விழுந்துகிடக்கக் கண்டாயானால், அதற்கு உதவிசெய்யாதிருக்கலாமா? அவசியமாய் அவனோடே கூட அதற்கு உதவிசெய்வாயாக.*

***யோபு 29:11-17*** *[11]என்னைக் கேட்ட காது என்னைப் பாக்கியவான் என்றது; என்னைக் கண்ட கண் எனக்குச் சாட்சியிட்டது. [12]முறையிடுகிற ஏழையையும், திக்கற்ற பிள்ளையையும், உதவியற்ற வனையும் இரட்சித்தேன். [13]கெட்டுப்போக இருந்தவனுடைய ஆசீர்வாதம் என்மேல் வந்தது; விதவையின் இருதயத்தைக் கெம்பீரிக்கப்பண்ணினேன். [14]நீதியைத் தரித்துக்கொண்டேன்; அது என் உடுப்பாயிருந்தது; என் நியாயம் எனக்குச் சால்வையும் பாகையுமாய் இருந்தது. [15]நான் குருடனுக்குக் கண்ணும், சப்பாணிக்குக் காலுமாயிருந்தேன். [16]நான் எளியவர்களுக்குத் தகப்பனாயிருந்து, நான் அறியாத வழக்கை ஆராய்ந்துபார்த்தேன். [17]நான் அநியாயக்காரருடைய கடைவாய்ப் பற்களை உடைத்து, அவர்கள் பறித்ததை அவர்கள் பற்களிலிருந்து பிடுங்கினேன்.*

## 78. எட்டாவது கட்டளை எதைத் தடை செய்கிறது?

*நம்முடையதும், அயலானுடையதும் செல்வத்தையோ அல்லது சொத்தையோ நீதியற்றமுறையில் எதுவும் கெடுப்பதை எட்டாம் கட்டளை தடை செய்கிறது.*

***நீதிமொழிகள் 21:17*** *சிற்றின்பப்பிரியன் தரித்திரனாவான்; மதுபானத்தையும் எண்ணெயையும் விரும்புகிறவன் ஐசுவரியவானாவதில்லை.*

***நீதிமொழிகள் 23:20-21*** *[20]மதுபானப்பிரியரையும் மாம்சப் பெருந்தீனிக்காரரையும் சேராதே. [21]குடியனும் போஜனப்பிரியனும் தரித்திரராவார்கள்; தூக்கம் கந்தைகளை உடுத்துவிக்கும்.*

***நீதிமொழிகள் 28:19*** *தன் நிலத்தைப் பயிரிடுகிறவன் ஆகாரத்தால் திருப்தியாவான்; வீணரைப் பின்பற்றுகிறவனோ வறுமையால் நிறைந்திருப்பான்.*

***எபேசியர் 4:28*** *திருடுகிறவன் இனித் திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலைசெய்து, பிரயாசப்படக்கடவன்.*

## 79. ஒன்பதாவது கட்டளை என்ன?

*பிறனுக்கு விரோதமாய்ப் பொய்ச் சாட்சி சொல்லாதிருப்பாயாக என்பது ஒன்பதாவது கட்டளையாகும்.*

***யாத்திராகமம் 20:16*** *பிறனுக்கு விரோதமாகப் பொய்ச் சாட்சி சொல்லாதிருப்பாயாக.*

## 80. ஒன்பதாவது கட்டளை எதைக் கோருகிறது?

*மனிதர்களுக்கிடையில் உண்மை பராமரிக்கப்படவும், விஸ்தரிக்கப்படவும் வேண்டுமென்றும், நம்முடையதும், அயலானுடையதும் நற்பெயர் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், முக்கியமாக சாட்சி சொல்லுவதில் அது காணப்பட வேண்டும் என்றும் ஒன்பதாவது கட்டளை கோருகிறது.*

***சகரியா 8:16*** *நீங்கள் செய்யவேண்டிய காரியங்கள் என்னவென்றால்: அவனவன் பிறனோடே உண்மையைப் பேசுங்கள்; உங்கள் வாசல்களில் சத்தியத்துக்கும் சமாதானத்துக்கும் ஏற்க நியாயந்தீருங்கள்.*

***1 பேதுரு 3:16*** *கிறிஸ்துவுக்கேற்ற உங்கள் நல்ல நடக்கையைத் தூஷிக்கிறவர்கள் உங்களை அக்கிரமக்காரரென்று உங்களுக்கு*

*விரோதமாய்ச் சொல்லுகிற விஷயத்தில் வெட்கப்படும்படிக்கு நல்மனச்சாட்சியுடையவர்களாயிருங்கள்.*

***அப்போஸ்தலர் 25:10*** *அதற்குப் பவுல்: நான் இராயருடைய நியாயசனத்துக்கு முன்பாக நிற்கிறேன். அதற்கு முன்பாக நான் நியாயம் விசாரிக்கப்படவேண்டியது. யூதருக்கு நான் அநியாயம் ஒன்றும் செய்யவில்லை, அதை நீரும் நன்றாய் அறிந்திருக்கிறீர்.*

***3 யோவான் 12*** *தேமேத்திரியு எல்லாராலும் நற்சாட்சி பெற்றதுமல்லாமல், சத்தியத்தாலும் நற்சாட்சி பெற்றவன்; நாங்களும் சாட்சிகொடுக்கிறோம், எங்கள் சாட்சி மெய்யென்று அறிவீர்கள்.*

***நீதிமொழிகள் 14:5, 25*** *[5]மெய்ச்சாட்சிக்காரன் பொய்சொல்லான்; பொய்ச்சாட்சிக்காரனோ பொய்களை ஊதுகிறான்.*

*[25]மெய்ச்சாட்சி சொல்லுகிறவன் உயிர்களை இரட்சிக்கிறான்; வஞ்சனைக்காரனோ பொய்களை ஊதுகிறான்.*

## 81. ஒன்பதாவது கட்டளை எதைத் தடைசெய்கிறது?

*சத்தியத்தைக் குறித்து எவரும் தப்பெண்ணங்கொள்ளுதலையும், நம்முடையதும், அயலானுடையதும் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்துவதையும் ஒன்பதாவது கட்டளை தடைசெய்கிறது.*

***ரோமர் 3:13*** *அவர்கள் தொண்டை திறக்கப்பட்ட பிரேதக்குழி, தங்கள் நாவுகளால் வஞ்சனைசெய்கிறார்கள்; அவர்களுடைய உதடுகளின் கீழே பாம்பின் விஷம் இருக்கிறது;*

***யோபு 27:5*** *நீங்கள் பேசுகிறது நீதியென்று நான் ஒத்துக்கொள்வது எனக்குத் தூரமாயிருப்பதாக; என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன்.*

***லேவியராகமம் 19:16*** *உன் ஜனங்களுக்குள்ளே அங்குமிங்கும் கோள்சொல்லித் திரியாயாக; பிறனுடைய இரத்தப்பழிக்கு உட்பட வேண்டாம்; நான் கர்த்தர்.*

***சங்கீதம் 15:3*** *அவன் தன் நாவினால் புறங்கூறாமலும், தன் தோழனுக்குத் தீங்குசெய்யாமலும், தன் அயலான்மேல் சொல்லப் படும் நிந்தையான பேச்சை எடுக்காமலும் இருக்கிறான்.*

## 82. பத்தாவது கட்டளை என்ன?

*பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும் பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக என்பது பத்தாவது கட்டளையாகும்.*

***யாத்திராகமம் 20:17*** *பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக என்றார்.*

## 83. பத்தாவது கட்டளை எதைக் கோருகிறது?

*நாமிருக்கிற நிலையில் முழுமையான திருப்தியோடு இருக்க வேண்டும் என்றும், நம்முடைய அயலானைக் குறித்தும், அவனது உடமைகளைக் குறித்தும் நியாயமான இரக்கமுள்ள மனநிலை உடையவர்களாக இருக்க வேண்டும் என்றும் பத்தாவது கட்டளை கோருகிறது.*

***எபிரெயர் 13:5*** *நீங்கள் பணஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே.*

***1 தீமோத்தேயு 6:6*** *போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்.*

***யோபு 31:29-30*** *[29]என் பகைஞனுடைய ஆபத்திலே நான் மகிழ்ந்து, பொல்லாப்பு அவனுக்கு நேரிட்டபோது களிகூர்ந்திருந்தேனோ? [30]அவன் ஜீவனுக்குச் சாபத்தைக் கொடுக்கும்படி விரும்பி, வாயினால் பாவஞ்செய்ய நான் இடங்கொடுக்கவில்லை.*

***ரோமர் 12:15*** *சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள்; அழுகிறவர்களுடனே அழுங்கள்.*

***1 தீமோத்தேயு 1:5*** *கற்பனையின் பொருள் என்னவெனில், சுத்தமான இருதயத்திலும் நல்மனச்சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே.*

***1 கொரிந்தியர் 13:4-7*** *[4]அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, [5]அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, [6]அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். [7]சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்.*

## 84. பத்தாவது கட்டளை எதைத் தடைசெய்கிறது?

*நமது நிலையைக் குறித்து திருப்தியற்றிருப்பதையும், அயலானுடைய நலத்தில் பொறாமையும், துக்கமும் கொள்ளுவதையும், மற்றும் அவனுடைய எந்தவொரு பொருளின் மீதும் தகாத ஆசைகளையும், விருப்பங்களையும் வைத்திருப்பதையும் பத்தாவது கட்டளை தடை செய்கிறது.*

***1 இராஜாக்கள் 21:4*** *இப்படி என் பிதாக்களின் சுதந்தரத்தை உமக்குக் கொடேன் என்று யெஸ்ரயேலனாகிய நாபோத் தன்னோடே சொன்ன வார்த்தைக்காக ஆகாப் சலிப்பும் சினமுமாய், தன் வீட்டிற்கு வந்து, போஜனம்பண்ணாமல், தன் கட்டிலின்மேல் படுத்து, தன் முகத்தைத் திருப்பிக்கொண்டிருந்தான்.*

***எஸ்தர் 5:13*** *ஆனாலும் அந்த யூதனாகிய மொர்தெகாய் ராஜாவின் அரமனைவாசலில் உட்கார்ந்திருக்கிறதை நான் காணுமளவும் அவையெல்லாம் எனக்கு ஒன்றுமில்லையென்றான்.*

***1 கொரிந்தியர் 10:10*** *அவர்களில் சிலர் முறுமுறுத்து, சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள்; அதுபோல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள்.*

***கலாத்தியர் 5:26*** *வீண் புகழ்ச்சியை விரும்பாமலும், ஒருவரையொருவர் கோபமூட்டாமலும், ஒருவர்மேல் ஒருவர் பொறாமை கொள்ளாமலும் இருக்கக்கடவோம்.*

***யாக்கோபு 3:14, 16*** *[14]நீதியினிமித்தமாக நீங்கள் பாடுபட்டால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; அவர்களுடைய பயமுறுத்தலுக்கு நீங்கள் பயப்படாமலும் கலங்காமலும் இருந்து;*

*[16]கிறிஸ்துவுக்கேற்ற உங்கள் நல்ல நடக்கையைத் தூஷிக்கிறவர்கள் உங்களை அக்கிரமக்காரரென்று உங்களுக்கு விரோதமாய்ச்*

*சொல்லுகிற விஷயத்தில் வெட்கப்படும்படிக்கு நல்மனச்சாட்சி உடையவர்களாயிருங்கள்.*

***கொலோசேயர் 3:5*** *ஆகையால், விபச்சாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள்.*

## 85. எந்த மனிதனும் கர்த்தருடைய கட்டளைகளைப் பூரணமாகக் கைக்கொள்ளக்கூடியவனா?

*வீழ்ச்சிக்குப்பிறகு எந்த மனிதனும் கர்த்தருடைய கட்டளைகளை இவ்வுலக வாழ்க்கையில் பூரணமாக கைக்கொள்ள முடியாதவனாக இருக்கிறான்; ஆனால், அனுதினமும் தனது சிந்தனைகளாலும், வார்த்தைகளாலும், செயல்களாலும் அவற்றை மீறுகிறான்.*

***பிரசங்கி 7:20*** *ஒரு பாவமும் செய்யாமல், நன்மையே செய்யத்தக்க நீதிமான் பூமியிலில்லை.*

***1 யோவான் 1:8, 10*** *[8]நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது.*

*[10]நாம் பாவஞ்செய்யவில்லையென்போமானால், நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் இராது.*

***கலாத்தியர் 5:17*** *மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்ய வேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது.*

***ஆதியாகமம் 6:5*** *மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு,*

***ஆதியாகமம் 8:21*** *சுகந்த வாசனையைக் கர்த்தர் முகர்ந்தார். அப்பொழுது கர்த்தர்: இனி நான் மனுஷன் நிமித்தம் பூமியைச் சபிப்பதில்லை; மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயதுதொடங்கிப் பொல்லாததாயிருக்கிறது. நான் இப்பொழுது*

*செய்ததுபோல, இனி சகல ஜீவன்களையும் சங்கரிப்பதில்லை.*

**ரோமர் 3:9-20** *[9]ஆனாலும் என்ன? அவர்களைப்பார்க்கிலும்
நாங்கள் விசேஷித்தவர்களா? எவ்வளவேனும் விசேஷித்தவர்களல்ல.
யூதர் கிரேக்கர் யாவரும் பாவத்திற்குட்பட்டவர்களென்பதை
முன்பு திருஷ்டாந்தப்படுத்தினோமே. [10]அந்தப்படியே: நீதிமான்
ஒருவனாகிலும் இல்லை; [11]உணர்வுள்ளவன் இல்லை; தேவனைத்
தேடுகிறவன் இல்லை; [12]எல்லாரும் வழிதப்பி, ஏகமாய்க்
கெட்டுப்போனார்கள்; நன்மைசெய்கிறவன்இல்லை, ஒருவனாகிலும்
இல்லை. [13]அவர்கள் தொண்டை திறக்கப்பட்ட பிரேதக்குழி,
தங்கள் நாவுகளால் வஞ்சனைசெய்கிறார்கள்; அவர்களுடைய
உதடுகளின் கீழே பாம்பின் விஷம் இருக்கிறது; [14]அவர்கள் வாய்
சபிப்பினாலும் கசப்பினாலும் நிறைந்திருக்கிறது; [15]அவர்கள்
கால்கள் இரத்தஞ்சிந்துகிறதற்குத் தீவிரிக்கிறது; [16]நாசமும்
நிர்ப்பந்தமும் அவர்கள் வழிகளிலிருக்கிறது; [17]சமாதான வழியை
அவர்கள் அறியாதிருக்கிறார்கள்; [18]அவர்கள் கண்களுக்கு
முன்பாகத் தெய்வபயமில்லை, என்று எழுதியிருக்கிறதே. [19]மேலும்,
வாய்கள் யாவும் அடைக்கப்படும்படிக்கும், உலகத்தார் யாவரும்
தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்புக்கு ஏதுவானவர்களாகும்படிக்கும்,
நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் நியாயப்பிரமாணத்துக்கு
உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிந்திருக்
கிறோம். [20]இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு நியாயப்
பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப்
பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக
நீதிமானாக்கப்படுவதில்லை.*

**யாக்கோபு 3:2-12** *[2]நாம் எல்லாரும் அநேக விஷயங்களில்
தவறுகிறோம்; ஒருவன் சொல்தவறாதவனானால் அவன் பூரண
புருஷனும், தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக்
கொள்ளக்கூடியவனுமாயிருக்கிறான். [3]பாருங்கள், குதிரைகள்
நமக்குக் கீழ்ப்படியும்படிக்கு அவைகளின் வாய்களில் கடிவாளம்
போட்டு, அவைகளுடைய முழுச்சரீரத்தையும் திருப்பி நடத்துகிறோம்.
[4]கப்பல்களையும் பாருங்கள், அவைகள் மகா பெரியவைகளா
யிருந்தாலும், கடுங்காற்றுகளால் அடிபட்டாலும், அவைகளை
நடத்துகிறவன் போகும்படி யோசிக்கும் இடம் எதுவோ அவ்விடத்
திற்கு நேராக மிகவும் சிறிதான சுக்கானாலே திருப்பப்படும்.
[5]அப்படியே, நாவானதும் சிறிய அவயவமாயிருந்தும் பெருமை
யானவைகளைப் பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு*

*பெரிய காட்டைக் கொளுத்தி விடுகிறது! [6]நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படு கிறதாயும் இருக்கிறது! [7]சகலவிதமான மிருகங்கள், பறவைகள், ஊரும்பிராணிகள், நீர்வாழும் ஜெந்துக்கள் ஆகிய இவைகளின் சுபாவம் மனுஷசுபாவத்தால் அடக்கப்படும், அடக்கப்பட்டதுமுண்டு.*
*[8]நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது; அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம்நிறைந்ததுமாயிருக் கிறது. [9]அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்; தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம். [10]துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது.*
*[11]ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா? [12]என் சகோதரரே, அத்திமரம் ஒலிவப்பழங்களையும், திராட்சச்செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீரூற்றுத் தித்திப்பான ஜலத்தைக் கொடுக்கமாட்டாது.*

## 86. நியாயப்பிரமாணத்திற்கெதிரான எல்லா மீறுதல்களும் ஒரேவிதத்தில் வெறுக்கத்தக்கவையா?

*சில பாவங்கள் அவற்றின் தன்மையினாலும், அவற்றால் ஏற்படுகின்ற சில பாதகங்களினாலும் ஏனைய பாவங்களைவிட கர்த்தருடைய பார்வையிலே மிகவும் வெறுக்கத்தக்கவையாக இருக்கின்றன.*

***எசேக்கியேல் 8:6, 13, 15*** *[6]அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, அவர்கள் செய்கிறதைக் காண்கிறாயா? என் பரிசுத்த ஸ்தலத்தை விட்டு என்னைத் தூரமாய்ப் போகப்பண்ணும்படியான இஸ்ரவேல் வம்சத்தார் இங்கே செய்கிற மிகுந்த அருவருப்புகளைக் காண்கிறாய் அல்லவா? இதிலும் அதிக அருவருப்புகளை இன்னமும் காண்பாய் என்று சொல்லி,*

*[13]பின்னும் அவர்கள் செய்கிற அதிக அருவருப்புகளை இன்னமும் காண்பாய் என்று அவர் என்னுடனே சொல்லி,*

*[15]அப்பொழுது அவர்: மனுபுத்திரனே, இதைக் கண்டாயா? இதிலும் அதிக அருவருப்புகளை இன்னமும் காண்பாய் என்று என்னுடனே சொல்லி,*

*__யோவான் 19:11__ இயேசு பிரதியுத்தரமாக: பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது; ஆனபடியினாலே என்னை உம்மிடத்தில் ஒப்புக்கொடுத்தவனுக்கு அதிக பாவமுண்டு என்றார்.*

## 87. ஒவ்வொரு பாவமும் எதைப் பெறத் தகுதியானது?

*ஒவ்வொரு பாவமும் இவ்வுலகத்திலும், இனிவரப்போகும் உலகத்திலும் கர்த்தருடைய கோபத்தையும், சாபத்தையும் பெறத்தகுதியானது.*

*__எபேசியர் 5:6__ இப்படிப்பட்டவைகளினிமித்தமாகக் கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வருவதால், ஒருவனும் உங்களை வீண்வார்த்தைகளினாலே மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்;*

*__கலாத்தியர் 3:10__ நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள்; நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளையெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறதே.*

*__புலம்பல் 3:39__ உயிருள்ள மனுஷன் முறையிடுவானேன்? அவன் தன் பாவத்துக்கு வரும் தண்டனையைக்குறித்து முறையிடுகிறதென்ன?*

*__மத்தேயு 25:41__ அப்பொழுது, இடதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்.*

## 88. பாவிகள் தங்களுடைய பாவத்தின் காரணமாக அனுபவிக்க வேண்டிய தேவ கோபத்திலிருந்தும், சாபத்திலிருந்தும் தப்ப கர்த்தர் அவர்களுக்கு என்ன வழியை வெளிப்படுத்தியிருக்கிறார்?

*பாவிகள் தங்களுடைய பாவத்திலிருந்து விடுதலை அடைந்து இரட்சிப்பைப் பெறும் ஒரே வழியாக கர்த்தர் அவர்களுக்கு தன்னுடைய குமாரனான இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.*

***ரோமர் 1:16*** *கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது.*

***அப்போஸ்தலர் 4:12*** *அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்.*

## 89. பாவிகள் இரட்சிப்பை அடைவதற்கு கர்த்தர் தன்னுடைய சுவிசேஷத்தின் மூலம் எதைக் கோருகிறார்?

*தங்களுடைய பாவத்தின் காரணமாக அனுபவிக்க வேண்டிய தேவ கோபத்திலிருந்து தப்பி இரட்சிப்பை அடைய பாவிகள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டுமென்றும், ஜீவனுக்குரிய மனந்திரும்புதலை அடைய வேண்டும் என்றும் கர்த்தர் கோருகிறார்.*

***அப்போஸ்தலர் 20:21*** *தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக்குறித்தும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதைக் குறித்தும், நான் யூதருக்கும் கிரேக்கருக்கும் சாட்சியாக அறிவித்தேன்.*

## 90. கிறிஸ்துவை விசுவாசித்தல் என்றால் என்ன?

*கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசம் இரட்சிக்கும் கிருபையாகும்; அதன்மூலம் பாவிகள் தங்களுடைய இரட்சிப்பிற்காக சுவிசேஷத்தின் மூலம் வழங்கப்படுகின்ற கிறிஸ்துவைப் பெற்று அவரில் மட்டுமே தங்கியிருக்கிறார்கள்.*

***எபேசியர் 2:8-9*** *8 கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; 9 ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல.*

***யோவான் 1:12*** *அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்.*

***பிலிப்பியர் 3:9*** *நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும்,*

***கலாத்தியர் 2:15-16*** *[15]புறஜாதியாரில் பிறந்த பாவிகளாயிராமல், சுபாவத்தின்படி யூதராயிருக்கிற நாமும் இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலேயன்றி, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே மனுஷன் நீதிமானாக்கப்படுவதில்லையென்று அறிந்து, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலல்ல, கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படும்படிக்குக் கிறிஸ்து இயேசுவின்மேல் விசுவாசிகளானோம். [16]நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே.*

***ரோமர் 10:14, 17*** *[14]அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்ளுவார்கள்? அவரைக்குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்?*

*[17]ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.*

## 91. ஜீவனுக்குரிய மனந்திரும்புதல் என்றால் என்ன?

*பாவி தன்னுடைய பாவத்தைக்குறித்த மெய்யான உணர்வோடும், கிறிஸ்துவில் கர்த்தர் தனக்களித்துள்ள கிருபையின் புரிந்துகொள்ளுதலோடும், துக்கத்தோடு தன்னுடைய பாவத்தை வெறுத்து, அதைவிட்டு விலகி கடவுளை நாடி, கீழ்ப்படிதலைத் தன்னுடைய முழு நோக்கமாகக் கொண்டு அதற்காக உழைக்கும்படிச் செய்யும் இரட்சிக்கும் கிருபையே ஜீவனுக்குரிய மனந்திரும்புதலாகும்.*

***அப்போஸ்தலர் 11:18*** *இவைகளை அவர்கள் கேட்டபொழுது அமர்ந்திருந்து: அப்படியானால் ஜீவனுக்கேதுவான மனந்திருப்புதலைத் தேவன் புறஜாதியாருக்கும் அருளிச்செய்தார் என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்.*

***அப்போஸ்தலர் 2:37-38*** *[37]இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும் என்றார்கள். [38]பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.*

***யோவேல் 2:12-13*** *[12]ஆதலால் நீங்கள் இப்பொழுதே உபவாசத் தோடும் அழுகையோடும் புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். [13]நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் இடத்தில் திரும்புங்கள்; அவர் இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்; அவர் தீங்குக்கு மனஸ்தாபப் படுகிறவருமாயிருக்கிறார்.*

***எரேமியா 31:18-19*** *[18]நீர் என்னைத் தண்டித்தீர், நான் பணியாத மாடுபோல் அடிக்கப்பட்டேன்; என்னைத் திருப்பும், அப்பொழுது திருப்பப்படுவேன்; நீரே என் தேவனாகிய கர்த்தர். [19]நான் திரும்பினபின்பு மனஸ்தாபப்பட்டுக்கொண்டிருக்கிறேன், நான் என்னை அறிந்துகொண்டதற்குப் பின்புவிலாவில் அடித்துக் கொண்டிருக்கிறேன், வெட்கி நாணிக்கொண்டுமிருக்கிறேன், என் இளவயதின் நிந்தையைச் சுமந்துவருகிறேன் என்று எப்பிராயீம் துக்கித்துப் புலம்பிக்கொண்டிருக்கிறதை நிச்சயமாய்க் கேட்டேன்.*

***எசேக்கியேல் 36:31*** *அப்பொழுது நீங்கள் உங்கள் பொல்லாத மார்க்கங்களையும் உங்கள் தகாத கிரியைகளையும் நினைத்து, உங்கள் அக்கிரமங்களினிமித்தமும் உங்கள் அருவருப்புகளினிமித்தமும் உங்களையே அரோசிப்பீர்கள்.*

***சங்கீதம் 119:59*** *என் வழிகளைச் சிந்தித்துக்கொண்டு, என் கால்களை உம்முடைய சாட்சிகளுக்கு நேராகத் திருப்பினேன்.*

### 92. வெளிப்புறமாக சுவிசேஷத்துக்கு கீழ்ப்படிகிற எல்லோரும் தங்களுடைய பாவத்துக்கான தேவ கோபத்திலிருந்து தப்ப முடியுமா?

*வெளிப்புறமாக சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிகிறவர்களல்ல; விசுவாசத்தையும், பரிசுத்தத்தையும் விடாமுயற்சியுடன்*

*இறுதிவரை கடைப்பிடிப்பவர்கள் மட்டுமே இரட்சிப்பை அடைய முடியும்.*

***மத்தேயு 7:21*** *பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.*

***1 பேதுரு 1:5*** *கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப் பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக்கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.*

***எபிரெயர் 12:14*** *யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்த முள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே.*

## 93. இறுதிவரை விசுவாசத்தையும், பரிசுத்தத்தையும் விடாமுயற்சியுடன் கடைப்பிடித்து நித்திய இரட்சிப்பை அடைகிறவர்கள் யார்?

*கர்த்தரின் நித்திய ஆணை, மாறாத அன்பு, கிறிஸ்துவின் வேண்டுதல் ஆகியவற்றின் காரணமாகவும், பரிசுத்த ஆவியும் வார்த்தையும் அவர்களில் இருப்பதன் காரணமாகவும் அனைத்து மெய் விசுவாசிகளும் கிறிஸ்துவுக்குள்ளான அனைத்து ஆத்மீக ஆசீர்வாதங்களையும் கர்த்தரிடமிருந்து பெற்று அவருடைய வல்லமையால் பாதுகாக்கப்படுவதால் நிச்சயமாக தங்களுடைய விசுவாசத்திலும், பரிசுத்தத்திலும் இரட்சிப்புக்காக விடாமுயற்சியுடன் இறுதிவரை ஈடுபடுவார்கள்.*

***ரோமர் 8:28-30*** *[28]அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர் களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். [29]தம்முடைய குமாரன் அநேக சகோதரருக் குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்; [30]எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை*

*அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக் கிறார்.*

***எரேமியா 31:3*** *பூர்வகாலமுதல் கர்த்தர் எனக்குத் தரிசனையானார் என்பாய்; ஆம் அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன்.*

***எபிரெயர் 7:25*** *மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்.*

***யோவான் 14:16*** *நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.*

***யோவான் 10:28-29*** *28நான் அவைகளுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை.*
*29அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்; அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது.*

***1 பேதுரு 1:5*** *கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப் பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக்கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.*

***எபேசியர் 1:3*** *நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்.*

***1 கொரிந்தியர் 1: 8-9*** *8நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே நீங்கள் குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்கும்படி முடிவுபரியந்தம் அவர் உங்களை ஸ்திரப்படுத்துவார்.*
*9தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்.*

***பிலிப்பியர் 1:5-6*** *[5]உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி, [6]நான் உங்களை நினைக்கிறபொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்.*

## 94. தன்னால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களைப் பராமரிக்கவும், கிறிஸ்துவின் மீட்பின் ஆசீர்வாதங்களை அவர்கள் அடையவும் கர்த்தர் பயன்படுத்தும் வெளிப்புறமானதும், சாதாரணமானதுமான கிருபையின் சாதனங்கள் யாவை?

*கடவுளின் திருநியமங்களில், முக்கியமாக வார்த்தை, ஞானஸ்நானம், திருவிருந்து, ஜெபம் ஆகிய திருநியமங்களையே கர்த்தர் தன்னால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களைப் பராமரித்து கிறிஸ்துவின் மீட்பின் ஆசீர்வாதங்களை அவர்கள் அடையப் பயன்படுத்தும் வெளிப்புறமானதும் சாதாரணமானதுமான கிருபையின் சாதனங்கள்; இவையனைத்தும் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் இரட்சிப்பை அடையும்விதமாக திட்ப உறுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன.*

***மத்தேயு 28:19-20*** *[19]ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, [20]நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.*

***அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:41-42, 46-47*** *[41]அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். [42]அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.*

*[46]அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள்தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி, [47]தேவனைத்*

*துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார்.*

## 95. வார்த்தை எந்தவிதத்தில் ஆத்துமாவின் இரட்சிப்பிற்காகப் பயன்படுத்தப்படுகிறது?

*பரிசுத்த ஆவியானவர், வேத வாசிப்பை, சிறப்பாகப் பிரசங்கிக்கப்படும் வார்த்தையை பாவிகள் விசுவாசத்தின் மூலம் இரட்சிக்கப்படும்படிக்கு, அவர்களில் உணர்த்தி மனமாற்றமடையச் செய்யும் கிருபையின் சாதனமாகப் பயன்படுத்துவதோடு, விசுவாசத்தின் மூலம் இரட்சிப்பை அடையும்படியாக விசுவாசிகள் பரிசுத்தத்திலும், ஆறுதலிலும் வளரும்படியாகவும் செய்கிறார்.*

***நெகேமியா 8:8*** *அவர்கள் தேவனுடைய நியாயப்பிரமாணப் புஸ்தகத்தை தீர்க்கமாக வாசித்து அர்த்தஞ்சொல்லி, வாசித்ததை அவர்களுக்கு விளங்கப்பண்ணினார்கள்.*

***1 தீமோத்தேயு 4:13, 16*** *[13]நான் வருமளவும் வாசிக்கிறதிலும் புத்திசொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிரு.*

*[16]உன்னைக்குறித்தும் உபதேசத்தைக்குறித்தும் எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலைகொண்டிரு, இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்ளுவாய்.*

***1 கொரிந்தியர் 1:21*** *எப்படியெனில், தேவஞானத்துக்கேற்றபடி உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று.*

***ரோமர் 10:13-17*** *[13]ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான். [14]அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்ளுவார்கள்? அவரைக்குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? [15]அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக்கூறி, நற்காரியங்களைச்*

*சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே. [16]ஆனாலும் சுவிசேஷத்துக்கு எல்லாரும் கீழ்ப்படியவில்லை. அதைக்குறித்து ஏசாயா: கர்த்தாவே, எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார் என்று சொல்லுகிறான். [17]ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.*

***சங்கீதம் 19:7-8*** *[7]கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது. [8]கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும், இருதயத்தைச் சந்தோஷிப்பிக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய கற்பனை தூய்மையும், கண்களைத் தெளிவிக்கிறதுமாயிருக்கிறது.*

***1 கொரிந்தியர் 14:24-25*** *[24]எல்லாரும் தீர்க்கதரிசனஞ் சொல்லுகையில், அவிசுவாசியொருவன், அல்லது கல்லாதவனொருவன், உள்ளே பிரவேசித்தால், அவன் எல்லாராலும் உணர்த்துவிக்கப்பட்டும், எல்லாராலும் நிதானிக்கப்பட்டும் இருப்பான். [25]அவனுடைய இருதயத்தின் அந்தரங்கங்களும் வெளியரங்கமாகும்; அவன் முகங்குப்புற விழுந்து, தேவனைப் பணிந்துகொண்டு, தேவன் மெய்யாய் உங்களுக்குள்ளே இருக்கிறாரென்று அறிக்கையிடுவான்.*

***அப்போஸ்தலர் 20:32*** *இப்பொழுதும் சகோதரரே, நீங்கள் பக்திவிருத்தியடையவும் பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்திரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன்.*

***ரோமர் 15:4*** *தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது.*

***1 தெசலோனிக்கேயர் 1:6-7*** *[6]நீங்கள் மிகுந்த உபத்திரவத்திலே, பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே, திருவசனத்தை ஏற்றுக் கொண்டு, எங்களையும் கர்த்தரையும் பின்பற்றுகிறவர்களாகி, [7]நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையா யிருங்கள்.*

***ரோமர் 1:16*** *கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது.*

***2 தீமோத்தேயு 3:15-17*** *[15]கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ள வனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும். [16]வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவ னாகவும் இருக்கும்படியாக, [17]அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.*

## 96. இரட்சிப்பை அடைவதற்கு ஏதுவாக வார்த்தையை எவ்வாறு வாசிக்கவும், கேட்கவும் வேண்டும்?

*இரட்சிப்பை அடைவதற்கு ஏதுவாக வார்த்தை அமையும்படி நாம் ஊக்கத்தோடும், கவனத்தோடும், ஆயத்தத்தோடும், ஜெபத்தோடும் அதைக் கேட்டு அல்லது வாசித்து விசுவாசத்தோடும், அன்போடும் அதை ஏற்று, நமது இருதயத்தில் இருத்தி வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த வேண்டும்.*

***நீதிமொழிகள் 8:34*** *என் வாசற்படியில் நித்தம் விழித்திருந்து, என் கதவு நிலையருகே காத்திருந்து, எனக்குச் செவிகொடுக்கிற மனுஷன் பாக்கியவான்.*

***1 பேதுரு 2:1-2*** *[1]இப்படியிருக்க, கர்த்தர் தயையுள்ளவரென்பதை நீங்கள் ருசிபார்த்ததுண்டானால், [2]சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு,*

***சங்கீதம் 119:18*** *உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும்.*

***எபிரெயர் 4:2*** *ஏனெனில், சுவிசேஷம் அவர்களுக்கு அறிவிக்கப் பட்டதுபோல நமக்கும் அறிவிக்கப்பட்டது; கேட்டவர்கள் விசுவாச மில்லாமல் கேட்டபடியினால், அவர்கள் கேட்ட வசனம் அவர்களுக்குப் பிரயோஜனப்படவில்லை.*

*2 **தெசலோனிக்கேயர் 2:10** கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனடியால் அப்படி நடக்கும்.*

***சங்கீதம் 119:11*** *நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்.*

***லூக்கா 8:15*** *நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன்கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள்.*

***யாக்கோபு 1:25*** *சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்.*

## 97. புதிய உடன்படிக்கையின் திருநியமங்கள் என்பது என்ன?

*கிறிஸ்துவையும், புதிய உடன்படிக்கையின் பலாபலன்களையும் உணரக்கூடிய அடையாளங்களால் பிரதிநிதித்துவப்படுத்தி, முத்திரையிட்டு விசுவாசிகளுக்கு வழங்கும்படியாக கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்ட பரிசுத்த நியமனமே புதிய உடன்படிக்கையின் திருநியமங்களாகும்.*

*1 **கொரிந்தியர் 11:23-26** [23]நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, [24]ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். [25]போஜனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். [26]ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.*

## 98. புதிய உடன்படிக்கையின் திருநியமங்கள் யாவை?

*ஞானஸ்நானமும், திருவிருந்துமே (கர்த்தருடைய பந்தி) புதிய உடன்படிக்கையின் திருநியமங்களாகும்.*

***மத்தேயு 28:19*** *ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,*

***1 கொரிந்தியர் 11:23-26*** *[23]நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, [24]ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். [25]போஜனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். [26]ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.*

## 99. ஞானஸ்நானமும், திருவிருந்தும் எவ்வாறு இரட்சிப்புக்கான திட்ப உறுதியான திருநியமங்களாக அமைகின்றன?

*ஞானஸ்நானமும், திருவிருந்தும் அவற்றில் காணப்படும் எந்த நற்பண்பிலோ அல்லது அவற்றை வழங்குபவரின் நற்பண்பிலோ இரட்சிப்புக்கேதுவானவையாக இல்லாமல் கிறிஸ்துவின் ஆசீர்வாதத்தினாலும், பரிசுத்த ஆவியானவரின் செயல்பாட்டினாலும் விசுவாசத்தோடு அவற்றைப் பெற்றுக்கொள்ளுபவர்களுக்கு அவை இரட்சிப்புக்கேதுவான திட்ப உறுதியான திருநியமங்களாகின்றன.*

***1 கொரிந்தியர் 3:6–7*** *[6]நான் நட்டேன், அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான், தேவனே விளையச்செய்தார். [7]அப்படியிருக்க, நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்சுகிறவனாலும் ஒன்றுமில்லை, விளையச்செய்கிற தேவனாலே எல்லாமாகும்.*

*1 **பேதுரு** 3:21. அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச் சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது;*

## 100. ஞானஸ்நானம் என்பது எது?

*ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்ட புதிய உடன்படிக்கையின் திருநியமமாகும். ஞானஸ்நானம், அதைப் பெற்றுக்கொள்ளுகிற நபருக்கு கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றோடு அவருக்குள்ள ஐக்கியம், கிறிஸ்துவில் அவர் இணைக்கப்படுதல், அவருடைய பாவமன்னிப்பு, தன்னைக் கிறிஸ்துவின் மூலமாக கடவுளுக்கு அவர் ஒப்புக்கொடுத்தல், புதிய ஜீவனுள்ள வாழ்க்கையை வாழுதல் ஆகியனவற்றிற்கு அடையாளமாக இருக்கின்றது.*

***மத்தேயு** 28:19 ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,*

***ரோமர் 6:3–4*** *[3]கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? [4]மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்.*

***கொலோசெயர் 2:12*** *ஞானஸ்நானத்தில் அவரோடேகூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரி லிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத் தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்.*

***கலாத்தியர் 3:26–27*** *[26]நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. [27]ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே.*

## 101. யாருக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட வேண்டும்?

*கடவுளிடம் மனந்திரும்புதலையும், இயேசு கிறிஸ்து மீதான விசுவாசத்தையும், கீழ்ப்படிதலையும் நம்பத்தகுந்த முறையில் யாரெல்லாம் அறிக்கை செய்கிறார்களோ அவர்களுக்கு மட்டுமே ஞானஸ்நானம் கொடுக்கப்பட வேண்டும். வேறு எவருக்கும் அது கொடுக்கப்படக் கூடாது.*

***அப்போஸ்தலர் 2:38, 41*** *[38]பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.*

*[41]அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்.*

***மாற்கு 16:16*** *விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.*

***அப்போஸ்தலர் 8:12*** *தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக்குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்.*

## 102. விசுவாசிகளின் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கலாமா?

*விசுவாசிகளின் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கக்கூடாது. ஏனெனில், பரிசுத்த வேதாகமத்தில் அதற்கான எந்தக் கட்டளையோ, உதாரணங்களோ அல்லது உள்ளடக்கமான போதனைகளோ கொடுக்கப்படவில்லை.*

***உபாகமம் 12:32*** *நான் உனக்கு விதிக்கிற யாவையும் செய்யும்படி கவனமாயிரு; நீ அதனோடே ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்.*

***நீதிமொழிகள் 30:6*** *அவருடைய வசனங்களோடு ஒன்றையும்*

*கூட்டாதே, கூட்டினால் அவர் உன்னைக் கடிந்துகொள்ளுவார், நீ பொய்யனாவாய்.*

***அப்போஸ்தலர் 8:12*** *தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக்குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்.*

***அப்போஸ்தலர் 10:47-48*** *[47]அப்பொழுது பேதுரு: நம்மைப்போலப் பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாத படிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி, [48]கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது சிலநாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக்கொண்டார்கள்.*

## 103. முறையாக ஞானஸ்நானம் எவ்வாறு கொடுக்கப்பட வேண்டும்?

*கிறிஸ்து ஏற்படுத்தித் தந்துள்ள முறையின்படியும், அப்போஸ்தலர்களுடைய நடைமுறையின்படியும், பிதா, குமாரன், ஆவியானவரின் நாமத்திலே விசுவாசியின் சரீரம் முழுவதையும் தண்ணீரிலே அழுத்தி ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும். தண்ணீரை விசுவாசியின் மீது தெளிப்பதன் மூலமாகவோ, அவர்களுடைய சரீரத்தின் ஒரு பகுதியை மட்டும் தண்ணீரில் அழுத்துவதன் மூலமாகவோ ஞானஸ்நானம் கொடுக்கப்படக்கூடாது.*

***மத்தேயு 3:16*** *இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார்.*

***யோவான் 3:23*** *சாலிம் ஊருக்குச் சமீபமான அயினோன் என்னும் இடத்திலே தண்ணீர் மிகுதியாயிருந்தபடியினால், யோவானும் அங்கே ஞானஸ்நானங்கொடுத்துவந்தான்; ஜனங்கள் அவனிடத்தில் வந்து ஞானஸ்நானம் பெற்றார்கள்.*

***அப்போஸ்தலர் 8:38-39*** *[38]இரதத்தை நிறுத்தச்சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங்கொடுத்தான். [39]அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய*

*ஆவியானவர் பிலிப்பைக் கொண்டுபோய்விட்டார். மந்திரியும் அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான்.*

## 104. திருவிருந்து (கர்த்தருடைய பந்தி) என்றால் என்ன?

*புதிய உடன்படிக்கையின் திருநியமங்களில் ஒன்று திருவிருந்து. கிறிஸ்து ஏற்படுத்தியபடி அப்பத்தையும், திராட்சை இரசத்தையும் அளிப்பதன் மூலமும், அவற்றில் பங்குகொள்வதன் மூலமும் கிறிஸ்துவின் மரணம் திருவிருந்தில் எடுத்துக்காட்டப்படுகிறது. தகுதியோடு அதில் பங்குபெறுகிறவர்கள் சரீரப் பிரகாரமாகவோ, மாம்சப்பிரகாரமாகவோ அல்லாமல் விசுவாசத்தினால் கிறிஸ்துவின் சரீரத்திலும், திரு இரத்தத்திலும், அவருடைய சகல பலாபலன்களிலும் பங்காளர்களாகி ஆத்மீக போஷாக்கடைந்து கிருபையிலும் வளர்கிறார்கள்.*

***1 கொரிந்தியர் 11:23-26*** *[23]நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, [24]ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். [25]போஜனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். [26]ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.*

***1 கொரிந்தியர் 10:16*** *நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமா யிருக்கிறதல்லவா?*

## 105. தகுதியோடு திருவிருந்தைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமானவை யாவை?

*திருவிருந்தைப் பெற்றுக்கொள்ளத் தகுதியுள்ளவர்கள் அபாத்திரமாய் திருவிருந்தில் பங்குகொண்டு ஆக்கினைத் தீர்ப்பை அடையாதபடிக்கு, கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறிந்துகொள்ளுகிறோமா என்று தங்களுடைய அறிவையும், திருவிருந்தைப் புசிக்கும்படியாக தங்களுடைய விசுவாசத்தையும், தங்களுடைய மனந்திரும்புதலையும், அன்பையும் சோதித்துப் பார்த்து புதிய கீழ்ப்படிதலோடு திருவிருந்தில் பங்குகொள்ள வேண்டும்.*

***1 கொரிந்தியர் 11: 16-17, 28-29, 31*** *[16]ஆகிலும் ஒருவன் வாக்குவாதஞ் செய்ய மனதாயிருந்தால், எங்களுக்கும், தேவனுடைய சபைகளுக்கும், அப்படிப்பட்ட வழக்கமில்லையென்று அறியக்கடவன். [17]உங்களைப் புகழாமல் இதைக்குறித்து உங்களுக்குக் கட்டளைகொடுக்கிறேன; நீங்கள் கூடிவருதல் நன்மைக்கேதுவாயிராமல், தீமைக்கேதுவாயிருக்கிறது.*

*[28]எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன். [29]என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்.*

*[31]நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்.*

***2 கொரிந்தியர் 13:5*** *நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்; உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள். இயேசு கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள்.*

***1 கொரிந்தியர் 5:7-8*** *[7]ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. [8]ஆதலால் பழைய புளித்தமாவோடேஅல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு*

*உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்.*

## 106. கர்த்தர் ஏற்றுக்கொள்ளுகிற ஜெபம் எது?

*கர்த்தருடைய சித்தத்திற்கு உகந்தவிதத்தில் நீதிமான்கள் தங்களுடைய விருப்பங்களை பாவ அறிக்கையுடனும், கர்த்தருடைய இரக்கங்களுக்கான நன்றியறிதலுடனும், கிறிஸ்துவின் நாமத்தில், பரிசுத்த ஆவியின் துணையோடு கர்த்தருக்கு முன்பாக ஏறெடுப்பதே ஜெபமாகும்.*

***நீதிமொழிகள் 15:8*** *துன்மார்க்கருடைய பலி கர்த்தருக்கு அருவருப்பானது; செம்மையானவர்களின் ஜெபமோ அவருக்குப் பிரியம்.*

***நீதிமொழிகள் 28:9*** *வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது.*

***சங்கீதம் 62:8*** *ஜனங்களே, எக்காலத்திலும் அவரை நம்புங்கள்; அவர் சமுகத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றிவிடுங்கள்; தேவன் நமக்கு அடைக்கலமாயிருக்கிறார்.*

***1 யோவான் 5:14*** *நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்.*

***யோவான் 16:23*** *அந்த நாளிலே நீங்கள் என்னிடத்தில் ஒன்றுங் கேட்கமாட்டீர்கள். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார்.*

***ரோமர் 8:26*** *அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டிய தின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்.*

***சங்கீதம் 32:5-6*** *[5]நான் என் அக்கிரமத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்; என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் என்றேன்; தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர். [6]இதற்காகச் சகாயங்கிடைக்குங் காலத்தில் பக்தியுள்ளவனெவனும் உம்மை நோக்கி விண்ணப்பஞ்செய்வான்;*

*அப்பொழுது மிகுந்த ஜலப்பிரவாகம் வந்தாலும் அது அவனை அணுகாது.*

***தானியேல் 9:4*** *என் தேவனாகிய கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணி, பாவஅறிக்கை செய்து: ஆ ஆண்டவரே, உம்மில் அன்புகூர்ந்து, உம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு உடன்படிக்கையையும் கிருபையையும் காக்கிற மகத்துவமும் பயங்கரமுமான தேவனே.*

***பிலிப்பியர் 4:6*** *நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லா வற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள்.*

### 107. தன்னுடைய மக்கள் ஜெபிப்பதற்கு வழிகாட்டியாக கர்த்தர் தந்துள்ள விதி என்ன?

*கர்த்தருடைய வார்த்தை முழுவதுமே ஜெபத்திலே அவருடைய மக்களுக்கு வழிகாட்டியாக அமைந்திருந்தாலும் 'கர்த்தருடைய ஜெபம்' என்று அழைக்கப்படுகின்ற தன்னுடைய சீடர்களுக்கு கிறிஸ்து போதித்த மாதிரி ஜெபம் அவர்கள் ஜெபிப்பதற்கு சிறப்பான விதியாகக் காணப்படுகின்றது.*

***1 யோவான் 5:14*** *நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்.*

***மத்தேயு 6:9-13*** *[9]நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. [10]உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக. [11]எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். [12]எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். [13]எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென், என்பதே.*

***லூக்கா 11:2-4*** *[2]அதற்கு அவர்: நீங்கள் ஜெபம்பண்ணும்போது:*

*பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக; உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக; [3]எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை அன்றன்றும் எங்களுக்குத் தாரும்; [4]எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்; நாங்களும் எங்களிடத்தில் கடன்பட்ட எவனுக்கும் மன்னிக்கிறோமே; எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், என்று சொல்லுங்கள் என்றார்.*

## 108. கர்த்தருடைய ஜெபத்தின் அறிமுகப்பகுதி அவருடைய சீடர்களுக்கு எதைப் போதிக்கின்றது?

*'பரமண்டலங்களிலிருக்கின்ற எங்கள் பிதாவே' என்ற கர்த்தருடைய ஜெபத்தின் அறிமுகப்பகுதி அவருடைய சீடர்களுக்கு உதவக்கூடியவரும் அதற்குத் தயாராக இருப்பவருமான கர்த்தரிடத்தில் ஒரு பிள்ளை தன் தகப்பனிடத்தில் செல்லுவது போன்ற பரிசுத்தத்துடனும், பயத்துடனும், நம்பிக்கையுடனும் அணுக வேண்டும் என்றும் அவர்கள் மற்றவர்களுக்காகவும், மற்றவர்களுடன் சேர்ந்தும் ஜெபிக்க வேண்டும் என்றும் போதிக்கின்றது.*

***மத்தேயு 6:9*** *நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே,*

***அப்போஸ்தலர் 11:26*** *அவர்கள் ஒரு வருஷகாலமாய்ச் சபையோடே கூடியிருந்து, அநேக ஜனங்களுக்கு உபதேசம்பண்ணினார்கள். முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று.*

***ஏசாயா 64:9*** *கர்த்தாவே, அதிகமாய்க் கடுங்கோபங்கொள்ளாமலும், என்றைக்கும் அக்கிரமத்தை நினைத்துக்கொள்ளாமலும் இருப்பீராக; இதோ, பாரும், நாங்கள் அனைவரும் உம்முடைய ஜனங்களே.*

***லூக்கா 11:13*** *பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்.*

***ரோமர் 8:15*** *அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்.*

***1 தீமோத்தேயு 2:1–2*** *[1]நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்; [2]நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும்.*

***எபேசியர் 6:18*** *எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்.*

## 109. முதல் விண்ணப்பத்தின் மூலம் கிறிஸ்தவர்கள் எதற்காக ஜெபிக்கிறார்கள்?

*‘உம்முடைய நாம் பரிசுத்தப்படுவதாக’ என்ற முதலாவது விண்ணப்பத்தின் மூலம் கர்த்தர் தன்னை வெளிப்படுத்துகிற அனைத்தின் மூலமும் அவரை மகிமைப்படுத்தும்படி கிறிஸ்தவர்களையும் ஏனையோரையும் அவர் பெலப்படுத்த வேண்டும் என்றும், எல்லாக் காரியங்களும் அவருடைய மகிமைக்காகவே செய்யப்பட வேண்டும் என்றும் கிறிஸ்தவர்கள் விண்ணப்பிக்கிறார்கள்.*

***மத்தேயு 6:9*** *நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.*

***சங்கீதம் 67:1–3*** *[1]தேவனே, பூமியில் உம்முடைய வழியும், எல்லா ஜாதிகளுக்குள்ளும் உம்முடைய இரட்சணியமும் விளங்கும்படியாய், [2]தேவரீர் எங்களுக்கு இரங்கி, எங்களை ஆசீர்வதித்து, உம்முடைய முகத்தை எங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணும். [3]தேவனே, ஜனங்கள் உம்மைத் துதிப்பார்களாக; சகல ஜனங்களும் உம்மைத் துதிப்பார்களாக.*

***ரோமர் 11:36*** *சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்.*

## 110. இரண்டாவது விண்ணப்பத்தின் மூலம் கிறிஸ்தவர்கள் எதற்காக ஜெபிக்கிறார்கள்?

*'உம்முடைய இராஜ்யம் வருவதாக' என்ற இரண்டாவது விண்ணப்பத்தின் மூலம் சாத்தானின் இராஜ்ஜியம் அழிக்கப்பட வேண்டும் என்றும், கிருபையின் இராஜ்ஜியம் முன்னேற வேண்டும் என்றும், பாவிகள் அதற்குள் கொண்டுவரப்பட வேண்டும் என்றும், கிறிஸ்தவர்கள் அதில் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், அந்த மகிமையின் இராஜ்ஜியம் விரைவில் வரவேண்டும் என்றும் ஜெபிக்கிறார்கள்.*

***மத்தேயு 6:10*** *உம்முடைய ராஜ்யம் வருவதாக.*

***சங்கீதம் 68:1*** *தேவன் எழுந்தருளுவார், அவருடைய சத்துருக்கள் சிதறுண்டு, அவரைப் பகைக்கிறவர்கள் அவருக்குமுன்பாக ஓடிப்போவார்கள்.*

***சங்கீதம் 51:18*** *சீயோனுக்கு உமது பிரியத்தின்படி நன்மைசெய்யும்; எருசலேமின் மதில்களைக் கட்டுவீராக.*

***வெளிப்படுத்தின விசேஷம் 12:10-11*** *[10]அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி: இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது; இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத்தள்ளப்பட்டுப்போனான். [11]மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்.*

***2 தெசலோனிக்கேயர் 3:1*** *கடைசியாக, சகோதரரே, உங்களிடத்தில் கர்த்தருடைய வசனம் பரம்பி மகிமைப்படுகிறதுபோல, எவ்விடத்திலும் பரம்பி மகிமைப்படும்படிக்கும்,*

***ரோமர் 10:1*** *சகோதரரே, இஸ்ரவேலர் இரட்சிக்கப்படவேண்டும்*

*என்பதே என் இருதயத்தின் விருப்பமும் நான் தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப்பமுமாயிருக்கிறது.*

***கொலோசெயர் 1:9-13*** *[9]இதினிமித்தம், நாங்கள் அதைக் கேட்ட நாள்முதல் உங்களுக்காக இடைவிடாமல் ஜெபம்பண்ணுகிறோம்; நீங்கள் எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும் அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும், [10]சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும், [11]சந்தோஷத்தோடே கூடிய எல்லாப் பொறுமையும் நீடியசாந்தமும் உண்டாவதற்கு, மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும், உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம். [12]ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினவரும், [13]இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்.*

***வெளிப்படுத்தின விசேஷம் 22:20*** *இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர்: மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்றார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்.*

## 111. மூன்றாவது விண்ணப்பத்தின் மூலம் கிறிஸ்தவர்கள் எதற்காக ஜெபிக்கிறார்கள்?

*‘பரமண்டலத்திலே செய்யப்படுவதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக’ என்ற மூன்றாவது விண்ணப்பத்தின் மூலம், பரலோகத்திலே உள்ள தூதர்களைப்போல கிறிஸ்தவர்களும் கிருபையினால் அவருடைய சித்தத்தை அறிந்துகொள்ளும் வல்லமையைப் பெறவும், அதை அறியும் சித்தங்கொள்ளவும், அதற்குக் கீழ்ப்படியவும், அனைத்துக் காரியங்களிலும் அதற்குத் தம்மை ஒப்புக்கொடுக்கவும் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்று ஜெபிக்கிறார்கள்.*

***மத்தேயு 6:10*** *உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக.*

***சங்கீதம் 119:34-36*** *[34]எனக்கு உணர்வைத் தாரும்; அப்பொழுது நான் உமது வேதத்தைப் பற்றிக்கொண்டு, என் முழு இருதயத்தோடும், அதைக் கைக்கொள்ளுவேன். [35]உமது கற்பனைகளின் பாதையில் என்னை நடத்தும்; நான் அதில் பிரியமாயிருக்கிறேன். [36]என் இருதயம் பொருளாசையைச் சாராமல், உமது சாட்சிகளைச் சாரும்படி செய்யும்.*

***யோபு 1:21*** *நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன்; நிர்வாணியாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன்; கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான்.*

***அப்போஸ்தலர் 21:14*** *அவன் சம்மதியாதபடியினாலே, கர்த்தருடைய சித்தம் ஆகக்கடவதென்று அமர்ந்திருந்தோம்.*

***சங்கீதம் 103:20-21*** *[20]கர்த்தருடைய வார்த்தையைக்கேட்டு, அவருடைய வசனத்தின்படி செய்கிற பலத்த சவுரியவான்களாகிய அவருடைய தூதர்களே, அவரை ஸ்தோத்திரியுங்கள். [21]கர்த்தருக்குப் பிரியமானதைச்செய்து, அவர் பணிவிடைக்காரராயிருக்கிற அவருடைய சர்வசேனைகளே, அவரை ஸ்தோத்திரியுங்கள்.*

## 112. நான்காவது விண்ணப்பத்தின் மூலம் கிறிஸ்தவர்கள் எதற்காக ஜெபிக்கிறார்கள்?

*‘அன்றன்றுள்ள ஆகாரத்தை எங்களுக்கு இன்று தாரும்’ என்ற நான்காவது விண்ணப்பத்தின் மூலம் கிறிஸ்தவர்கள் தேவனுடைய இலவசமான ஈவாக இவ்வுலக வாழ்க்கையின் நல்ல விஷயங்களில் தேவையான பங்கைப் பெற்றுக்கொண்டு அவருடைய ஆசீர்வாதத்தை அவற்றின் மூலம் அனுபவிக்க வேண்டுமென்று ஜெபிக்கிறார்கள்.*

***மத்தேயு 6:11*** *எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்.*

***நீதிமொழிகள் 30:8-9*** *[8]மாயையையும் பொய்வசனிப்பையும் எனக்குத் தூரப்படுத்தும்; தரித்திரத்தையும் ஐசுவரியத்தையும் எனக்குக் கொடாதிருப்பீராக. [9]நான் பரிபூரணம் அடைகிறதினால் மறுதலித்து, கர்த்தர் யார் என்று சொல்லாதபடிக்கும்; தரித்திரப்படு கிறதினால் திருடி, என் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காத*

*படிக்கும், என் படியை எனக்கு அளந்து என்னைப் போஷித்தருளும்.*

**1 தீமோத்தேயு** *4:4–5* [4]*தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது; ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல.* [5]*அது தேவவசனத்தினாலும் ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படும்.*

***சங்கீதம் 90:17*** *எங்கள் தேவனாகிய ஆண்டவரின் பிரியம் எங்கள் மேல் இருப்பதாக; எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தும்; ஆம், எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தியருளும்.*

## 113. ஐந்தாவது விண்ணப்பத்தின் மூலம் கிறிஸ்தவர்கள் எதற்காக ஜெபிக்கிறார்கள்?

*'எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை மன்னியும்' என்ற ஐந்தாவது விண்ணப்பத்தின் மூலம் கிறிஸ்துவின் நிமித்தமாக கர்த்தர் தங்களுடைய பாவங்கள் அனைத்தையும் மன்னிக்க வேண்டும் என்று கிறிஸ்தவர்கள் ஜெபிக்கிறார்கள். கர்த்தருடைய கிருபையின் காரணமாக மற்றவர்களை மன்னிக்கும் இருதயத்தை அவர்கள் அடைந்திருப்பது இவ்வாறாக ஜெபிக்கும்படி அவர்களை ஊக்குவிக்கிறது.*

***மத்தேயு 6:12*** *எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.*

***சங்கீதம் 51:1-2, 7, 9*** [1]*தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும்.* [2]*என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும்.*

[7]*நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும், அப்பொழுது நான் சுத்தமாவேன்; என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன்.*

[9]*என் பாவங்களைப் பாராதபடிக்கு நீர் உமது முகத்தை மறைத்து, என் அக்கிரமங்களையெல்லாம் நீக்கியருளும்.*

***தானியேல் 9:17–19*** [17]*இப்போதும் எங்கள் தேவனே, நீர் உமது அடியானுடைய விண்ணப்பத்தையும் அவனுடைய கெஞ்சுதலையும்*

*கேட்டு, பாழாய்க் கிடக்கிற உம்முடைய பரிசுத்த ஸ்தலத்தின்மேல் ஆண்டவரினிமித்தம் உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும்.*
[18]*என் தேவனே, உம்முடைய செவியைச் சாய்த்துக் கேட்டருளும்; உம்முடைய கண்களைத் திறந்து, எங்கள் பாழிடங்களையும், உமது நாமம் தரிக்கப்பட்டிருக்கிற நகரத்தையும் பார்த்தருளும்; நாங்கள் எங்கள் நீதிகளை அல்ல, உம்முடைய மிகுந்த இரக்கங்களையே நம்பி, எங்கள் விண்ணப்பங்களை உமக்கு முன்பாகச் செலுத்துகிறோம்.*
[19]*ஆண்டவரே, கேளும், ஆண்டவரே மன்னியும், ஆண்டவரே கவனியும்; என் தேவனே, உம்முடைய நிமித்தமாக அதைத் தாமதியாமல் செய்யும்; உம்முடைய நகரத்துக்கும் உம்முடைய ஜனத்துக்கும் உம்முடைய நாமம் தரிக்கப்பட்டிருக்கிறதே என்றேன்.*

***லூக்கா 11:4*** *எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்; நாங்களும் எங்களிடத்தில் கடன்பட்ட எவனுக்கும் மன்னிக்கிறோமே; எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், என்று சொல்லுங்கள் என்றார்.*

***மத்தேயு 18:35*** *நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார்.*

## 114. ஆறாவது விண்ணப்பத்தின் மூலம் கிறிஸ்தவர்கள் எதற்காக ஜெபிக்கிறார்கள்?

*'எங்களை சோதனையில் பிரவேசிக்கப்பண்ணாதேயும், தீமையினின்று எங்களைக் காத்துக்கொள்ளும்' என்ற ஆறாவது விண்ணப்பத்தின் மூலமாக தாம் பாவம் செய்யும்படி சோதிக்கப்படாதபடி கர்த்தர் தங்களைப் பாதுகாக்க வேண்டும் அல்லது தாம் சோதிக்கப்படும்போது ஆதரவையும் விடுதலையையும் தர வேண்டும் என்று கிறிஸ்தவர்கள் ஜெபிக்கிறார்கள்.*

***மத்தேயு 6:13*** *எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்.*

***மத்தேயு 26:41*** *நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்.*

***சங்கீதம் 19:13*** *துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை*

*விலக்கிக்காரும், அவைகள் என்னை ஆண்டுகொள்ள ஒட்டாதிரும்; அப்பொழுது நான் உத்தமனாகி, பெரும்பாதகத்துக்கு நீங்கலாயிருப்பேன்.*

***சங்கீதம் 51:10, 12*** *[10]தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்.*

*[12]உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து, உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்.*

### 115. கர்த்தருடைய ஜெபத்தின் முடிவுரை அவருடைய சீடர்களுக்கு எதைப் போதிக்கிறது?

*'இராஜ்ஜியமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்' என்ற கர்த்தருடைய ஜெபத்தின் முடிவுரை அவருடைய சீடர்கள் தேவனிடத்தில் இருந்து மட்டுமே ஜெபத்தில் தேறுதலைப் பெறவேண்டும் என்றும், இராஜ்ஜியமும், வல்லமையும், மகிமையும் அவருக்கே உரித்தானவைகள் என்று ஜெபத்தின் மூலம் அவரைத் துதிக்க வேண்டும் என்றும், அவர்களுடைய விருப்பத்தினதும், நிச்சயத்தினதும் சாட்சியின் காரணமாக அவர்களுடைய ஜெபங்கள் கேட்கப்படும்படியாக 'ஆமென்' என்று சொல்லும்படியும் போதிக்கின்றது.*

***மத்தேயு 6:13*** *எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென், என்பதே.*

***தானியேல் 9:4, 7–9, 16–19*** *[4]என் தேவனாகிய கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணி, பாவஅறிக்கை செய்து: ஆ ஆண்டவரே, உம்மில் அன்புகூர்ந்து, உம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு உடன்படிக்கையையும் கிருபையையும் காக்கிற மகத்துவமும் பயங்கரமுமான தேவனே.*

*[7]ஆண்டவரே, நீதி உமக்கே உரியது; உமக்கு விரோதமாகச் செய்த துரோகத்தினிமித்தம் உம்மாலே சமீபமும் தூரமுமான எல்லா தேசங்களிலும் துரத்தப்பட்டிருக்கிற யூதமனுஷரும் எருசலேமின் குடிகளும் சகல இஸ்ரவேலருமாகிய நாங்கள் இந்நாளில்*

இருக்கிறபடியே, வெட்கம் எங்களுக்கே உரியது. [8]ஆண்டவரே,
உமக்கு விரோதமாகப் பாவஞ்செய்தபடியால், நாங்களும்
எங்கள் ராஜாக்களும் எங்கள் பிரபுக்களும் எங்கள் பிதாக்களும்
வெட்கத்துக்குரியவர்களானோம். [9]அவருக்கு விரோதமாக
நாங்கள் கலகம்பண்ணி, அவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய
ஊழியக்காரரைக்கொண்டு எங்களுக்கு முன்பாகவைத்த
அவருடைய நியாயப்பிரமாணங்களின்படி நடக்கத்தக்கதாக
நாங்கள் அவருடைய சத்தத்துக்குச் செவிகொடாமற்போனோம்.

[16]ஆண்டவரே, உம்முடைய சர்வநீதியின்படியே, உமது கோபமும்
உமது உக்கிரமும் உம்முடைய பரிசுத்த பர்வதமாகிய எருசலேம்
என்னும் உம்முடைய நகரத்தை விட்டுத் திரும்பும்படி
செய்யும்; எங்கள் பாவங்களினாலும் எங்கள் பிதாக்களின்
அக்கிரமங்களினாலும் எருசலேமும் உம்முடைய ஜனமாகிய
நாங்களும் எங்கள் சுற்றுப்புறத்தார் யாவருக்கும் நிந்தையானோம்.
[17]இப்போதும் எங்கள் தேவனே, நீர் உமது அடியானுடைய
விண்ணப்பத்தையும் அவனுடைய கெஞ்சுதலையும் கேட்டு,
பாழாய்க் கிடக்கிற உம்முடைய பரிசுத்த ஸ்தலத்தின்மேல்
ஆண்டவரினிமித்தம் உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும்.
[18]என் தேவனே, உம்முடைய செவியைச் சாய்த்துக் கேட்டருளும்;
உம்முடைய கண்களைத் திறந்து, எங்கள் பாழிடங்களையும், உமது
நாமம் தரிக்கப்பட்டிருக்கிற நகரத்தையும் பார்த்தருளும்; நாங்கள்
எங்கள் நீதிகளை அல்ல, உம்முடைய மிகுந்த இரக்கங்களையே நம்பி,
எங்கள் விண்ணப்பங்களை உமக்கு முன்பாகச் செலுத்துகிறோம்.
[19]ஆண்டவரே, கேளும், ஆண்டவரே மன்னியும், ஆண்டவரே
கவனியும்; என் தேவனே, உம்முடைய நிமித்தமாக அதைத்
தாமதியாமல் செய்யும்; உம்முடைய நகரத்துக்கும் உம்முடைய
ஜனத்துக்கும் உம்முடைய நாமம் தரிக்கப்பட்டிருக்கிறதே என்றேன்.

**1 நாளாகமம் 29:10–13** [10]ஆகையால் தாவீது சபை அனைத்தின்
கண்களுக்கு முன்பாகவும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்திச்
சொன்னது: எங்கள் தகப்பனாகிய இஸ்ரவேலின் தேவனாகிய
கர்த்தாவே, சதாகாலங்களிலும் தேவரீருக்கு ஸ்தோத்திரம்
உண்டாவதாக. [11]கர்த்தாவே, மாட்சிமையும் வல்லமையும் மகிமையும்
ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள்; வானத்திலும்
பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள்; கர்த்தாவே,
ராஜ்யமும் உம்முடையது; தேவரீர் எல்லாருக்கும் தலைவராய்
உயர்ந்திருக்கிறீர். [12]ஐசுவரியமும் கனமும் உம்மாலே வருகிறது;

*தேவரீர் எல்லாவற்றையும் ஆளுகிறவர்; உம்முடைய கரத்திலே சத்துவமும் வல்லமையும் உண்டு; எவரையும் மேன்மைப்படுத்தவும் பலப்படுத்தவும் உம்முடைய கரத்தினால் ஆகும். [13]இப்போதும் எங்கள் தேவனே, நாங்கள் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, உமது மகிமையுள்ள நாமத்தைத் துதிக்கிறோம்.*

***வெளிப்படுத்தின விசேஷம் 4:11*** *கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர்; நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது என்றார்கள்.*

***1 கொரிந்தியர் 14:16*** *இல்லாவிட்டால், நீ ஆவியோடு ஸ்தோத்திரம் பண்ணும்போது, கல்லாதவன் உன் ஸ்தோத்திரத்திற்கு ஆமென் என்று எப்படிச் சொல்லுவான்? நீ பேசுகிறது இன்னதென்று அவன் அறியானே.*

***வெளிப்படுத்தின விசேஷம் 22:20*** *இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர்: மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்றார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்.*